AR
535

திருக்கழுக்குன்றம்

T.7337.

ஆசிரியர்
எஸ். ஜெயந்தி

பதிப்பாசிரியர்

முனைவர் சீதாராம் குருமூர்த்தி, இஆப,
முதன்மை ஆணையர்

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை - 600 008
2008

T. 7337.

சுவடிகள் நூலகம் மற்றும்
- 4 SEP 2012
சென்னை-5.

T. 7337.

ஞானாலயா கீர்த்திசைச் சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையம்
- 4 SEP 2012
சென்னை-5.

திருக்கழுக்குன்றம்

ஆசிரியர் :
எஸ். ஜெயந்தி

பதிப்பாசிரியர் :
முனைவர் சீதாராம் குருமூர்த்தி இஆப.,
முதன்மை ஆணையர்

வெளியீடு:
தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
சென்னை - 600 008

2008

BIBLIOGRAPHICAL DATA

Title	:	TIRUKAZHUKKUNDRAM
Author	:	S. JAYANTHI
Copy right	:	T.N. State Dept. of Archaeology
Subject	:	History
Language	:	Tamil
Edition	:	First
Publication No	:	193/ 2008
No. of Pages	:	vi + 150
Type Point	:	11 pt
Paper used	:	80 GSM Maplitho
Typesetter	:	Pavai Printers (P) Ltd., #6 (142), Jani Jan Khan Road, Royapettah, Chennai - 600 014. Ph: 28482441, 28482973
Printer	:	TAMCOS Royapettah, Chennai - 600 014.
Publisher	:	State Dept. of Archaeology Tamil Valarchi Valaagam Halls Road, Egmore, Chennai - 600 008.
Price	:	Rs. 44/-

பதிப்புரை

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை தமிழ்நாட்டின் பண்பாட்டுக் கூறுகளை அனைவரும் அறியும் வண்ணம், தொல்லியல் அகழாய்வுகள், கல்வெட்டுகள், மாவட்ட தொல்லியல் கையேடுகள், அகழ்வைப்பகக் கையேடுகள் எனப் பல்வகை நூல்களை வெளியிட்டு வருகின்றது.

இத்துறையின் கல்வெட்டுப் பயிற்சி நிறுவனத்தில் நடத்தப் பெறும் ஓராண்டு முதுகலைப் பட்டயப் பயிற்சி மாணவர்கள், பயிற்சியின் நிறைவில் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த பகுதிகளை ஆய்வு செய்து ஆய்வு நூலாகச் சமர்ப்பிக்கின்றனர். அதனை நூலாக வெளியிட்டு வரும் பணியினையும் இத்துறை மேற்கொண்டு வருகிறது.

தொண்டை நாடு சான்றோர் உடைத்து என்ற முதுமொழிக் கொப்ப, பல்லவர்களின் தலைநகரமாகத் திகழ்ந்த காஞ்சிபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள திருக்கழுக்குன்றம் என்ற ஊரினைப் பற்றிய ஆய்வாக இந்நூல் அமைகிறது.

இந்நூலில் 1977-78-ம் ஆண்டு கல்வெட்டுப் பயிற்சி நிறுவன மாணவியான எஸ். ஜெயந்தி, திருக்கழுக்குன்றத்தினைப் பற்றிய பல வரலாற்றுச் செய்திகளைத் தொகுத்துத் தந்துள்ளார். கிடைத்துள்ளவற்றுள், தமிழகக் கட்டடக்கலையின் தொடக்கமான பல்லவர் காலக் குடவரைக் கோயிலைப் பற்றியும் அதன் தொன்மை யினைப் பற்றியும் விவரித்திருப்பது இந்நூலின் சிறப்பம்சமாகும்.

திருக்கழுக்குன்றத்தில் அமைந்துள்ள கோயில்கள் பற்றிய பல வரலாற்றுச் செய்திகள் மற்றும் கல்வெட்டுகள் குறித்த ஆய்வுகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இவருக்கு எனது வாழ்த்துக்கள்.

இந்நூலின் பதிப்புப் பணியினை மேற்கொண்ட இத்துறையின் சிறப்பு நிலைக் கல்வெட்டாய்வாளர், திரு. கி.சு. சம்பத், நிழற்படங்கள் எடுத்து நூலில் வெளியிட உதவிய திரு. மு.த. ஸ்ரீதரன் நிழற்படம் எடுப்பவர் ஆகியோருக்கு எனது பாராட்டுக்கள்.

திருக்கழுக்குன்றக் கோயில்களில் நிழற்படங்கள் எடுக்க அனுமதியளித்த இந்து சமய அறநிலையத்துறை நிர்வாக அலுவலர் திரு. மறைமலை அவர்களுக்கு நன்றி.

இந்நூலை வெளியிட தேவையான நிதியினை நல்கிய தமிழ்நாடு அரசுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலினை அனைத்துத் தரப்பு மக்களும், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியரும் படித்துப் பயன்பெற எனது நல்வாழ்த்துக்கள்.

சீதாராம் குருமூர்த்தி
முதன்மை ஆணையர்

13-12-2007
சென்னை

பொருளடக்கம்

		பக்கம்
	பதிப்புரை	iii
1.	ஊரின் அமைப்பு	1
2.	திருக்கழுக்குன்றம் - கல்வெட்டுகள்	5
3.	வரலாற்றில் திருக்கழுக்குன்றம்	24
4.	இலக்கியங்கள்	33
5.	திருக்கழுக்குன்றம் - கட்டடக் கலை	44
6.	குடைவரைக் கோயில்	47
7.	வேதகிரீஸ்வரர் கோயில்	53
8.	பக்தவச்சலேஸ்வரர் கோயில்	61
9.	ஆபரணக் கொட்டடி	71
10.	திரிபுர சுந்தரி அம்மன்	81
11.	சோமாஸ்கந்தர்	84
12.	மாணிக்கவாசகர்	89
13.	கோபுரங்கள்	90
14.	மதில்கள்	95
15.	தீர்த்தங்கள்	101
16.	பிற கோயில்கள்	106
17.	செப்புத் திருமேனிகள்	111
18.	ஓவியங்கள்	117
19.	உற்சவங்கள்	122
20.	ஓலைச்சுவடிகள்	127
21.	சமுதாயம்	132
22.	பொதுச் செய்திகள்	139

ஊர் அமைப்பு

திருக்கழுக்குன்றம் செங்கல்பட்டுக்குத் தென்கிழக்கில் ஒன்பது கல் தொலைவிலும் சென்னை மாநகரத்தினின்று நாற்பத்து ஐந்து கல்தொலைவிலும், பல்லவர் துறைமுகமான மாமல்லபுரத் தினின்று ஆறுகல் தொலைவிலும் உள்ளது. திருக்கழுக்குன்றம் சைவ சமய குரவர்கள் நால்வராலும் பாடப்பட்ட திருத்தலம். இவ்வூர் கி.பி. 3-ம் நூற்றாண்டிலிருந்து வழிபாட்டுத் தலமாக இருந்ததாக வரலாற்று ஆதாரங்கள் கூறுகின்றன. படிவுப் பாறை களால் நாற்புறமும் சூழப்பட்ட ஒரு சிற்றூர். வளமையான சமவெளிப் பிரதேசத்தில் அமைந்துள்ளது. 80^{0} 3' அட்ச ரேகையிலும் 12^{0} 36' தீர்க்க ரேகையிலும் அமைந்துள்ளது.

உலகப் புகழ்பெற்ற மாமல்லபுரத்துக்கு மிக அருகில் இருப் பதால் வெளிநாட்டோரும் வடநாட்டுப் பயணிகளும் இக் கோயி லுக்கு வந்த வண்ணம் இருக்கின்றனர். வெளிநாட்டார் இக் கோயிலின் அழகை ரசிக்கும் அளவுக்கு நம் நாட்டார் இதன் பெருமையை உணரவில்லை எனக் கூறும் அளவுக்கு அவர்கள் எண்ணிக்கை உள்ளது. மாமல்லபுரம், திருக்கழுக்குன்றம் ஆகிய இரு ஊர்களையும் 'இரட்டை ஊர்கள்' என கூறும் அளவுக்கு அவை இரண்டும் என்றும் இணைத்தே கூறப்படுகின்றன. இங்கு ஊரின் நடுவிலும், மலைநடுவிலும், மலை உச்சியிலுமாக 3 கோயில்கள் சிறப்பாக உள்ளன. தேரோடும் அகலமான வீதிகளும் உயர்ந்த கோபுரங்களும் நான்மாட வீதிகளும் இவ்வூரின் அழகை பன்மடங்கு அதிகப்படுத்துகின்றன. ஊரின் நாற்புறங்களிலும் உள்ள நான்கு கோபுரங்களைச் சுற்றியே நான்கு வீதிகளை தன்னகத்தே கொண்டுள்ளது. ஊரின் எல்லா பகுதிகளிலும் வீடுகள் உள்ளன. சாதிகளுக்கேற்றபடி அக்ரஹாரம், குயவர் தெரு, வண்ணார் தெரு என பல தெருக்கள் உண்டு.

ஊரும் பேரும் :

வேதங்கள் நான்புறமும் மலை அரணாக நிற்க ஆங்கே கழுகுகள் தொழுது நிற்க திரு என்னும் அடைமொழியுடன்

திருக்கழுக்குன்றம் என வழங்கப்படுகின்றது. பக்ஷிதீர்த்தம் என்றும் அழைக்கப்படுகிறது.

நால்வர் பாடிப் புகழ்ந்த இடம் :

அருணகிரி, பட்டினத்தார், சேக்கிழார் ஆகியோர் பாடிய இடம். அந்தகக்கவி வீரராகவ முதலியார் தலப்புராணம் எழுதிய இடம். சைவ வரலாற்றில் சிறப்பானதொரு இடத்தை பெற்ற சிற்றூர். பசியென்று வந்தோருக்கு அன்னதானம் அளித்த இடம். வேதமே நிலையாக நிற்பது தவிர நாற்புறமும் வேத பாடசாலைகள் இருந்த இடம். மேற்கூறிய எல்லா பெருமைகளும் தற்போது இல்லாவிடினும் தன் பெருமைகள் அனைத்தையும் ஒருங்கே இழந்துவிடவில்லை. பழம் பெருமைகளை இன்றும் பறைசாற்றுகின்றது.

வேறு பெயர்கள் :

உலகிற்கு துன்பம் விளைவித்த அரக்கர்களை எல்லாம் கொன்ற கோடி ருத்ரர்கள் அப்பாவம் நீங்க இங்கு வந்து இறைவனை பூசித்ததால் ருத்ரகோடி ஷேத்ரம் எனவும், நந்திதேவர் பூசித்து பேறு பெற்றதால் நந்திபுரி என்றும் இந்திரன் சிவனை தொழுததால் இந்திரபுரி என்றும், பிருகு முனிவர் மனைவியைக் கொன்ற பாவமும் அம்முனிவர் இட்டசாபமும் நீங்க திருமால் இங்கு தவமேற்றதால் நாராயணபுரம் எனவும், பிரமன் பூசை செய்ததால் பிரமபுரி எனவும் சூரியனை தொழுததால் தினகரபுரி எனவும், பாணினி முனிவரால் இயற்றப்பட்ட வியாகர்ணம் கேட்டும் தெளிவுறாத முனிவர்கள் தெளிவு பெற இத்தலத்தில் வழிபட முனிகணபுரி எனவும் மற்றும் சிவபுரம், கதலிவனம், கழுகாசலம், கங்காசலம், உருத்திரகிரி, மறைக்காடு, வேத பொற்றை, சுருதி மலை, திருமலை, வேதநாராயணபுரம் போன்ற பெயர்களும் உண்டு.

ஊரமைப்பு:

ஊர் பாறை பகுதியிலிருந்தாலும் தண்ணீர் பஞ்சம் இல்லை. ஏரிகள் நிறைந்த செங்கல்பட்டுக்கு அருகில் இருப்பதால் ஊற்றுகள் அதிகமாக உள்ளன. தீர்த்தங்களும் குளங்களும் ஏராளமாக உள்ளன. பாலாற்றிலிருந்து குடி தண்ணீர் கிடைக்கிறது. நான்மாட வீதிகளையொட்டி வீடுகளும் கோயிலை ஒட்டிய கடைவீதியும் உள்ளன. காவல் நிலையம், பஞ்சாயத்து நிலையம், ஊராட்சி ஒன்றியம் போன்றவை உள்ளன. பள்ளிகள், சத்திரங்கள், மருத்துவ நிலையங்கள் போன்றவைகளும் உள்ளன. ஊரின் நடுநாயகமாக விளங்குவது வேதகிரிஸ்வரர் கோயிலாகும். இவ்வூரில் அதிகமான வெப்பமும் மிதமான குளிரும் உண்டு. தென் மேற்கு பருவக்காற்றால் சிறிது மழையும் வடகிழக்கு பருவக்காற்றால் அதிக மழையும் உண்டு. எனவே வளமான பிரதேசத்திலேயே அமைந்துள்ளது. இவ்வூரை அடுத்து கீரப்பாக்கம், நென்மேலி, ஓரகடம், திருவடிசூலம், சதுரங்கப்பட்டினம், வாயலூர் ஆகிய சிற்றூர்கள் உள்ளன.

மக்களும் தொழில்களும் :

இவ்வூரில் அதிகமான அளவில் வன்னியரும் செங்குந்தரும் வாழ்கின்றனர். விவசாயமே முக்கிய தொழில். நெல், கேழ்வரகு, எண்ணெய் வித்துக்கள், காய்கறிகள் போன்றவைகள் பயிரிடப்படுகின்றன. வருடத்தில் இருமுறை அறுவடை நடைபெறுகின்றது. மற்றொரு முக்கியமான தொழில் நெசவு. மிக அதிகமான அளவில் கைக்கோளர் எனப்படும் நெசவாளிகள் கோயிலை ஒட்டியே வாழுகின்றனர். அழகான கைத்தறி துணிகள் நெய்யப்பட்டு வெளியிடங்களுக்கு அனுப்பப்படுகின்றன. பானை செய்தலும் பாய் முடைதலும் மற்ற முக்கிய தொழில்கள். செய்யும் தொழிலுக்கேற்ப தனித்தனியாக வசிக்கின்றனர். இவ்வூரில் அந்தணர்கள் மிக குறைந்த அளவே உள்ளனர். அவர்களில் பெரும்பாலோர் கோயிலில் பூசை செய்யும் தொழிலே மேற்கொண்டுள்ளனர்.

சிறப்புச் செய்திகள் :

'தக்ஷிண கைலாசம்' என்றும் 'தக்ஷிணமேரு' என்றும் வழங்கப்படுகின்றது. வேதங்களே மலையாக நிற்க மலை உச்சியில் இறைவன் இருக்க முக்கோடி தேவர்களும் பூசித்து பேறு பெற்றதால் கைலாசம் போன்ற ஒப்பற்ற பெருமை உடையது. இறைவனால் சபிக்கப்பட்ட இரு முனிவர்கள் தன் சாபம் நீங்கப் பெற தினமும் கழுகு வடிவில் வந்து உணவு உண்டு இறைவனை தொழுது செல்லும் காட்சியை உலகத்தோர் கண்டு வியக்கின்றனர். திருக்கழுக்குன்றம் ஒரு சிறந்த மலை வாசஸ்தலம். எந்த தோல்

வியாதி உள்ளவரும் இம்மலையை ஒரு மண்டலம் (48 நாள்) சுற்றி வந்தால் தன் நோய் நீங்கப் பெறுவர். உஷ்ணத்தை தணிக்கும் சஞ்சீவி காற்றும் சிறந்த மூலிகைகளும் பச்சிலைகளும் இம்மலையில் உள்ளன என்பது கருத்து. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஊரின் கண் உள்ள சங்கு தீர்த்தத்தினின்று வலம்புரி சங்கு பிறக்கின்றது. இந்திரன் மலை மீதுள்ள இறைவனை பூசித்ததால் மலைமீதுள்ள இடி தாங்கியில் பனிரெண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை விழுகின்றது. இடி விழுந்த அறிகுறி தோன்றினாலும் கட்டடம் அதனால் ஒன்றும் சேதமடையவில்லை. சங்க காலத்தில் தொண்டைமான் இளந்திரையன் போன்ற மன்னர்களின் ஆட்சியில் திருக்கழுக்குன்றம் இருந்திருக்கக் கூடும்.

திருக்கழுக்குன்றம் - கல்வெட்டுகள்

கல்வெட்டு என்பது கல்லில் பொறிக்கப்பட்ட எழுத்துக்களையும் செய்திகளையும் குறிக்கும். கல்லில் நிலையாக எழுதி வைத்து பிற்காலத்தோடும் அறியும்படி செய்த அம்மன்னர்களின் நுண்ணறிவை நம்மால் வியக்காமல் இருக்க முடியவில்லை. மற்ற எல்லா ஆதாரங்களை விட கல்வெட்டுகளே நம்பத் தகுந்த ஆதாரங்களாகத் திகழ்கின்றன. கழுக்குன்றக் கோயில் கல்வெட்டுகள் சிலாஸாஸனம் என அழைக்கப்படுகின்றன. ஒரு கல்வெட்டில் பரிவர்த்தன சிலாஸாஸனம் என்ற பெயர் காணப்படுகின்றது. இக்கோயிலில் 110க்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் உள்ளன. இவை தென்னிந்தியக் கல்வெட்டுகள் தொகுதி ஐந்திலும், எபிகிராபிகா இண்டிகா தொகுதி மூன்றிலும், வெளிவந்துள்ளன. கல்வெட்டு ஆண்டு அறிக்கைகள் 1894, 1905, 1911, 1933 லும் வெளியிடப்பட்டுள்ளன. இரங்காச்சாரி தொகுதி ஒன்றிலும், சீவெல் தனது புத்தகத்திலும் வெளியிட்டுள்ளனர். மெக்கன்சியும் சில கல்வெட்டு குறிப்புகளை எழுதி வைத்துள்ளார்.

ஒவ்வொரு கல்வெட்டும் ஒரு முக்கிய உண்மையைக் கூறுகின்றது. வரலாற்று உண்மைகள் பல கூறப்பட்டுள்ளன. பல்லவர், சோழர், பாண்டியர், காடவர், விஜயநகர மன்னர், டச்சுக்காரர் கல்வெட்டுகள் உள்ளன.

கழுக்குன்ற கல்வெட்டுகளில் பல அரசர்களாலும் மக்களாலும் இறைவனுக்கு விளக்கெரிக்க சாவாமூவா பேராடுகள், பசுக்கள், நிலம் கொடுக்கப்பட்டதைக் குறிக்கின்றன. விளக்கெரிக்கும் பொறுப்பு ஆட்டிடையரிடமும், சிவபிராமணர்களிடமும் விடப்பட்டுள்ளதாக அவை கூறுகின்றன. மொத்த கல்வெட்டுகளில் 43 கல்வெட்டுகள் விளக்கு கொடையையே குறிக்கின்றன. விளக்கு கொடுத்த கல்வெட்டுகள் பராந்தகன் காலம் முதல் விஜய நகர மன்னர்கள் காலம் வரை காணப்படுகின்றன.

வரலாற்றுச் செய்திகள் :

முக்கியமான வரலாற்று நிகழ்ச்சிகளை விளக்கும் கல்வெட்டுகள் பல இங்குள்ளன. ஒற்றைக்கல் மண்டபத்திலுள்ள 'வாதாபி

கொண்ட நரசிங்கப் போத்தரசா் ' எனும் கல்வெட்டு தொண்டை மண்டலத்தில் வாதாபி வெற்றியை விளக்கும் ஒரே சான்று. ஆதித்தன் ஆட்சி தொண்டை மண்டலத்தில் பரவியதை விளக்கும் அவனது 27 ம் ஆண்டு கல்வெட்டொன்று இங்குள்ளது. பின்னர் இராஷ்டிர கூட ஆட்சி தமிழகத்தில் பரவியதை இங்குள்ள மூன்றாம் கிருஷ்ணன் இரு கல்வெட்டுகள் விளக்குகின்றன. ராஜாதிராஜன் ஆஹவ மல்லனை வென்ற நிகழ்ச்சியும் இரண்டாம் ராஜேந்திரன் சாளுக்கிய மன்னனை வென்றதும் இக்கால கல்வெட்டுகளில் குறிக்கப் படுகின்றன. முதலாம் குலோத்துங்கன் கல்வெட்டு அவனது ஈழ படையெடுப்பை விளக்குகின்றது. இக்கல்வெட்டு தக்கோல கல்வெட்டு போன்றே உள்ளது. திண்டிவனத்தில் கூறப்படும் அரும்பிக் கிழான் பொன்னம்பலக் கூத்தன் கழுக்குன்ற கல்வெட் டிலும் குறிக்கப்படுகிறான். இதிலிருந்து அவன் இரு ஊர்களுக்கும் படைத் தலைவனாக இருந்திருக்க வேண்டும். கோப்பெருஞ் சிங்கனின் வெற்றிகளை விளக்கும் பாடல் வடிவ கல்வெட்டும் இங்குள்ளது. இவைத் தவிர ஐடாவர்மன் சுந்தரப்பாண்டியன் கல்வெட்டு தொண்டை மண்டலத்தில் பரவிய நிகழ்ச்சியும் பின் விஜயநகர மன்னர் ஆட்சியை விளக்கும் கல்வெட்டுகளும் இங்குள்ளன. டச்சுக்காரரின் வருகையை விளக்கும் ஆங்கில கல்வெட்டுகள் இங்குள்ளன.

நாட்டுப் பிரிவுகள்:

திருக்கழுக்குன்றம் தொண்டை மண்டலத்தில் அமைந் துள்ளது. தொண்டை மண்டலம் சோழர் காலத்தில் ஜெயங்கொண்ட சோழ மண்டலம் என அழைக்கப்பட்டது.

நரசிம்மவர்மனின் கல்வெட்டு 'களத்தூர் கோட்டத்து திருக்கழுக்குன்றம்' என்று குறிக்கின்றது. இராஜேந்திர சோழன் காலம் முதல் திருக்கழுக்குன்றம் உலகளந்த சோழபுரம் என அழைக்கப்படுகின்றது. 'ஜயங்கொண்ட சோழ மண்டலத்து களத்தூர்க் கோட்டத்து தென்கூற்றுத் திருக்கழுக்குன்றமான உலகளந்த சோழபுரத்து என குறிக்கின்றது. பின்வரும் கல்வெட்டு கள் அனைத்தும் இதையே குறிக்கின்றன. சங்க காலத்திலிருந்தே தொண்டை நாட்டினில் களத்தூர் கோட்டம் இருந்துள்ளது. களத்தூர் கோட்டத்தின் தலைநகரம் திருக்கழுக்குன்றம் 24 கோட்டங்களில் பத்தாவது கோட்டமாகத் திகழ்ந்தது. களத்தூர் கோட்டத்தில் செங்குன்ற நாடு, திருக்கச்சூர், களத்தூர், திருக்கழுக்குன்ற

வளநாடு, திருவடிசூலம், குறும்பறை நாடு, போர்பண்டை போன்ற பல நாடுகள் உள்ளன.

கல்வெட்டில் குறிக்கப்படும் கொடைகள்:

கழுக்குன்ற கல்வெட்டுக்களில் அந்தணர், இடையர், பள்ளி, கைக்கோளர், வேளாளர் போன்ற பலர் அளித்த கொடைகள் குறிக்கப் படுகின்றன. 'எம்மதமும் சம்மதம்' என்ற உயர்ந்த கொள்கை அப்பொழுதே அவர்கள் உணர்ந்திருந்தனர் போலும்.

அந்தணர்:-

சிவபிராமணர்கள் சில கொடைகளை இக்கோயிலுக்கு அளித் துள்ளனர். திரிபுவனச் சக்கரவர்த்திகள் குலோத்துங்க சோழனின் 25 ம் ஆண்டில் மதுராந்தக சதுர்வேதி மங்கலத்தின் வடபகுதி யிலுள்ள கிழமையூர் என்ற கிராமத்தை அவ்வூர் அந்தணர் இருவர் 700 காசுக்கு விற்று அப்பணத்தை ஜெயங்கொண்ட சோழ மண்டல புலார் கோட்டத்து ஞாயிறு நாட்டு தலைவனிடம் கொடுக்க அப்பணம் கழுக்குன்ற இறைவனுக்கு விளக்கெரிக்கப் பயன்படுத்தப்பட்டது. மற்ற இரு கல்வெட்டுகள் திரிபுவனச் சக்ரவர்த்திகள் குலோத்துங்கசோழன், ராசராசசோழன் காலத்தவை. இவை அரிய ஒரு செய்தியை குறிக்கிறது. குலோத்துங்கன் காலத் தில் இக் கோயிலுக்கு விளக்குக் கொடைகளும் நமிநந்தி அடிகள் மடம் கட்ட நிலமும் கொடுக்கப்பட்டுள்ளன. தனது 42-ம் ஆட்சி யாண்டில் வானவன் மாதேவி சதுர்வேதி மங்கலம் எனும் நிலம் கொடுத்ததாகக் கூறிக் கொள்கிறான். மறுகல்வெட்டில் இவனது படைத்தலைவனாக அரும்பிக்கிழான் பொன்னம்பலக் கூத்தன் என்பான் குறிக்கப்படுகிறான். இதே பெயர் திண்டிவனம் கல்வெட்டுகளிலும் இடம்பெறுகின்றது.

விக்ரம சோழன்; இரண்டாம் குலோத்துங்கன், ராஜராஜன், இரண்டாம் ராஜாதிராஜன் ஆகியோரின் விளக்கு, நிலம் கொடை களை விளக்கும் கல்வெட்டுகள் உள்ளன. முதலாம் குலோத்துங்கன் காலம் வரை 'மூலஸ்தான பெருமான்' என அழைக்கப்பட்ட இறைவன் பின்னர் திருக்கழுக்குன்றமுடைய நாயனார் என அழைக்கப்படுகிறார்.

மூன்றாம் குலோத்துங்கன் கால கல்வெட்டுகள் 'திரிபுவன வீரதேவன்' எனத் தொடங்குகின்றன. இவன் காலத்தில் இறை வனுக்கு நிலமும், விளக்கும் பள்ளியறை சுவாமிக்கு நகைகளும்

திருப்புதியீடுப் பட்டிக்கு நிலமும் கொடுக்கப்பட்டுள்ளன. சோழ வம்ச கடைசி மன்னன் மூன்றாம் இராசராசனும் இக்கோயிலுக்கு பல கொடைகள் அளித்துள்ளான்.

பள்ளி :

கழுக்குன்ற கல்வெட்டில் பள்ளிகள் கொடுத்த கொடைகள் பல உள்ளன. இது ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தை குறிக்கும் இம்மாதிரியான கல்வெட்டுகள் விக்ரம சோழன் காலத்தில் தான் அதிகமாக உள்ளன. விக்ரமசோழனின் 9-ம் ஆட்சியாண்டில் குறுமுகை எனும் ஊரைச் சார்ந்த பள்ளி ஒருவன் விளக்கெரித்த தாகக் கூறும் கல்வெட்டு இங்குள்ளது. 14ம் ஆட்சியாண்டில் மதுராந்தகத்தின் தெற்கிலுள்ள என்றத்தூர் கம்பன் விக்ரமாதித்தன் கடக்கன் கொண்டான் எனும் பள்ளி கோயிலுக்கு கொடை கொடுத் துள்ள கல்வெட்டு இக்கோயிலிலுள்ளது.

அதே ஆண்டில் கம்பன் பள்ளிகள் மாணிக்கம் எனும் பள்ளி ஒருவன் இக்கோயிலில் விளக்கெரிக்க பசுக்கள் கொடுத்துள்ளான். 15ம் ஆட்சியாண்டில் கொடுவூர் பள்ளி ஒருவன் திருக்கழுக்குன்ற முடைய நாயனர் கோயிலில் விளக்கெரித்தான்.

குலோத்துங்க சோழன் காலத்திலும் இம்மாதிரியான கல் வெட்டுகள் காணப்படுகின்றன. ஒய்மாநாட்டு உய்ய வந்தான் மண்டையன் எனும் பள்ளி ஒருவன் விளக்கெரிக்க ஆடுகள் கொடுத்தான் எனும் செய்தி பெறப்படுகின்றது.

கூடார்பாக்கம் எழுவன் வஞ்சி முத்தரையன் என்பவன் அறியாமல் ஒருவனை அம்பெறிந்த கொல்ல அப்பாவம் தீர்க்க ஒரு விளக்கெரித்தான். இருவரும் ஒன்றாக வேட்டைக்குச் சென்ற தால் மிருகம் என அறிந்து கொன்றான். மற்றொரு கல்வெட்டு ஒய்மா நாட்டு எருவையூர் பள்ளி ஒருவன் விளக்கெரிக்க அப் பொறுப்பு நந்திபுரம் (அ) அதிராஜேந்திர நல்லூர் ஆட்டு இடைய னிடம் ஒப்படைக்கப்பட்டது.

வேளாளர் :

விக்ரம சோழனின் 4ம் ஆட்சியாண்டில் செம்பூர் கோட்டத்து பட்டின நாட்டு பலம்பட்டின வேளாளன் ஒருவன் விளக்கெரித் தான். ராசகேசரி குலோத்துங்கனின் 24ம் ஆண்டில் ஆமுர்

கோட்டத்து மாண்டூர் நாட்டு செம்பியன் என்ற கிராமத்தைச் சார்ந்த வேளாளன் ஒருவன் இறைவனுக்கு விளக்கெரிக்க கீழக்கந்தை எனும் கிராமத்தை அளித்தான்.

கைக்கோளர்:

விஜயநகரமன்னன் கம்பண்ண உடையாரின் கல்வெட் டொன்று ஆனந்த வருடம் புரட்டாதி தினத்தில் ஒரு குறிப்பிட்ட வாடகையை கைக்கோளர் மீது இட்டதைக் குறிக்கிறது. இவ்வரிக்கு காட்டுக் குத்தகை எனப்பெயர். இதன்படி கைக்கோளர்கள் வருடத் திற்கு 70 பணம் செலுத்த வேண்டும். திருக்கழுக்குன்றத்தி னின்று துணிகளை எடுத்துச் செல்லும் போதும் பட்டினத்தினுள் துணிகளை கொண்டு வரும் பொழுதும் வரி செலுத்த வேண்டும்.

இங்ஙனம் திருக்கழுக்குன்ற கல்வெட்டுகளில் பிராமணர்கள், இடையர், பள்ளி, கைக்கோளர் ஆகியோர் குறிக்கப்பட்டுள்ளனர்.

திருக்கழுக்குன்ற கல்வெட்டு ஒன்றில் **நானாதேசிகள்** என்ற வணிகர் கூட்டம் குறிப்பிடப்படுகின்றது. நானா தேசி, பரதேசி என்ற சிறந்ததொரு வணிகர் குழாம் சோழர் காலத்திலிருந்து சிறந்த இடம் வகிக்கின்றது. பொக்கண்ண உடையாரின் நள வருடத்தில் கற்கடக பக்ஷத்தில் திருவோண தினத்தில் சதுரவாசகப்பட்டினம் நானாதேசிகளும், பரதேசியரும் கோயிலில் கூடி மாசவாரியமாக கோயிலுக்கு நிவந்தமாக பொருள் கொடுக்கவும் தேசவிடங்கப் பெருமாள் கோயிலைப் புதுப்பிக்கவும் முடிவெடுத்தனர் எனக் கூறுகின்றது. இந்த நானாதேசிகள் எனும் வணிகர் கூட்டம் பற்றி பிரான் மலை கல்வெட்டு கூறுகின்றது.

அரசனின் ஆட்சியில் அரசனின் எதேச்சதிகாரத்தைத் தடுக்க இந்த நானாதேசிகள் எனும் வணிகர் கூட்டம் பயன்படுத்தப் பட்டது. நானாதேசிகள் என்ற வணிகக் கூட்டம் குறிப்பிட்ட அமைப்பையும் இருப்பிடத்தையும் கொண்டு குறிப்பிட்ட சில பணி களை செய்து வந்தது. அரசனோ அல்லது அரசாங்கமோ அவசியம் இல்லாத போது அதன் அலுவல்களில் தலையிடவில்லை. தமிழகத்தில் இவர்கள் மொழிவாரியாகப் பிரிந்திருந்தனர். இவ் வுண்மை கன்னட மொழியில் நானாதேசிகள் என்று வரும் குறிப்பி னின்று புலனாகிறது. இவர்கள் வாசுதேவர், மூலபத்ரர், தேவி போன்ற தெய்வங்களை வழிபட்டனர். இவர்கள் பாதமார்க்க,

ஜலமார்க்கமாக ஆறு கண்டங்களையும் விஜயம் செய்தனர். யானைகள், குதிரைகள், இந்திர நீலம், சந்திர காந்தம், முத்து , வைடூரியம், புஷ்பராகம், மரகதம் என்ற நானாவஸ்த்துக்களையும் ஏலம், இலவங்கம், அகில், சந்தனம், கற்பூரம், கஸ்தூரி முதலிய சுகந்த திரவியங்களையும் கொண்டு வணிகம் செய்தனர். இவர்கள் சேர நாடு, சோழ, பாண்டிய நாடு, சௌராஷ்டிரம், துனுஷ்டிரம், குரும்பம், காம்போஜம், கவுடம், லாடம், நேபாளம், ஸ்ரீவிஜயம் போன்ற நாடுகளுடன் வணிகம் செய்தனர். இக்குழுவினரைப் பற்றிய புராதனக் கல்வெட்டு புதுக்கோட்டையிலுள்ள முனிச் சந்தைக் கல்வெட்டு. இது கி.பி. 870ல் ஏற்பட்டது. இவ்வாறாக சோழர் காலம் முதல் விஜயநகர மன்னர்கள் காலம் வரை நானா தேசிகன் எனும் வணிகர் கூட்டம் வரலாற்றில் சிறந்த இடம் வகித்தனர். இம்மாதிரியான நானாதேசிகள் கூட்டம் கழுக்குன்றத் திலும் இருந்தது ஈண்டு குறிப்பிடத் தக்கது.

மகாசபை:

திருக்கழுக்குன்ற கல்வெட்டு மகாசபையைப் பற்றி இரு இடங்களில் குறிப்பிடுகின்றது. மகாசபை பெருங்குறி எனவும் குறிக்கின்றது. மகாசபை முதல் பராந்தகன் காலம் முதல் முதலாம் இராஜராஜசோழன் காலம் வரை இருந்தது. மகாசபை பல்வகைப் பட்ட வேலைகளைச் செய்தன. கழுக்குன்ற கல்வெட்டு குறிக்கும், முதல் குலோத்துங்கன் கல்வெட்டு, மகாசபை ஒரு சச்சரவை விவாதம் செய்து அதற்கு தக்க தண்டனை அளித்ததை விளக்கு கின்றது. அதன் முதல் பகுதியில் அரும்பாக்கிழான் பொன்னம் பலக் கூத்தன் எனும் பெயர் குறிப்பிடுகின்றது. இவன் முதலாம் குலோத்துங்கன் படைத்தலைவன். இவன் மகாசபையில் சிறந்த அங்கம் வகித்துள்ளான்.

இம்மாதிரியான மகாசபை ஊரின் பல்வேறு இடங்களில் இருந்தது. மதுராந்தக சதுர்வேதி மங்கலத்து மகாசபை செய்த பணியைக் குறிக்கும் கல்வெட்டு இங்குள்ளது. அரும்பாக்கிழான் பொன்னம்பலக்கூத்தன் என்பான் கோயிலுக்கு நிலம் அளித்தான். அந்நிலத்தின் வருவாயிலிருந்து வரும் வட்டியைக் கொண்டு திருவாதிரை தினத்தன்று இறைவனுக்கு நெய்க்காப்பு செய்வதற்கு 1000 நாழி பசுவின் நெய் அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. இதற்கான பணம் மதுராந்தக சதுர்வேதி மங்கலத்து மகாசபையிடம் அளிக்கப்பட்டு பொறுப்பு கொடுக்கப்பட்டது.

மற்றொரு கல்வெட்டு மதுராந்தக சதுர்வேதி மங்கலத்து மகாசபை காவல்காணியாக ஒரு கிராமத்தை நிர்வகித்ததை விளக்குகிறது. காவல் காணியாக கிராமங்கள் அளிக்கப்படுவது சோழர் காலத்தில் முக்கியமானதொரு அம்சமாகும். இவ்வாறு காவல் காணியாக அளிக்கப்பட்ட கிராமத்தை நிர்வகிக்க மகாசபை ஒரு அலுவலனை நியமித்ததாகக் கூறுகின்றது. இதிலிருந்து மகாசபை பலவிதங்களிலும் அதிகாரம் பெற்றிருந்தது விளங்கு கின்றது.

கல்வெட்டுகள் கூறும் தீர்ப்பு :

அரசன் குற்றங்களுக்கு தண்டனை வழங்கும் துறையில் முழு அதிகாரம் பெற்றிருந்தான். மகாசபையும் கூடி மன்னன் வழங்கிய தீர்ப்பை ஆமோதித்தது. இம்மாதிரியான தீர்ப்புக்களை மன்னன் கோயிலில் கல்வெட்டாக எழுதி வைத்தான். இதன் மூலம் பிற்கால மன்னர்களுக்கு முன்னோடியாகவும் உதவியாக வும் இருக்க வழி செய்தான். கொலைக்குற்றத்தைக் காட்டிலும் திருட்டுக் குற்றத்துக்கு கொடிய தண்டனை விதிக்கப்பட்டது.

இரண்டாம் குலோத்துங்கனின் இம்மாதிரியான இரு கல் வெட்டுகள் இக்கோயிலில் எழுதி வைக்கப்பட்டுள்ளன. இவ்விரு கல்வெட்டுகளும் மன்னனது சிறந்த நீதிபரிபாலனத்தை விளக்கு கின்றது. ஒரு கல்வெட்டு மன்னன் தனது 12-ம் ஆட்சியாண்டில் வழங்கிய தீர்ப்பை விளக்குகின்றது. எழுவன் வஞ்சி முத்தரையன் என்பான் கோயிலுக்கு விளக்கெரித்ததை விளக்குகிறது. மாண்டூர் நாட்டு கூடார் பாக்கம் எழுவன் வஞ்சி முத்தரையன் என்னும் வேடன் ஒருவன் நக்கம்பி பட்டாள இளவரையன் அல்லது செல்வன் (கொடுவூர் நாட்டைச் சார்ந்தவன்) என்பானை மிருகம் என எண்ணி அம்பெறிந்துக் கொன்றான். இருவரும் ஒன்றாக வேட்டையாட சென்றபோது இது நிகழ்ந்தது. அதனால் இறந்த வனின் சகோதரனும் தகப்பனும் வெகுண்டு எழுந்தனர். இவர்களை சமாதானப்படுத்த எழுவன் வஞ்சி முத்தரையன் கழுக்குன்றக் கோயிலுக்கு இரண்டு நொந்தா விளக்கெரித்தான்.

மற்றொரு கல்வெட்டு கழுக்குன்ற கோயிலில் உள்ளது. இக்கல்வெட்டும் குற்றம் செய்தவன் இரு நொந்தா விளக்குகள் எரித்ததை விளக்குகிறது. விக்ரமாதித்தன் கம்பன் அல்லது

குன்றத்தூர் விக்ரம சோழப் பேரரையன் என்பானுக்கு அளித்த தீர்ப்பை விளக்குகின்றது. இவன் மதுராந்தக சதுர்வேதி மங்கலத் திலுள்ள ஒரு சிறு கிராமமான குன்றத்தூரைச் சார்ந்தவன். ராமன் அம்பலக் கூத்தன் அல்லது மலையானூர் தென்னத்தரையன் என்பான் செம்பூர் கோட்டத்து முக்கூட்டுப்பட்டு படைத்தலைவன் எதிரிலி சோழ சம்புவரையன் என்பானுடன் போர்புரிந்தான்.

இவ்விருவருக்கும் இடையே நடந்த சண்டையில் எதிரிலிச் சோழ சம்புவரையன் என்பான் கொல்லப்பட்டான். இச்சண்டை யில் அவன் மனைவி வம்பு என்பாளும் உடன் கட்டையேறினாள். இதனால் அவன் சகோதரன் இராமன் நம்பி அல்லது இருங்கோளப் பாடி நாடாள்வான் வெகுண்டு கொன்றவனைப் பழிவாங்கத் துடித் தான். ஆனால் சம்புவரையனின் அதிகாரிகள் அவனைத்தடுத்து நிறுத்தி விக்ரம சோழப் பேரரையனை கோயிலுக்கு இரு நொந்தா விளக்கு எரிக்கும்படி பணித்தனர். இதன் மூலமாக இறந்தோர் இருவருக்கும் அஞ்சலி செய்யப்பட்டது. கல்வெட்டில் நொந்தா விளக்கு எரித்தல் தவிர வேறெந்த கடுமையான தண்டனையும் தரப்படவில்லை. வேண்டுமென்றே செய்த கொலைக்கே இந்த தண்டனை தரப்பட்டதென்றால் மன்னனது நீதி பரிபாலனம் தான் என்னே! மன்னனது ஆட்சியில் கடுமையான தண்டனையே தரப்படவில்லை என்பது விளங்குகின்றது.

1. ஸ்வஸ்தி ஸ்ரீ புவி மேவு வளர திருப்பொன் மாதுபுணர நாமேவு கலைமகள் நலம் பெரிது சிறப்ப விசய மகள் வேல் புயத்திருப்ப இசையுங் கல்வியும் எண் திசை

2. நிருப்பர் வந்திறங்கி நினில மடந்தையாயித் திருமணம் புணர்ந்து ஸ்ரீ வளர் திருமணி முடி கவித்தேன் மணிமுடி கவித்து மல்லை ஞாலத்துப்பால் உயிர்க்கெல்லாம் எல்லையில் இன்பம் இ

3. யல் உடனே வெண் நீழற்றுச் செங்கோலோச்சி வாழிபல்லூழி யழிகடப்பச் செம்மன் வீரசிம்மாஸனத்து புவன முழுதுடை யாளொடும் வீற்றிருந்தருளிய கோவீ

4. ராஜகேசரி பன்மறையான திரிபுவனச் சக்ரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்கசோழத்தேவர்க்கு யாண்டு ஆறாவது ஜெயங் கொண்ட சோழ மண்டலத்துக் களத்தூர்க் கோட்டத்துத் தனியூர் ஸ்ரீ மதுராந்தகச்ச

5. துர்வேதிமங்கலத்து பிடாகை குன்றத்தூர் குடிப்பள்ளி விக்ர மாதித்தன் கம்பண்ண விக்ரம சோழப் பேரரையன் மிலாதன இருங்கோளப்பாடி பனையூர் நாட்டு மலையானூர் உடையான் இராமன் அ

6. ம்பலக் கூத்தனை தென்னாட்டரையானை இந்நாட்டு செம்பூர்க் கோட்டத்து முக்காட்டுப்பட்டிலே சம்புவரையார்க்கு படைத் தலைவனாய் இருக்க பண்ண விக்ரம சோழ பேரரையன்

7. இராச்சென்று வளைத்துட் தென்னாட்டரையானைக் கொன்றமை யில் இவன் அகமுடையாள் வம்பு இவனுடனே தீப்பஞ்சுமரிக்க இவன் தமையன் இராமன் நம்பியான் இருங்கோளப்பாடி நா

8. டாள்வான் கம்பண்ண விக்ரம சோழப் பேரரையனைப் பகைத் துடர இருவர்க்கு முதல்வர்களான எதிரிலிச்சோழப் பேரரை யரும் இந்நாட்டுப் புருஷாரணரும் இவர்கள் இருவருக்கும் நன்றாக விக்ரமச்சோழ

9. ப்பேரரையன் இரந்து இரு நொந்தா விளக்குவைப்பான் இருங் கோளப் பாடி நாடாள்வான் இவ்விரண்டு விளக்கும் வைப்பித்து பகைத்துறந்தொளிட்டொளிவான் என்று சொல்ல இருங்கோ

10. ளப்பாடி நாடாள்வான் இரண்டு விளக்குக்கும் சம்மதித்து இருவரும் தங்களில் உபையம் வைத்த உடையார் திருக் கழுக்குன்றம் உடையார் கோவிலிலே வைப்பதென்று இருங் கோளப்பாடி நாடாள்வான்

11. சொல்லி நானும் என் வம்சத்தாரும் இப்பகை தொடரவஞ்சி சொல்லவும் பெற்றதாகச் சம்மதித்து இத் தென்னாட்டரையன் இவன் அகமுடையாளுக்கும் ஆக வைத்த திரு நொந்தா விளக்கு இரண்டுக்கும் விட்ட

12. சாவா மூவாப்பேராடு 90 தொண்ணூறும் பசு 31 முப்பத் தொன்றும் இத்தேவர் கோவிலே விட்டு சிலவகைப் பணிக் குடுத்தேன் இத்தண்டம் ஆலயமார் கப்பன் அடி என் தலை மேல் இது

13. பன்மாஹேஸ்வரர் ரக்ஷை.

சோழர் காலத்தில் கொலைக்குற்றத்தைக் காட்டிலும் திருட்டுக் குற்றத்துக்கே கொடிய தண்டனை விதிக்கப்பட்டது. அதுவும் கோயிலின் சொத்தைத் திருடியவர் மிகக் கடுமையாகத் தண்டிக்கப் பட்டனர்.

கழுக்குன்றக் கோயிலில் இம்மாதிரியான கல்வெட்டுகள் சில உள்ளன. அவற்றை ஈண்டு காண்போம்.

மூன்றாம் குலோத்துங்கன் 35ம் ஆட்சியாண்டில் (1213 A.D.) நமிநந்தி அடிகள் மகன் பெரியன் என்பான் இறைவனின் நெற்றிப் பட்டத்தைத் திருடினான். அவன் கோயிலின் வாயிற் காவலனால் திருடும்போதே பிடிப்பட்டான். இக்கல்வெட்டில் குறிக்கப்படும் நமிநந்தி அடிகளுக்கு இவன் முன்னோர் ஒரு மடம் கட்டினார்கள். எனினும் நமிநந்தி அடிகளின் மகனை மன்னிக்காமல் தண்டனை வழங்கினர். இது அவனது பாரபட்சமற்ற நீதிமுறையை விளக்கு கின்றது. நமிநந்தி அடிகளின் மகன் பெரியனின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டன. அவன் மேற்குத் திசையிலுள்ள மட விளாகத்தினின்றும் விரட்டி அடிக்கப்பட்டு துரோகி என குற்றம் சாட்டப்பட்டான். அவனிடமிருந்துப் பறிக்கப்பட்ட சொத்துக்கள் குலோத்துங்க சோழ வளநாடு புலியூர் கோட்டத்து மயிலாப்பூர் தலைக்காவிரி பாலருவாயன் உய்யவந்தான் அல்லது அனந்த தேவனுக்கு விற்கப்பட்டன. அப்பணம் கோயிலின் மூன்றாம் பிரகாரத்திலுள்ள நூற்றுக்கால் மண்டபம் கட்டப்பயன்படுத்தப் பட்டன. இக்கல்வெட்டில் குறிக்கப்படும் நூற்றுக்கால் மண்டபம் இடிந்துவிட்டது. அதே இடத்தில் இன்று சர்வ வாத்ய மண்டபம் எனும் மண்டபம் இருபதாம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. இதே போன்று மேலும் இரு கல்வெட்டுகள் உள்ளன. மூன்றாம் ராஜராஜன் 12ம் ஆட்சி ஆண்டில் கந்தன் சியன் என்பான் ஒரு குற்றம் செய்ததற்காக ஒரு விளக்கெரித்தான். இவன் திருவன் என்பான் சொத்துக்களைத் திருடினான் என்று கல்வெட்டுக் கூறுகின்றது.

விஜய நகர மன்னர்கள் காலத்திலும் இம்மாதிரியான ஒரு கல்வெட்டு உள்ளது. வீரகம்பண்ண உடையாரின் ஆனந்த வருடம் கல்வெட்டு இது.

வீரகம்பண்ண உடையாரின் காலத்தில் நடந்த ஒரு திருட்டைப் பற்றி விளக்குகிறது. ஆதித்த தேவன் ஆபரணக் கொட்டடியைத் திறந்து நகையைத் திருடினான். அதை மெய்க்

காவலன் கூற மகாசபை கூடி வழக்கை விவாதித்தது. அவன் சிவத்துரோகி என குற்றம் சாட்டப்பட்டு அவன் சொத்துக்கள் அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டன. இம்மகாசபையில் இருந்த அங்கத்தினர்கள் பெயர்கள் எழுதப்பட்டுள்ளன. இக்கல்வெட்டு இருவிதங்களில் மிக முக்கியமானது. ஆதித்தன் கோயில் மகாசபை நீதி பரிபாலனத்திலும் சிறப்பான இடத்தை பெற்றுள்ளது என விளங்குகிறது.

கல்வெட்டு கூறும் அளவைகள் :

கழுக்குன்றக் கல்வெட்டுகளில் காணி, மாக்காணி, முக்காணி போன்ற நில அளவைகள் குறிக்கப்பட்டுள்ளன. இவைத் தவிர சில வினோதமான நீர் அளவைகள் குறிக்கப்பட்டுள்ளன. இவை சோழ மன்னர்கள் காலத்தில் தொடங்கி கோப்பெருஞ்சிங்கன் காலம் வரை தொடர்ந்தன. விக்ரம சோழன் காலத்தில் அருமொழித்தேவன் நாழி எனும் நீர் அளவும் மற்றொரு கல்வெட்டில் மூன்றாம் குலோத் துங்கன் காலத்தில் செல்வி ராசகேசரி எனும் நீர் அளவும் குறிக்கப் பட்டுள்ளன.

விக்ரமசோழனின் 4-வது ஆட்சியாண்டில் செம்பூர் கோட்டத்து பலம்பட்டின வேளாளன் ஒருவன் அருண்மொழித் தேவன் எனும் நாழி அளவுடைய நெய் ஊற்றி விளக்கெரிக்க ஆடுகள் கொடை அளித்தான்.

மூன்றாம் குலோத்துங்கன் 25-ம் ஆட்சியாண்டில் ஆறுமுக நாட்டார் எனும் சதுர்வேதி மங்கலம் நாட்டான் ஒருவன் விளக் கெரித்தான். அப்போது செல்வி ராசகேசரி எனும் அளவைக் கொண்டு நெய் ஊற்றி விளக்கெரித்தான்.

நில அளவு :

மூன்றாம் குலோத்துங்கசோழன் கல்வெட்டு ஒன்றில் பழன அரசு கோல் என்ற அளவு குறிக்கப்பட்டுள்ளது. இதில் 3 மாக்காணி அல்லது 16 சாண் என்ற அளவு எழுதப்பட்டுள்ளது. இந்த அளவைகள் அனைத்தும் திரு உரக முறைப்படி எழுதப்பட்டன.

கல்வெட்டுகள் கூறும் விழாக்கள் :

கழுக்குன்றக் கோயிலில் ஆண்டுதோறும் விழாக்கள் நடந்த வண்ணம் இருக்கின்றன. அதற்கு ஏற்றாற் போல சில கல்வெட்டு

களில் விழாக்களும் அப்போது கொடுக்கப்பட்ட கொடைகளும் எழுதி வைக்கப்பட்டுள்ளன. முதலாம் குலோத்துங்கன் கல் வெட்டொன்று மதுராந்தக சதுர்வேதிமங்கலத்தார் ஒரு குறிப்பிட்ட நிலத்தை இறைவனுக்கு அளித்தார். அந்நிலத்தின் வருவாயி லிருந்து மார்கழி மாதம் திருவாதிரை அன்று 1000 நாழி நெய் ஊற்றி இறைவனுக்கு அபிடேகம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. இதற்கான பணமும் பொறுப்பும் மகாசபையிடம் கொடுக்கப்பட்டது. மற்றொரு கல்வெட்டு இறைவனுக்கு ஆனஞ்சு குளியல் நடத்த 240 பசுக்கள் அளித்ததைக் குறிக்கிறது. இதையே அப்பரும் 'ஆவின் ஐந்து உகத்தானே' எனப் பாடுகின்றார்.

ஜடாவர்மன் வீர பாண்டியனின் 13ம் ஆட்சி ஆண்டில் காளிங்கராயன் சந்தி எனும் விழா நடத்த களத்தூர் நாட்டார் நிலம் கொடுத்ததைக் குறிக்கிறது. இது மன்னனின் பிறந்தநாளைக் குறிக்கும் நாளாக இருக்கலாம். இக்கல்வெட்டில் கப்பலூர் அல்லது உலகளந்த சோழ நல்லூர் அல்லது பாண்டி மண்டலத்திலுள்ள முத்தூற்றுக் கூற்றம் என்ற பெயர் உள்ளது.

வீர விஜய பூபதிராயன் காலத்தில் விழா நடத்த நாகீஸ்வர முடையான் வில்லவரையன் என்ற மன்னனின் அதிகாரி நிலம் அளித்து வரிகளின்று விலக்கு அளித்தான்.

அம்மன் கோயிலுள்ள ஒரு கல்வெட்டு இறைவிக்கு ஆவணி மாதம் உற்சவம் நடத்த அனந்தப்பூர் எனும் ஊரை அளித்ததைக் குறிக்கின்றது.

மேற்கூறிய கல்வெட்டுகளில் கூறப்பட்டுள்ள பல விழாக் கள் இன்றும் நடைபெறுகின்றன. அன்றிலிருந்து இன்று வரை கோயிலின் நிர்வாகத் திறமை இதிலிருந்துப் புலனாகிறது.

கல்வெட்டுகளில் இடம் பெறும் கட்டடங்கள் :

மூன்றாம் கிருஷ்ணன் தனது கல்வெட்டில் ஈசான சிவன் என்பானிடமிருந்து நிலம் வாங்கி ஒரு கருவறை கட்டினான் என்று கூறுகின்றது. ஆனால் அக்கருவறை இன்று இல்லை.

முதலாம் குலோத்துங்க சோழன் கல்வெட்டொன்று ராஜ ராஜபுரம் எனும் ஊரைச் சார்ந்த மக்கள் நமிநந்தி அடிகள் மடம் கட்ட ஒரு கிராமம் கோயிலுக்கு அளித்ததாகக் கூறுகின்றது. இம் மண்டபமும் தற்போது கோயிலில் இல்லை.

மூன்றாம் குலோத்துங்கன் கல்வெட்டு நமிநந்தி அடிகள் மகன் பெரியன் என்பான் செய்த குற்றத்திற்காக அவன் பணத்தைக் கொண்டு ஒரு நூற்றுக்கால் மண்டபம் கட்டினார் எனக் கூறு கின்றது. அவனது 38-ம் ஆண்டு கல்வெட்டொன்று வைப்பாக்கம் மாஹேஸ்வரர்கள் சிவந்தவண்ணப்பெருமாள் அகோரதவராவலர் என்பாருக்கு மடம் கட்ட பணம் கொடுத்தனர் எனத் தெரிகின்றது.

14ம் நூற்றாண்டு கல்வெட்டொன்று கச்சியை சேர்ந்த பக்தன் ஒருவன் மண்டபத்தைப் பெரிதாக்கினான் எனக் கூறு கின்றது. சங்கு தீர்த்த குளக்கரையில் இந்த கல்வெட்டு உள்ளது. அங்குள்ள மண்டபம் இவனால் தான் பெரிதாக்கப்பட்டிருக்க வேண்டும். மற்றொரு கல்வெட்டு சூரிய தேவன் என்பான் மலை மீது படிக்கட்டுகளைக் கட்டினான் எனக் கூறுகின்றது. ஆனால் தற்போதுள்ள படிகளைப் பார்க்கையில் அவை தற்போது கட்டப் பட்டவை போன்றே தோற்றமளிக்கின்றன.

வரிகள்:

கழுக்குன்ற கல்வெட்டுகளில் பல வரிகளும் வரிகளின்று விலக்கப்பட்டமையும் குறிக்கப்படுகின்றன. வீர கம்பண்ண உடை யாரின் ஆனந்த வருடத்தில் கைக்கோளர் மீது இடப்பட்ட வரி குறிக்கப் பட்டுள்ளது. திருக்கழுக்குன்ற எல்லையில் வாழும் கைக்கோளர் அனைவருக்கும் இடப்பட்ட வரியைக் குறிக்கும். பட்டாடை, நூலாயம், அட்டைச் சம்மதம், பொச்சம்மதம், படைவீரத்தி, அடிய மடம் போன்ற துணிகளின் மீது இடப்பட்ட வரி குறிக்கப்பட் டுள்ளது. கைக்கோளர்கள் எழுபது பணத்துக்கு வரி செலுத்த வேண்டும். அவர்கள் வருடத்துக்கு 70 பணம் செலுத்த வேண்டும். தவிர பட்டினங்களிலிருந்து புடவை ஏற்றுமதி செய்யும்பொழுதும் அவை இறக்குமதி செய்யும் பொழுதும் வரி செலுத்த வேண்டும். பட்டினத்திலிருந்து நெல் ஏற்றுமதி இறக்குமதி செய்யும்போது வரி செலுத்த வேண்டும். சதுரவாசகன்பட்டினம் என்ற பட்டினம் குறிக்கப்பட்டுள்ளது. இது கடற்கரை அருகில் ஒரு சிறந்த வியாபாரத் தலமாக இருந்திருக்க வேண்டும். அதுவே தற்போது சட்ராஸ் அல்லது சதுரங்கப்பட்டினம் எனப்படுகிறது. அதே பெயர் 1476-ம் வருட முதலாம் புக்கன் கல்வெட்டிலும் குறிக்கப்படுகிறது. கோயிலிலுள்ள தேசவிடங்கப் பெருமாளுக்கு நானா தேசிகன், பரதேசிதன் ஆகிய சதுரங்கப்பட்டினத்து வியாபாரிகள் தங்கள்

வியாபாரப் பொருட்களின் மீதும் முத்துப்பார்வை, புடவைப் பார்வை போன்றவற்றின் மீதும் இடப்பட்டுள்ள வரி குறிக்கப்பட்டுள்ளது.

1/10% துணிகளின் மீதும் 3/20% எண்ணெய் வித்துக் களின் மீதும் 8/20% என்று ஒவ்வொரு துணி விற்பனை மீதும் வரி இடப்பட்டுள்ளது. இக்கல்வெட்டிலிருந்து திருக்கழுக்குன்றம் சிறந்த நானாதேசிகன் பரதேசிகளின் வியாபாரத் தலமாக இருந்தது எனத் தெரிகிறது. இது தவிர மோட்டுப்பள்ளி எனும் மற்றொரு வணிகத்தலமும் குறிக்கப்பட்டுள்ளது.

கிருஷ்ண தேவராயரின் கல்வெட்டொன்றும் வரி விதிப் பதைப் பற்றி குறிக்கின்றது. கடவுளின் பெயரால் மகாபலிபுரம் என்ற ஊர் அருகில் விட்டலாபுரம் கிராமத்தை களத்தூர் சீர்மை என்ற பெயரால் அளித்ததைக் குறிக்கின்றது. இந்நிலம் கடவு ளுக்கு நிவந்தம் அளிக்க இறையிலின்றும் நீக்கப்பட்டு 500 பணம் வரிக்காக மொத்தமாக அளிக்கப்பட்டது.

நில விற்பனை :

கழுக்குன்ற கல்வெட்டுகளில் நில விற்பனை பற்றி விளக்கமாகக் கூறப்படுகிறது. நிலம் விற்க, வாங்க, அடகுவைக்க போன்ற பலவிதமாக கல்வெட்டுகள் காணப்படுகின்றன. நிலங் களின் அளவு மா, காணி போன்றவற்றால் அளக்கப்பட்டு எழுதப் பட்டுள்ளது. ஒரு கல்வெட்டில் விளக்கெரிக்க கொடுத்த நிலம் குத்தகைக்கு விடப்பட்டு அந்நிலத்தின் வருவாயிலிருந்து வரும் பணம் நெய் வாங்க பயன்படுத்தப்பட்டது.

மூன்றாம் குலோத்துங்கன் கல்வெட்டொன்று திருப்புரியிடுப் பட்டிக்காக நிலம் அளித்ததைக் குறிக்கின்றது. 14ம் நூற்றாண்டு கல்வெட்டொன்று காவல் காணியாக நிலம் அளித்து அந்நிலத்தை கண்காணிக்க மகாசபை அங்கத்தினர் ஒருவனை நியமித்ததாகக் கூறுகின்றது.

மூன்றாம் குலோத்துங்கன் கல்வெட்டொன்று கோயிலைச் சார்ந்த வீடும் சேவகர்களும் சேர்த்து விடையூர் நாட்டான் ஒருவ னுக்கு விற்கப்பட்டது. அவனிடமிருந்து வாங்கிய நானூறு காசுகள் கோயிலின் முன் மண்டபம் கட்ட பயன்படுத்தப்பட்டது. அதே மன்னனின் கல்வெட்டொன்று சிவந்தவண்ணப்பெருமாள்

அகோர தேவராவலர் மடம் கட்ட வைப்பாக்கம் மாஹேஸ்வரர் தன் வீட்டை விற்று கொடுத்ததாகக் கூறுகின்றது. காட்டு நிலம் விற்பனை யும் இக்கோயிலில் கல்வெட்டாக எழுதப்பட்டுள்ளது. அதே மன்னனின் கல்வெட்டொன்று சேவூர் (அ) உத்தம சோழ கட்டளை என்ற ஊரை மடப்புறமாக கோயிலுக்கு விற்றதைக் குறிக்கும்.

கல்வெட்டில் இடம் பெறும் கிராமப் பெயர்கள்:

குற்றாலம், முடிகொண்ட சோழபுரம், ஏமப்பேரூர், ராஜ நாராயணபுரம், ஊத்துக்காடு, செம்பியன் மணலை, கொடுவூர், குறுமுகை, ஹரிவஸ்புரம், நாகலாதேவிபுரம், அரிகண்டபுரம், மணநல்லூர், சிறு குன்றம், சோழகுலவல்லி, பெரும்பாச்சேரி, விடையூர், மயிலாப்பூர், பலம்பட்டினம், அம்மணம்பாக்கம், சேவூர், கிழமையூர், மலையனூர், ஒழுகரை, அமிலம்பள்ளம், சாலைப் பாக்கம், சதுரவாசகன் பட்டினம், ஈச்சங்காரணை, அஞ்சூர் போன்றவை குறிப்பிடப்பட்டுள்ளன.

ஓலைச்சுவடிகளிலும் ஈச்சங்காரணை, அமுற்றம் பள்ளம், சதுரங்கப்பட்டினம், அஞ்சூர் காட்டுப்பாக்கம், சாலவாக்கம் போன்ற பெயர்கள் கோயிலின் திருப்பணி கிராமங்களாக வருகின்றன. இதிலிருந்து கோயிலின் சொத்துக்கள் வழிவழியாக நேர்மையான முறையில் பராமரிக்கப்பட்டன என்பது தெரிகின்றது.

இவை தவிர ஒரு ஓலைச்சுவடியில் கோயிலில் வருடந் தோறும் நடைபெறும் உற்சவங்கள் குறிக்கப்பட்டுள்ளன. அவற்றில் எழுதப்பட்டுள்ள சில உற்சவங்கள் கல்வெட்டிலும் இடம் பெற்றுள்ளன. இதை நோக்குகையில் கல்வெட்டுகளை ஆதார மாகக் கொண்டு தான் இச்சுவடிகள் எழுதப்பட்டனவோ என்ற ஐயம் எழுகின்றது. கல்வெட்டுகள் எழுதப்பட்டுள்ள மன்னர்கள் வரிசை யிலேயே ஓலைச்சுவடிகளும் பண்டைய மன்னர்கள் வரலாற்றை எழுதியுள்ளன.

வேறு ஊர் கல்வெட்டுகளில் திருக்கழுக்குன்றம்:

திருக்கழுக்குன்றம் பல்லவர் காலம் முதல் வழிபாட்டில் இருந்து வருகிறது. எனவே தமிழகத்திலுள்ள பல கோயில்களில் திருக்கழுக்குன்றக் கோயிலைப் பற்றி குறிப்பு வருகின்றது. வெளியூர் களிலிருந்து வந்து இக் கோயிலுக்கு கொடை தந்துள்ளனர். தங்கள்

கோயிலில் கழுக்குன்ற இறைவனின் மேன்மைப்பற்றி எழுதி வைத்துள்ளனர். கழுக்குன்றத்திலுள்ள சில கல்வெட்டுகள் வேறு ஊரிலுள்ள கல்வெட்டுகளின் எழுத்தமைதியைப் பெற்றுள்ளன. இவ்வுண்மை நோக்குகையில் இரண்டும் ஒரே சமயத்தில் எழுதப் பட்டிருக்கலாமா என்ற ஐயம் எழுகின்றது. இவ்வகையில் ஆய்கை யில் கல்வெட்டின் காலம் கணிக்கப்படுகின்றது.

பராந்தகனின் கழுக்குன்ற கல்வெட்டு கீழ்மாத்தூர், வேலூர் போன்ற ஊர்களிலுள்ள கல்வெட்டுகளைப் போன்றே உள்ளது. மூன்றாம் கிருஷ்ணன் கச்சியும் தஞ்சையும் வென்ற செய்தி கழுக்குன்றத்தில் உள்ளது போன்றே பல ஊர் கல்வெட்டுகளில் உள்ளது.

தஞ்சை மாவட்டத்திலுள்ள தில்லை ஸ்தானம் கிரிதஸ்த நேன்ஸரர் கோயிலில் கழுக்குன்ற இறைவனுக்கு கொடுத்த கொடையை விளக்குகிறது. இக்கல்வெட்டு களத்தூர் கோட்டத்து வைதாவூர் நாட்டு குணவன் புத்தன் என்பான் அவ்விறைவனுக்கு விளக்கெரிக்க பொன்கொடுத்ததை விளக்குகின்றது. களத்தூர் கோட்டத்தில் வல்லம், திருக்கழுக்குன்றம் போன்ற ஊர்கள் உள்ளன. இவற்றைக் கொண்டு பார்க்கையில் இக்கொடை திருக்கழுக்குன்ற இறைவனுக்கே கொடுக்கப்பட்டிருக்க வேண்டும் என எண்ண வைக்கிறது. இக்கல்வெட்டு எழுத்தமைதியைப் பார்க்கையில் ஆதித்தன் காலத்தைச் சார்ந்தது. எனவே தனது 27ம் ஆட்சியாண டில் கழுக்குன்றத்தில் கட்டிய கோயிலுக்கே இக்கொடை கொடுக்கப் பட்டிருக்க வேண்டும்.

ஸ்வஸ்திஸ்ரீ கொராஜ கேசரி வர்மற்கு யாண்டு யஎ ஆவ
து ஊஹாஜெவர்க்கு திரு விளக்கினுக்கு வைத்தார்
களத்தூர் கொட்டத்து வெ
தாவூர் நாட்டுக் குமாரபாடி குணவன் புத்தடி வைத்த
பொன் .....

பராந்தகனின் கழுக்குன்ற கல்வெட்டு கீழ்மாத்தூரில் ஒரு நடுகல்லில் எழுதப்பட்டுள்ளதைப் போன்றே உள்ளது. கீழ்மாத் தூரில் உள்ள கல்வெட்டு (கிரந்த எழுத்துக்களில் ஸ்ரீ நீங்கலாக)

முழுதும் தமிழிலேயே உள்ளது. ஆனால் கழுக்குன்றக் கல்வெட்டில் அதிக கிரந்த எழுத்துக்கள் உள்ளன. இவ்வேற்றுமை தவிர இரு கல்வெட்டுகளும் ஒரே மாதிரி உள்ளன. பராந்தகனின் கல்வெட்டு சங்கரபாடியான் என்பான் கொடுத்த கொடை குறிப்பிடப்பட் டுள்ளது. மலைவீதி, சங்கரபாடி, சமன்ஜார போன்ற பெயர்கள் ஒரு குறிப்பிட்ட வீதியைக் குறிக்கின்றன சிதம்பரத்திலுள்ள ஒரு கல்வெட்டு சங்கரபாடி என்பது ஒரு குறிப்பிட்ட மக்களைக் குறிக்கும் எனக் கூறுகின்றது. ராஜாதிராஜனின் 26ம் ஆண்டு கழுக்குன்ற கல்வெட்டு உலகலந்த சோழபுரம் வியாபாரிகள் ஒன்று கூடி பிரம்மேஸ்வரம் என்னும் கோயிலுக்கு நிலம் அளித்து இறையிலியாக ஆக்கியதை விளக்குகின்றது. இக்கல்வெட்டில் சாலியன், சங்கரபாடியன் என்று இரு பெயர்கள் வியாபாரிகள் என குறிக்கப்பட்டுள்ளன. இதிலிருந்து வியாபாரிகளைத் தவிர சாலியார், சங்கரப்பாடியார் போன்றோர் வியாபாரி களாக இருந்தனர் எனத் தெரிகின்றது. இதே பெயர் (சங்கரபாடியான்) சிதம்பரம், உத்திரமேரூர் கல்வெட்டுகளில் இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது'' ராஜாதித்தன் கழுக்குன்றக் கல்வெட்டு தக்கோலம் கல்வெட்டு போன்றே உள்ளது. முதலாம் குலோத்துங்கன் கன்னியாகுமரி கல்வெட்டுகள் கழுக்குன்றத்திலுள்ள முதலாம் குலோத்துங்கன் கல்வெட்டை உறுதிபடுத்துகின்றன. முதலாம் குலோத்துங்கன் ஈழத்தை இழந்ததும் அவனது படை தோல்வி அடைந்ததும் இதிலும் குறிக்கப்பட்டுள்ளது. விஜயபாகுவின் பொலநர்வா கல்வெட்டு முதலாம் குலோத்துங்கன் வென்றதாகக் கூறுகின்றது. இக்கல் வெட்டுகள் அனைத்தும் கழுக்குன்ற கல்வெட்டின் தொடர்ச்சியாக இருக்கலாமோ என்று எண்ணத் தோன்றுகிறது.

கிருஷ்ண தேவராயரின் உதயம்பாக்கம் கொடை செப்பேடு களில் கழுக்குன்றம் இடம் பெறுகின்றது. இச்செப்பேடுகள் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள உதயம்பாக்கம் என்ற ஊரை கிருஷ்ணதேவராயன் சதாசிவ சரஸ்வதி என்னும் சந்திரசேகர சரஸ்வதி (சங்கராச்சரிய மடம் காஞ்சி) அவர்களின் சீடனுக்கு அளித்ததை விளக்குகிறது. இக்கொடையில் குறிப்பிடப்பெறும் பல ஊர்கள் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ளவையே. எனவே இக்கொடையில் குறிக்கப் பெறும் திருக்கழேக்குன்னந்தேரு என்னும் ஊர் புனிதமான கழுக் குன்றத்தையேக் குறிக்கின்றன,

வெங்கடப்ப நாயக்கன் என்பானின் திருவந்தவூர் கல்வெட்டிலும் கழுக்குன்றம் எனும் பெயர் உள்ளது. வெங்கடப்ப நாயக்கன் 1547 (Saka era) ல் கழுக்குன்ற இறைவனுக்கு அளித்த கொடை குறிப்பிடப்படுகிறது. திருக்கழுக்குன்ற சைத்திர ஈஸ்வரர் கோயிலில் பணிபுரியும் பேரம்பல பண்டாரத்திற்கு மற்றும் அக்கோயிலில் பணி புரியும் ஊழியர்களுக்கும் கொடுத்த கொடையை விளக்குகின்றது.

1. 1 ஸ்வஸ்திஸ்ரீ
2. ஸ்ரீ ஊது ஊஹாமண்ட
3. லிசுரது ஸ்ரீவீரப்பிர
4. தாப ஸ்ரீவீரராம ஜெவ
5. தான . . . . . . ஊஹாராயர் பிறுதிவி
6. ராஜ்ஜியம் பண்ணி
7. அருளா நின்ற சகாப்
8. தம் சதருளசயஎ யின்
9. மேல் செல்லா நின்ற
10. குரோதன ஸ௱வஊரத்து
11. விற்சிக நாயற்றுப் பூறு
12. வ பக்ஷத்து சப்தமியும்
13. . . . . கிழமை பெற்ற யிற்றை
14. நாள் தார கொத்திர
15. த்தில் தாமல் வெங்க
16. டப்ப நாயக்கர் பெரன
17. ான ராயச சென்
18. னப்ப குமாரன் வெங்
19. கடப்ப நாயக்கர்
20. திருக்கழுக்குன்றம் செ
21. த்திரயிசுவரர் கயிங்கரிய
22. த்துக்கு பிறதான குருகுல

23. பண்டாரமுபெரம்பல
24. பண்டாரம் உள்ளிட்டா
25. ற்கு பூதான பத்திரம்
26. குடுத்தபடி நம்ம . . . நம
27. பட்ச . . . தொம்கு
28. ண்டல . . . . . .

இவ்வாறாக திருக்கழுக்குன்றம் என்ற பெயர் தமிழகமெங்கும் பல கோயில்களில் காணப்படுகின்றன. கோயிலிலுள்ள கல்வெட்டுகள் சிறப்பான செய்திகளை நமக்கு கூறுகின்றன.

வரலாற்றில் திருக்கழுக்குன்றம்

திருக்கழுக்குன்றம் தமிழக வரலாற்றில் சிறப்பானதொரு இடத்தை பெற்றுள்ளது. இவ்வூரை பற்றிய கல்வெட்டுகள் கி.பி. 6ம் நூற்றாண்டிலிருந்து கிடைக்கின்றன. கற்காலத்திலிருந்து மனிதன் இங்கு வாழ்ந்திருக்க வேண்டும். பெருங்கற்காலத்து சுடுமண் பொம்மைகள் சில இங்கு கிடைத்துள்ளன.

பல்லவர் காலம்

கி.பி. 3ம் நூற்றாண்டிலிருந்து 9ம் நூற்றாண்டு வரை தொண்டை மண்டலத்தை ஆண்ட சிறப்புடைய மன்னர்கள் பல்லவர்கள். பல்லவர்கள் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆளத்தொடங்கினர். மாமல்லபுரம் துறைமுகமாக விளங்கியது.

திருக்கழுக்குன்றத்திலுள்ள ஒரு கல்வெட்டு ஒன்றில் ஸ்கந்த சிஷ்யன் என்னும் பல்லவ மன்னன் குறிக்கப்படுகின்றான். அவன் கோயிலுக்கு கொடை கொடுத்ததாகவும் குறிப்பு காணப்படுகின்றது. ஸ்கந்த சிஷ்யன் கட்டிய கோயில் இன்று கழுக்குன்றத்தில் இல்லை. ஆயினும் அவரால் கோயிலுக்கு கொடை கொடுக்கப்பட்டதை ஆதித்தன் கால கல்வெட்டு விளக்குகிறது.

இக்கல்வெட்டு ஸ்கந்த சிஷ்யன் இறையிலியாக கொடுத்த நிலத்தை பின் வந்த நரசிம்மவர்மன் அதை ஆதரித்து உறுதிப் படுத்தியதையும் அதன் பின் வந்த ஆதித்தன் மேலும் உறுதி படுத்தியதையும் விளக்குகிறது. இதில் குறிக்கப்படும் ஸ்கந்த சிஷ்யன் யார் என்பதை ஈண்டு நோக்குவோம். வாயலூர் என்ற ஊரில் (சதுரங்கப்பட்டினம் அருகிலுள்ளது) உள்ள கல்தூண் ஒன்றில் ராஜசிம்ம பல்லவன் கல்வெட்டு ஒன்றுள்ளது. அதில் முதல் பல்லவன் தொடங்கி ஐம்பத்தி நான்கு பல்லவ மன்னர்கள் பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டில் ஸ்கந்த சிஷ்யனும் குறிக்கப்படுகின்றான். அவன் வீரகூர்ச்சன் எனும் பல்லவ மன்ன னுக்கு பின் ஆட்சிபுரிந்தவனாக குறிக்கப்படுகிறான். ஸ்கந்தசிஷ்யன் சத்யசேனன் என்பவனிடமிருந்து இக்கால பல்கலைக் கழகம் போன்ற கடிகையைக் கைப்பற்றியதாகக் குறிப்புண்டு. கந்தசேனன் என்பவன்

முதலாம் மகேந்திரவர்மன் கால குறுநில மன்னன். அவன் வல்லம் கோயிலை எடுத்து அதில் முதலாம் மகேந்திரவர்மன் பட்டப் பெயர்களை குறித்து வைத்தான். அங்குள்ள கல்வெட்டு:-

சத்ரு மல்லன் குணபரன்
மயேந்திர போத்தரசரு அடியான்
வயந்த பிரியரெசரு மகன் கந்தசேனன்
செய்வித்த தேவகுலம்

என்பதாகும்.

இக்கல்வெட்டில் குறிக்கப்படும் கந்தசேனனே ஸ்கந்த சிஷ்யன் என்ற ஒரு கருத்து சிலரிடையே நிலவுகின்றது.

நந்திவர்மனின் வேலூர் பாளையம் செப்பேட்டிலிருந்து கீழ்கண்ட வம்ச வழியில் ஸ்கந்த சிஷ்யனை அறிகின்றோம்

கலாபாரதி
|
சூடாபல்லவன்
|
வீர கூர்சன்
|
ஸ்கந்த சிஷ்யன்
|
சிம்மவர்மன் — விஷ்ணுகோபன் — குமாரவிஷ்ணு

விஷ்ணு கோபன் கி.பி. 360ல் சமுத்ரகுப்தனால் தோற்கடிக் கப்பட்டான் என அலகாபாத் கல்வெட்டு கூறும். குமாரவிஷ்ணு பின் காஞ்சியை மறுபடியும் கைப்பற்றினான். எனவே ஸ்கந்த சிஷ்யன் கி.பி. 360க்கு முன் ஆண்டிருக்க வேண்டும். இந்த ஸ்கந்த சிஷ்யன் கழுக்குன்ற கோயிலுக்கு கொடை கொடுத்துள்ளதிலிருந்து அந்தக் காலத்திலேயே சிறப்பான கோயில் திருக்கழுக்குன்றத்தில் இருந்ததை அறியமுடிகிறது. இவன் பின் ஆண்ட சிம்மவர்மன், சிம்ம விஷ்ணு ஆகியோரின் கல்வெட்டுகள் இல்லை.

மலையின் நடுவிலுள்ள ஒற்றைக்கல் மண்டபத்தைக் கட்டியவன் பின் ஆண்ட முதலாம் மகேந்திரவர்மன் என மத்திய தொல்பொருள் ஆய்வுத்துறை முடிவு செய்துள்ளது. எளிமையாகக் குடையப்பட்ட இக்குடைவரை திருச்சியிலுள்ள மகேந்திரனின் குடைவரைக் கோயில் போன்றே உள்ளது. எனினும் இந்த ஒற்றைக்கல் மண்டபத்தில் மகேந்திரவர்மனின் கல்வெட்டு ஏதும் இல்லை. அவனை அடுத்த நரசிம்மவர்மனின் கல்வெட்டொன்று உள்ளது. 'வாதாபி கொண்ட நரசிங்கப் போத்தரசர்' என இவன் தன் வெற்றி இக்கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது.

ஒற்றைக்கல் மண்டப கல்வெட்டு :

ஸ்ரீ திருக்கழுக்குன்ற நாட்டு பெருமான
டிகளுக்கு களத்தூர் கோட்டத்
து தன் கூற்று திருக்கழுக்குன்ற
த்து ஸ்ரீ மலை மேல்
மூல தானத்துப் பெருமானடிகளுக்கு
வழிப்பாட்டுப் புற
மாக வாதாபி கொண்ட நரசிங்கப்
போத்தரசர் வய்த்தது.

இவனது வாதாபி வெற்றியைக் குறிக்கும் கல்வெட்டுகள் ஒன்று வாதாபியிலும் மற்றொன்று இங்கும் இருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

அவன் பின் ஆண்ட பல்லவர் காலகல்வெட்டுகள் திருகழுக் குன்றத்தில் இல்லை. மலைமீதுள்ள வேதகிரீஸ்வரர் கோயிலைக் கட்டியது பிற்கால பல்லவர்களே. கட்டடக் கோயில்களை கட்டத் தொடங்கிய பரமேஸ்வரவர்மனே இக்கோயிலை கட்டினான் என K.R. சீனிவாசன் கருதுகிறார். மலை மீதுள்ள கோயில் கட்டடக் கோயிலின் எல்லா இலக்கணங்களையும் பெற்றுள்ளது. ஆனால் S.R. பாலசுப்ரமணியம் கோயிலிலுள்ள சோமாஸ்கந்தர் சிற்பத்தைக் கொண்டு இதை கட்டியது இரண்டாம் நரசிம்மவர்மன் இராஜ சிம்மனே என கூறுகிறார். இவ்விரு கருத்துக்களையும் விளக்க கல்வெட்டு ஆதாரங்கள் ஏதும் இல்லை. எனினும் பிற்கால பல்லவர்களும் இக்கோயிலை ஆதரித்து போற்றி வந்தனர் என்பது புலனாகிறது.

சோழர் காலம்:

ஆதித்த சோழன் தொண்டை நாடு பாவின 'இராஜகேசரி' எனும் பட்டப் பெயர் கொண்டான். தொண்டை நாட்டில் காணப் படும் இவனது கல்வெட்டுகளில் முதல் கல்வெட்டு 27 ம் ஆட்சி யாண்டில் கழுக்குன்றத்தில் பொறிக்கப்பட்டதாகும். கல்வெட் டுள்ள இக்கோயில் இவன் காலத்தில் கட்டப்பட்டதென்பர். இக்கோயில் திருத்தணி வீரட்டானேசுவரர் கோயிலை பெரிதும் ஒத்துள்ளது. ஆதித்தனால் கட்டப்பட்ட இக்கோயில் இன்று வழிபாடின்றி ஆபரண கொட்டடியாக பயன்படுத்தப்படுகிறது. கோயில் 10-ம் நூற்றாண்டின் எல்லா இலக்கணங்களையும் பெற்றுள் ளது. கோயிலின் சுற்று சுவர்களில் ஆதித்தன் காலம் முதல் இராஜாதித்தன் காலம் வரை கல்வெட்டுகள் உள்ளன. இக்கோயில் விஜயநகர மன்னர் காலத்தில் வழிபாட்டினின்று நீக்கப்பட்டிருக்க வேண்டும்.

பராந்தகனுக்கு பின் ஆண்ட முதலாம் இராஜாதித்தன் கல்வெட்டுகள் இங்கு இல்லை. இதற்குக் காரணம் மூன்றாம் கிருஷ்ணனின் (இராஷ்டிர கூட மன்னன்) ஆட்சி தொண்டை மண்டலத்தில் ஏற்பட்டதேயாகும்.

இராஷ்டிரகூட ஆட்சி தமிழகத்தில் பரவியது எங்ஙனம் என்பதை ஈண்டு நீக்குவோம். சோழ மன்னர்கள் தங்களுக்கு இணையாக ஆண்ட இராட்டிர கூட மன்னர்களுடன் மணத் தொடர்புகள் மூலமாக நட்புறவு கொண்டிருந்தனர். பராந்தகன் தன்மகளை மூன்றாம் இந்திரனின் (அப்போதைய இராட்டிரகூட மன்னன்) மகன் கோவிந்தனுக்கு மணம் முடித்தான். மூன்றாம் இந்திரனுக்குப் பின் கோவிந்தன் அரியணையேறினான். எனினும் அவனது திறனில்லாத ஆட்சியை பயன்படுத்திக் கொண்டு அவனது சிறிய தாதையின் மகன் மூன்றாம் கிருஷ்ணன் தன் தந்தை அமோகவர்ஷனை அரசனாக்கி கோவிந்தனை நாட்டை விட்டு விரட்டினான். கோவிந்தன் தன் மாமன் பராந்தகன் துணையை நாடி அவன் உதவியால் இரட்ட மண்டலத்தைக் கைப்பற்றினான். பராந்தகனின் செயலுக்கு வஞ்சம் தீர்க்க மூன்றாம் கிருஷ்ணன் பெரும் படை திரட்டிவர இருபடைகளும் தக்கோலம் எனுமிடத்தில் பொருதன. இப்போரில் பராந்தகனின் மூத்த மகன் இராஜாதித்தன் இறந்தான். மூன்றாம் கிருஷ்னன் - தொண்டை மண்டலத்தைக் கைப்பற்ற வடதமிழகம் அவனது ஆட்சியின்கீழ் வந்தது.

திருக்கழுக்குன்றத்தில் இந்த மூன்றாம் கிருஷ்ணனின் இரு கல்வெட்டுகள் உள்ளன. அவை முறையே அவனது 17, 19 ஆட்சியாண்டுகளில் கொடுத்த கொடைகளை விளக்குகின்றன. இக்கல்வெட்டுகள், 'கச்சியுஞ் தஞ்சையும் கொண்ட ஸ்ரீ கன்னர தேவர்க்கு' என்று தொடங்குகின்றன.

மேலும் இவனது கார்காட் செப்பேடுகள் இவன் தென் தமிழகத்தில் சோழ மண்டலம், ஈழம் ஆகியவற்றை வென்றதை விளக்குகின்றன. ஆனால் புதுச்சேரிக்கு அருகிலுள்ள வாகூருக் கும் பண்ணுருட்டிக்கருகிலுள்ள திருவதிகை வீரட்டானத்திற் கும் தெற்கே மூன்றாம் கிருஷ்ணனின் கல்வெட்டுகள் இல்லை. எனவே இவன் தஞ்சையை வென்றது உறுதிப்படாத செய்தியாகும். இராஷ்டிரகூடர் ஆட்சி கன்னர தேவனுக்குப் பின் தொண்டை மண்டலத்தில் மீண்டும் சோழர் ஆட்சி சுந்தரசோழன் காலம் முதல் மூன்றாம் ராசராசன் வரை நிலவியது. எல்லா சோழ மன்னர்களும் இக்கோயிலைப் போற்றி கொடை கொடுத்துள்ளனர். வரலாற்று நிகழ்ச்சிகளை தங்கள் கல்வெட்டில் எழுதி வைத்துள்ளனர். இராஜேந்திர சோழன் மெய்க்கீர்த்தியுடன் கூடிய கல்வெட்டு இங்குள்ளது. தனது 16வது ஆட்சியாண்டில் தேசவிடங்கத் தேவர்க்கு விளக்கெரிக்க 90 ஆடுகள் பரிசளித்துள்ளான். தேச விடங்கத் தேவர் என்பது கோயிலிலுள்ள சோமாஸ்கந்தரைக் குறிக்கும்.

முதல் இராஜாதிராஜன் :

மெய்க்கீர்த்தியுடன் தொடங்கி ஆஹவ மல்லனைத் தோற்கடித்து முடி சூட்டிக் கொண்ட முக்கிய நிகழ்ச்சியை இவனது கல்வெட்டு விளக்குகிறது. ஆஹவமல்லனை பல முறை தோற் கடித்தான். ஆஹவ மல்லன் சமாதானம் செய்யும் பொருட்டுத் தன் இரு அதிகாரிகளை இராஜாதிராசன் அவைக்கு அனுப்பி வைத்தான். சோழ மன்னன் அவர்களை அவமதித்து திருப்பி அனுப்பிய நிகழ்ச்சி விளக்கமாக கல்வெட்டில் பொறிக்கப்பட் டுள்ளது. அவ்விருவருள் ஒருவனுக்கு ஐங்குடுமி வைத்து ஆஹவ மல்லன் என்றும் ஒருவனுக்கு பெண்ணுடை தரித்து ஆஹவ மல்லி என பெயரிட்டு அனுப்பியமையும் பின் இராஜாதிராஜன் கல்யாணபுரம் கைப்பற்றி தன்னை சாளுக்கிய மன்னனாக விஜய ராஜேந்திரன் எனும் அபிஷேக நாமத்துடன் முடிசூட்டிக் கொண் டமையும் இவ்வூர்க் கல்வெட்டுகள் மூலம் அறியக் கிடைக்கின்றன.

இரண்டாம் இராஜேந்திரன் :

தன் தமையன் போரில் இறக்க போர்க்களத்திலேயே மன்னனாக முடிசூட்டிக் கொண்டான். ஆஹவ மல்லனை வென்ற செய்தியும் இரட்டபாடி வென்றுயானை, குதிரை, பெண்டிர், பண்டாரம் கொண்ட செய்தியும் இவன் கல்வெட்டுகளின்று பெறப் படுகின்றது. கழுக்குன்றக் கோயிலுக்கு எண்ணற்ற கொடைகள் இவன் காலத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

காடவர் காலம்:

மூன்றாம் இராசராசனின் குழப்பமான ஆட்சியைப் பயன் படுத்திக் கொண்டு சேந்தமங்கலம் எனும் ஊரை தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்த காடவர் தலைவர்களின் வரிசையில் கோப்பெருஞ்சிங்கன் தோன்றினான். இவன் ஆட்சி தொண்டை மண்டலத்தில் பரவியது. இவன் சோழ மன்னன் மூன்றாம் ராஜ ராஜனை வென்று அவனை சிறை வைத்தான். ஜடாவர்மன் சுந்தர பாண்டியனுக்கு பாண்டிய நாட்டை மீட்க உதவி புரிந்தான். கோப்பெருஞ்சிங்கன் கழுக்குன்ற இறைவனுக்குக் கொடை கொடுத் ததிலிருந்து அவ்வூர் காடவர் ஆட்சியின் கீழ் சிறிது காலம் இருந் தமைப் புலனாகிறது.

கோப்பெருஞ்சிங்கனின் மிக முக்கியமான கல்வெட்டு கள் கழுக்குன்றத்தில் உள்ளன. இங்குள்ள கல்வெட்டொன்று பல்லவாண்டர் (அ) காடவராயன் தொண்டை நாட்டை வென்ற வனும் கூடல் ஏழிசை மோகன் ஆளப்பிறந்தான் என அழைக்கப் பட்டவனின் பாடல் வடிவ கல்வெட்டொன்று உள்ளது. கூடல் ஏழிசை மோகன் ஆளப்பிறந்தான் என்பது கோப்பெருஞ்சிங் கனையேக் குறிக்கும். கோப்பொருஞ்சிங்கனுக்கு இவ்வாறு ஒரு பெயர் உண்டு என்பதை கழுக்குன்ற கல்வெட்டுகளே சான்றாக நின்று விளக்குகின்றன. இப்பாடலின் மறுபாதி திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள செய்யார் எனுமிடத்திலுள்ளன. இப்பாடல் முழுதிலும் கோப்பெருஞ்சிங்கனின் வெற்றிகள் எழுதப்பட்டுள் ளன. சுருக்கமாகக் கூறின் இது கோப்பெருஞ்சிங்கனின் மெய்க் கீர்த்தி போன்று விளங்குகிறது. தன் வெற்றிகளையும் பெருமை களையும் பலரும் அறிந்து புகழ ஒரு பகுதியை கழுக்குன்றத் திலும் மறுபகுதியை செய்யாறு கோயிலிலும் எழுதி வைத்தான் போலும்.

பாண்டியர் காலம்

திருக்கழுக்குன்றம் சோழரது வீழ்ச்சிக்குப் பின் பாண்டியரது கைக்குச் சென்றது. ஜடாவர்மன் சுந்தர பாண்டியன் சோழ அரசன் மூன்றாம் ராசராசனை வென்றான். எனினும் வென்ற நாட்டை அவனுக்கேத் திருப்பிக்கொடுத்து 'சோணாடு கொண்டருளிய சுந்தரப்பாண்டியத்தேவர்' எனும் புகழ் பெற்றான். இவன் தொண்டை மண்டலத்தை ஆள்கையில் திருக்கழுக்குன்றத்தில் இரு கோயில்கள் கட்டியுள்ளான். தற்போதுள்ள பக்தவத்சலசுவாமி கோயிலும் திரிபுரசுந்தரி அம்மன் கோயிலும் ஜடாவர்மன் சுந்தரப் பாண்டியன் கட்டியவையே. இரு கோயில்களும் 1290ல் கட்டப்பட்டவை. இவனது கல்வெட்டுகள் 'பொனிட்டிசுவரமுடைய நாயனார்' எனக் குறிக்கின்றன. சிவபுர நந்தவனம் எனும் நந்தவனம் அமைத்து அதைப் பாதுகாக்கும் பொறுப்பை தேவகன்மிகளிடமும் ஆதிசண்டேஸ்வரர்களிடமும் ஒப்படைத்தான். இவனது கல்வெட்டுகள் எம்மண்டலமும் கொண்டருளிய சுந்தரப் பாண்டியத்தேவர் என்றே தொடங்குகின்றன. இவனுக்கு பின் ஆண்ட ஜடாவர்மன் வீரபாண்டியனும் மாறவர்மன் விக்ரம பாண்டியனும் இக்கோயிலுக்குக் கொடை கொடுத்துள்ளனர்.

சம்புவராயர் காலம் :

13-ம் நூற்றாண்டில் முகலாய படையெடுப்புக்கள் தமிழகத்தில் அடிக்கடி நிகழ்ந்தன. 1325-ல் முகம்மது துக்ளக், உலுகுகான் என்பானை அனுப்ப அவன்காஞ்சியைக் கைப்பற்றினான். சில ஆண்டுகள் தமிழகம் அவர்கள் ஆட்சியில் இருந்தது. அப்போது துவார சமுத்திரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட ஹொய்சல மன்னன் பல்லாளன் தமிழகத்தை முகமதியர்களின் ஆட்சியினின்று கைப்பற்றி அப்பகுதியில் ஆண்ட குறுநில மன்னர்களாகிய சம்புவரையர்களிடம் ஒப்படைத்தான். அங்ஙனம் திருக்கழுக்குன்றம் சம்புவராயர் ஆட்சிக்குட்பட்டது. அவர்களுள் சிறந்தவன் இராசநாராயண சம்புவராயர். அவர் கழுக்குன்ற இறைவனுக்கு இறையிலி நிலமும் விளக்கு கொடையும் கொடுத்துள்ளார்.

சம்புவராயர் 30 ஆண்டுகள் ஆட்சிக்குப்பின் கழுக்குன்றம் விஜயநகர மன்னர்களின் ஆட்சியின்கீழ் வந்தது.

விஜயநகரப் பேரரசு:

கி.பி. 1336 ல் விஜயநகரப் பேரரசு இந்து சமயப் பெருமைகளை மீண்டும் நிலைநாட்ட ஹரிஹரர், புக்கர் எனும் இரு சகோதரர்களால் நிறுவப்பட்டது. புக்கனின் மகன் குமார கம்பண்ணன் தமிழகம் முழுதையும் தன் ஆட்சியின்கீழ் கொணர்ந்தான். சுமார் 300 ஆண்டுகள் தமிழகம் விஜய நகர மன்னர் ஆட்சியில் இருந்தது. விஜயநகர மன்னர்கள் காலத்திலேயே ஆதித்தன் கால கோயில் ஆபரணக் கொட்டடியாக மாற்றப்பட்டிருக்க வேண்டும். இவரது ஆட்சியில் நடந்த திருட்டைப் பற்றி விளக்கும் கல்வெட்டு இங்குள்ளது.

இரண்டாம் புக்கன் :

இவன் ஆட்சியில் நானாதேசிகள் எனும் வணிகர் கூட்டம் விளக்கெரிக்க முடிவெடுத்ததையும், கோயிலுக்குத் திருப்பணி செய்ததையும் விளக்குகின்றது. திருக்கழுக்குன்றம் தொடர்ந்து வணிகத்தலமாக விளங்கியது ஈண்டு குறிப்பிடத் தக்கது. பின் ஆண்ட தேவராயன் கோயிலுக்கு கொடை அளித்துள்ளான்.

கிருஷ்ண தேவராயர் :

விஜய நகரப் பேரரசின் தலைசிறந்த மன்னன். இவ்வூருக்கு அருகிலுள்ள காஞ்சி, திருவண்ணாமலை ஆகிய கோயில்களுக்கு கோபுரம் எழுப்பியவன் இவனே. இக்கோயில் கோபுரங்கள் அனைத்தும் கீழ்பகுதி கருங்கல்லாலும் மேற்பகுதி செங்கல்லாலும் ஆனவை. ஆயினும் கட்டட அமைப்பை கொண்டு பார்க்கையில் இக்கோபுரங்கள் பிற்காலத்தவையாகவே தோன்றுகிறது.

சாதாரணமாக விளக்கெரிக்கக் கொடுக்கப்பட்ட நிலம், பொன், பசுக்கள், ஆடுகள் போன்றவை ஆட்டு இடையர் பொறுப்பில் தான் விடப்படும். ஆனால் இங்குள்ள கல்வெட்டு இப் பொறுப்பை சிவபிராமணரிடம் விட்டதைக் குறிக்கிறது. மன்னனின் 30ம் ஆட்சியாண்டில் குன்றன் என்பான் இறைவனுக்கு விளக்கெரிக்க பசுக்கள் கொடுக்க விளக்கெரிக்கும் பொறுப்பு ஒரு சிவபிராமணரிடம் ஒப்படைக்கப்பட்டது. இதற்கு முன் அப்பொறுப்பு அவன் தந்தையிடம் இருந்தது. இதிலிருந்து விளக்கு எரிக்கும் பொறுப்பு வழிவழியாக வந்ததென்றுத் தெரிகிறது. திரிபுவனச் சக்ரவர்த்திகள் ராஜராஜனின் 7ம் ஆண்டு கல்வெட்டொன்று மாண்டூர் நாட்டு சாத்தவரையன் மனைவி கொடுத்த பணத்தைக் கொண்டு விளக்கெரிக்கும் பொறுப்பை சிவபிராமணர் எடுத்துக் கொண்டதை விளக்குகின்றது.

ஆனால் ஓலைச்சுவடிகள் அனைத்தும் கோபுரங்களைக் கட்டியவர் கிருஷ்ணதேவராயர் என்றே கூறுகின்றன. காலம் கணிக்க முடியாத அளவுக்கு திருப்பணி நடைபெற்றுவிட்டது என்று கூற வேண்டும்.

விஜய நகரப் பேரரசுக்குப் பின் 18-ம் நூற்றாண்டில் செங்கையை ஆண்ட திம்ம ராஜன் என்பான் கழுக்குன்றத்தை ஆண்டதாக கர்ண பரம்பரைக் கதைகள் கூறுகின்றன. இந்த காலத்தில்தான் ஆங்கிலேயர், டச்சுக்காரர், பிரெஞ்சுக்காரர் ஆதிக்கம் தொடங்கியது. 17ம் நூற்றாண்டில் டச்சுக்காரர்கள் இக்கோயிலுக்கு வந்துள்ளனர். மலையின் மீது இரு கழுகுகள் வந்து உணவு உண்பதைக் கண்டு மகிழ்ந்து தன் பெயர்களைத் தேதியுடன் ஒற்றைக்கல் மண்டபத் தூண்களில் எழுதி வைத்துள்ளனர். பின்னர் பிரெஞ்சுக்காரர் தன் இருப்பிடமாக சதுரங்கப்பட்டினத்தைக் கொண்டபோது கழுக்குன்றமும் பிரெஞ்சு ஆதிக்கத்தின்கீழ் வந்திருக் கலாம். பின்னர் 18ம் நூற்றாண்டின் இறுதியில் தமிழகம் முழுதும் ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட திருக்கழுக்குன்றம் ஆங்கிலேயர் வசமாகியது. கும்பினியாரும் துரைமாரும் இக்கோயிலுக்கு நிறைய பண உதவி செய்ததாக ஓலைச்சுவடிகள் கூறுகின்றன. 1905-ல் கர்சன் பிரபு தொல்பொருள் ஆய்வுத்துறை நிர்மாணம் செய்தபோது இவ்வூர் கல்வெட்டுகள் அனைத்தும் எழுதிப் படிக்கப்பட்டன. 1920 ல் நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள் இக்கோயிலுக்கு பலத் திருப்பணிகள் செய்தனர். 1947ம் ஆண்டு திருக்கழுக்குன்றம் இந்திய அரசின்கீழ் வந்தது. இன்று இவ்வூர் காஞ்சிபுரம் மாவட்டத் தின் முக்கிய கிராமமாக உள்ளது. பேரூராட்சியால் நிர்வகிக்கப் படுகின்றது.

இலக்கியங்கள்

இலக்கியங்கள் :

கி.பி. 5ம் நூற்றாண்டு முதல் வழிப்பட்டு வரும் இக்கோயில் பல புலவர்களாலும் பாடப்பட்டுள்ளது. இராமேசுவரத்துக்குப் பின் நால்வராலும் மிகச் சிறந்த முறையில் பாடப்பட்டத் தலம். வடநாட்டு யாத்ரீகர்கள் பலரும் இராமேசுவரத்துக்குப் பின் கழுக்குன் றத்துக்கு விஜயம் செய்கின்றனர்.

வேதங்களே மலையாக நிற்பதால் நால்வர் மலை மீது ஏறாமல் கீழிருந்தபடியே பாடிச் சென்றுள்ளனர். இதுதவிர அருணகிரி நாதர், பெரியபுராணம் இயற்றிய சேக்கிழார், பட்டினத்தார், பாலரு வாயர் போன்ற பலரும் இக்கோயிலைப் பற்றி பாடியுள்ளனர். இதுதவிர 19, 20ம் நூற்றாண்டுகளில் அந்தகக்கவி வீரராகவ முதலியார் திருக்கழுக்குன்றத் தலப்புராணம், சிலேடை வெண்பா, மாலைஉலா போன்ற பல நூல்களை எழுதியுள்ளார். இது தவிர வேதகிரிசர் பதிகம், மலை மருந்து பதிகம், திருக்கழுக்குன்ற கோவை, கழுகாச்சல சதகம் போன்ற பல நூல்கள் உள்ளன. தவிர சமஸ்கிருத இலக்கியங்கள் பக்ஷிதீர்த்தம், ருத்ரகோடி மகாத்மியம் போன்றவை உள்ளன.

நால்வர் பாடிய கழுக்குன்றம்:

நால்வர் பெருமையை மேம்படுத்தவென்றே அவர்கள் இக்கோயிலைப் பற்றி பாடியுள்ளனர். அதை விளக்க நால்வருக் கென்றே தனிக் கோயில் இங்குள்ளது. மாணிக்கவாசகர் திருவடிவ மாக இங்கு இறைவனைக் கண்டதால் இங்கு மாணிக்கவாசகருக் கென்று தனிக்கோயில் உள்ளது.

திருநாவுக்கரசர்:

அப்பர் என பெயர் பெற்ற இவர் கோயிலைப் பற்றி பல பதிகங் கள் பாடியுள்ளார். 'கழுக்குன்றத்து உச்சியின் மேல் உறையும் இறைவனே' எனப் பாடியுள்ளதிலிருந்து இக்கோயிலின் காலம் கணிக்கப்படுகின்றது. அவர் முதலாம் மகேந்திரவர்மனின் சம காலத்தவர்.

மூவிலைமேல் கையானை, மூர்த்தி தன்னை
முதுபிணக்காடு உடையானை, முதலானனை,
ஆவினில் ஐந்து உகந்தானை, அமரர்கோனை,
ஆலாலம் உண்டு உகந்த ஐயன் தன்னை,
பூவினில் மேல் நான்முகனும்,மாலும் போற்றப்
புணர்வு அரிய பெருமானைப் புனிதன் தன்னை
காவலனைக் கழுக்குன்றம் அமர்ந்தான் தன்னைக்
கற்பகத்தைக் கண்ணர கண்டேன் நானே

என்று இத்தல மகிமையைப் பற்றியும் ஊரின் இயற்கை வளத்தைப் பற்றியும் பாடுகின்றார்.

அப்பர் பெருமான் இக்கோயில் இறைவனைப் பற்றி ஐந்து பதிகங்கள் பாடியுள்ளார். 'பிறங்கருவி கழுக்குன்றத் தெம்பிஞ்சகன்' என்றும் 'காரார் கழுக்குன்றம் காணப்பேரும் கயிலாய நாதனைசய காணலாம்' என்றும் 'கறங்கருவிக்கழுக்குன்றின் காண்பார் காணும் கண்ணனை' என்றும் 'கறையார் பொழில் புடை சூழ் காணப் பேரும் கழுக்குன்றமும் தம்முடைய காப்புகளே' என்றும் தான்ஞான வடிவமாகி அண்ணலார் சேவடிக்கீழ் அமரும் போது 'கழுக்குன்றத் துச்சியாய் கடவுளே நின் பூவார்ந்த பொன்னடிக்கே போதுகின் றேன்' என்று அண்ணலார் சேவடிக் கீழ் அமர்ந்தார். இவரது பாடல்கள் தேவாரத்தில் திருத்தாண்டகத்தில் அமைகின்றன.

மாணிக்கவாசகர் :

மாணிக்கவாசகர் இறைவனை திருப்பெருந்துறையில் கருந்தை மரநிழலில் அடியவர்கள் கூட்டத்திடையே கண்டு போற்றி, இறைவனின் முழு அருளையும் பெற்றவர். இவர் மண் சுமந்த திருவிளையாடல் நிகழ்ந்தபின் பெருந்துறை சென்றார். இறைவன் தான் கயிலைக்கு எழுந்தருளி மற்ற அடியவர்களை விடுத்து மாணிக்கவாசகர் இறைவனைப் பின்தொடர்ந்து சென்றார். இறைவன் மாணிக்கவாசகரைப் பார்த்து தன் லிங்கமேனி நிலைப் பெற்றுள்ள சிவத்தலங்களைக் கூறி அவைகளை தரிசித்து, கழுக்குன்றம் வரும்படியும் அங்கு தன் உருவைக் காட்டுவதாகவும் கூறி போந்தார்.

மாணிக்கவாசகர் அதன்படி பலதலங்களைக் கண்டு வணங்கி புகழ்ந்து பாடி இக்கழுக்குன்றினை வந்தடைந்தார். கழுகு உருவில்

இறைவனைக் கண்டு மகிழ்ந்து உளம் குழைந்து 'யாவரிடத்தும் மாறுபாடில்லாத பெருந்துறை இறைவன் தன் கோலத்தை இங்கு காட்டினன்' எனப் பாடியுள்ளார். தான் குரு தரிசனம் பெற்று மகிழ்ந்ததை,

''பிணக்கிலாத பெருந்துறைப் பெரு
மான் உன் நாமங்களபேசுவார்க்கு
இணக்கு இலாததோர் இன்பமே வரும்
துன்பமே துடைத்து எம்பிரான்
உனக்கு இல்லாததொர் வித்து மேல்வினை
யாமல் என்வினை ஒத்தபின்
கணக்கு இல்லாதிருக்கோலம் நீ வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே''

என்று பாடுகின்றார். ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் 'காட்டினாய் கழுக்குன்றிலே'' எனப்பாடியுள்ளார்.

இறைவனது திருவிளையாடல்களை விளக்க வந்தவர்

பிட்டு நேர்பட மண்சுமந்த
பெருந்துறைப் பெரும் பித்தனே
எனப்பாடுகிறார்.
சமணரோடு பொருது வென்றதைக் குறிக்க
இயக்கியார் அறுபத்து நால்வரை
எண்குணஞ் செய்த ஈசனே

எனக் குறிக்கின்றார்.

மாணிக்கவாசகர் திருப்பெருந்துறையில் உறைகையில் இறைவன் ஒரு ஞானப்பீடம் இயற்றி தன் திருவடிகளை ஈந்தளித் தார். இத் திருவடிகளை பலதலங்களிலும் வைத்து வழிபட்டவர் கழுக்குன்றம் வந்தடைந்தார். ஆதலின் விளக்கம் பொருந்திய இத் திருவடிகளை வைத்து வழிபடும் ஒரு தூய இடம் அறியாது கலங் கியதாகவும் இறைவன் அவரை கலங்காதபடி கழுக்குன்றில் குரு வடிவம் காட்டியதாயும், 'இலங்குகின்ற நின் சேவடிகள் இரண்டும்

வைப்பிடும் இடம் இன்றி கலங்கினேன். கலங்காமல் வந்து காட்டி னாய் கழுக்குன்றிலே' எனப் பாடுகின்றார். இறைவன் பெருந்துறை யில் 'கழுக்குன்றிற்கு வாரும் அங்கு எம் வடிவைக் காட்டுதும் எனக் கூறியபடி வந்து காட்டியதை மறவாமல் மாணிக்கவாசகர் கீர்த்தித் திரு அகவலில் கழுக்குன்றில் மறவாது இருந்தாய்' எனப் பாடுகிறார். மாணிக்கவாசகர் தில்லையை அடைந்தபோது, அவர் அருளியத் திருவாசகத்தையும் திருக்கோவையாரையும் எழுத அந்தண வடிவில் வந்த இறைவன் மாணிக்கவாசகரிடம் 'நீர் கழுக்குன்றில் இறை வனைக் கண்டு மகிழ்ந்தீர்' எனக் கூறியுள்ளார். மாணிக்கவாசகர் இறைவனைக் கண்டு பதிகம் பாடிய பின் சிறிது காலம் இங்கு தங்கியிருந்தார். அப்போது இறைவன் ஈந்தருளிய திருவடிகளைக் கண்டு மகிழ்ந்தார்.

சம்பந்தர் :

இவர் கழுக்குன்ற இறைவனைப் பற்றி பத்து பாடல்கள் எழுதியுள்ளார். இத்தலத்தில் சம்பந்தர் சிறிது காலம் தங்கி இறைவனை வழிபட்டார். அங்கு வந்தபோது இத்தலத்து அடிய வர்கள் அவரை எதிர் கொள்ள அவர் தான் வந்த சிவிகையின்றும் இறங்கி மன்றல் விரி நறுஞ்சோலை சூழ்ந்த திருமலையை வலம் வந்து கழுக்குன்றத்தமர்ந்த செங்கனகத் தனிக் குன்றை பெருகிய அன்பினுடன் பணிந்து எழுந்து 'தோடுடையான் ஒரு காதில் தூய குழை தாழ' எனப்பாடியுள்ளார். ஒவ்வொரு பாடலின் முடிவிலும் காதல் செய் கோவில் கழுக்குன்று எனப் பாடியுள்ளார். சீர்காழிக் குளக்கரையில் அன்னையிடமிருந்து ஞானப்பால் பெற்றபோது அவ்விறைவனைப் பாடியது போலவே கழுக்குன்ற இறைவனைப் பற்றியும் பாடியுள்ளார். இத்தலத்து இறைவனுக்கு 'கள்ளம் வல்லான்' என்ற பெயருள்ளதை

'கள்ளம் வல்லான் காதற்செய் கோவில் கழுக்குன்றிலே'

எனப் பாடுகின்றார்.

சமணர்களுடன் அறப்போர் நிகழ்த்தியதை,

.... உலகெல்லாம்
சாய நின்றான் வன் சமணர், குண்டர் சாக்கியர்
காய நின்றான் காதல் செய் கோவில் கழுக்குன்றே

எனப் பாடுகின்றார்.

இவ்வூர் இயற்கை வளத்தைப் பாடுகையில்,

தேனகத்தார் வண்டு அது உண்ட திகழ்கொன்றை
தானகத்தார் தண் மதி சூடித்தலைமேல் ஓர்
வானகத்தார் வையகத்தோர்கள் தொழுதேத்தும்
கானகத்தார் காதல் செய்கோவில் கழுக்குன்றே

எனப் பாடுகின்றார். இத்தலத்து இறைவியைப் பாடுகையில், 'பிணையல் செய்தான் பெண்ணில் நல்லாளையொரு பாகம்' எனக் கூறுகின்றார்.

சுந்தரர் :

சுந்தரரும் கழுக்குன்ற இறைவனைப் பற்றி பத்து பாடல்கள் எழுதி உள்ளார். இப்பாடல்களில் ஊரின் இயற்கை வளமும் தல மகிமைகளும் தெளிவுறப் பாடப்பட்டுள்ளன. வெண்மதி யணிந்த சுடர் கொழுந்தைத் தொழுதிறைஞ்சிப் பாடிய பதிகம் சிறந்த பதிகமாகும். 'உலகீர் சிவபெருமானது இடம், பிடியானைகள் தங்கள் கன்றோடு சூழந்திருக்கும் கழுக்குன்றமே, அதனை, பிற உயிர்களை வருந்து மாற்றாற் செய் கொடுஞ் செயல்களால், பலரும் பல இகழ்வுரைகளால் சொல்லுமாறு இழிவெய்த நின்ற பாவமாகிய வினைகள் பலவும் நீங்குதல் பொருட்டு பலகாலும் சென்று வணங்குமின்' எனப்பாடியுள்ளார். கழுக்குன்ற இறை வனை வணங்கினால் எல்லா பாவங்களும் போகும் எனப் பாடுகிறார்.

ஊரின் இயற்கை வளத்தைக் கூறவந்த சுந்தரர்,

'கன்றினோடு பிடிசூழ் தண் கழுக்குன்றமே'
'நிறங்கள் செய்த மணிகணித்திலங் கொண்டெழி
கறங்கு வெள்ளை யருவித்தண் கழுக்குன்றமே'
'பிளிறு தீரப் பெருங்கைப் பெய் ம்மத மூன்றுடைக்
களிறினோடுபிடிசூழ் தண் கழுக்குன்றமே'
'முலைகளுண்டு பெருங்கைப் பெய்மனதே
மூன்றுடைக்' களிறினோடு
'முலைகளுண்டு தழுவிக்குட்டியொடு முசுக்
கலைகள் பாயும்பிறவிற்றண் கழுக்குன்றமே'

'கடமுடைய புறவிற்றண் கழுக்குன்றமே'
''தேனும் வண்டும் மதுவுண்டின்னிசை பாடியே
கான மஞ்ஞையுரையுந் தண் கழுக்குன்றமே'
'பிழைகள் சாலக் கலித்து நீடுயர் வேயவை
குழைகொண் முத்தஞ்சொரியுந் தண் கழுக்குன்றமே'
'கல்லில் வெள்ளையருவித் தண் கழுக்குன்றினை

என்ற எல்லா பாடல்களிலும் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

அருணகிரிநாதர்:

தமிழகமெங்கும் உள்ள முருகத்தலங்களை வழிபட்டு பதியம் பாடிய அருணகிரி கழுக்குன்ற இறைவனையே முருகனாக உருவகித்து பாடல்கள் பாடியுள்ளார். இத்தலத்தில் விருட்சம் வாழை. அதையே 'கதலி வனமேவுப் பெருமாளே' எனப் பாடுகின்றார். சமணரோடு போர் புரிந்து வென்றதை, புனைலேதிரேற சமணர் கழுவேற பொருதகவி வீரகுருநாதர் என பாடுகிறார். கழுகுகள் வந்து உணவு உண்பதை 'கழுகு தொழு வேதகிரி' எனக் கூறு கின்றார்.

மலைமீதுள்ள வேதகிரீசரை முருகனாக எண்ணி

''மழுவுழைக பாலடமரகத்ரி சூல
மணிகரவி கோதரருள் பாலா
மலரயனை நீடுசிறை செய்தவன் வேலை
வளமை பெறவே செய் முருகோனே
கழுகு தொழு வேதகிரி சிகரிவீறு
கதிருலவு வாசல் நிறைவானோர்
கடலொலிய தான மறைதமிழ் கேளாது
கதலி வன மேவுப்பெருமாளே''

எனச் சிறப்பிக்கின்றார். இறைவனே வேத உருவமாக நிற்பதை 'வேதபொறபில்' என்கிறார். இத்தலத்து இறைவனிடம் புத்தி, பெற, தெளிவு பெற, ஆறெழுத்து மந்திரத்தை எப்போதும் நினைக்க போன்ற தலைப்புக்களில் பாடல்களைப் பாடியுள்ளார்.

சேக்கிழார்:

பெரிய புராணம் இற்றியவர். தன் நூலில் கழுக்குன்றத்தைப் பற்றி பாடுகிறார்.

'திருக்கழுக்குன்றத்தமர்ந்த செங்கைத் தனிக்குன்றைப்
பெருக்க
வளர்காதலினால் பணிந்தெழுந்து பேராத கருத்தினுடன்
'காதல் செய்கோவில் கழுக்குன்று' எனத் திருப்பதிகம்
புனைந்தருளிச் சிந்தை நிறை மகிழ்வுற்றார்

என பெரியபுராண உரை ஆசிரியர் சேக்கிழார், மாணிக்கவாசகரை எழுத ,

அம்புபொன்வார் குழற் கொடிச்சியருடன் அரமகளிர்
வம்பு மாமலர்ச்சுனை பழந்தாடு நீள்வரைப்பின்
உம்பர் நாயகர் திருக்கழுக்குன்றமும் உடைத்தால்
கொம்பர் வண்டு சூழ் குறிஞ்சி செய்தவங்குறை உளதோ

எனச் சிறப்பிக்கிறார்.

பாலருவாயர் இறைவனைப் பற்றிக் கூறுகையில் 'வானக வையகத்தார் தொழுதேத்தும் கானகத்தான்' என்றும் 'சிறுதொண்டர் உள்ளம் எல்லாம் உள்கி நின்று ஆங்கே உடன் ஆடும் கள்ளம் வல்லான்' எனப் பாடுகின்றார்.

கண்ணுலதான் காதல் செய்கோவில் கழுக்குன்றை
நண்ணிய சீர் ஞான சம்பந்தன் தமிழ்மாலை
பண்ணியல் பாடிய பத்தும் இவை வல்லார்
புண்ணியராய் விண்ணவரோடும் புகுவாரே

என்கின்றார்

பட்டினத்தாரும் இவ்விறைவனைப் பற்றி பாடல் புனைந் துள்ளார்.

இயற்கை வளத்தைப் பாடிய பின்னர் இறைவனது மேன்மையை விளக்குகின்றார்.

காடோ செடியோ? கடற்புற மோகனமே மிகுந்த
நாடோ? நகரோ? நகர் நடுவோ? மே மிகுந்தவீடோ?
புறத்திண்ணையோ? தமியேனுடன் வீழுமிடம்
நீடோய் கழுக்குன்றிலீசா? உயிர்துணை நின்பதமே

என்கின்றார்.

சிவபோக சாரத்திலும் கழுக்குன்றத்தைப் பற்றி பாடப் பட்டுள்ளது.

ஆசையறாய் பாசம் விடாய் ஆனசிவ பூசை பண்ணாய்
நேசமுடன் ஐந்தெழுத்தை நீ நினையாய் சீசி
சினமே தவிராய் திருமுறைகள் ஓதவே
மனமே உனக்கென்ன வாய்?

என்றும்,

கூற்றார் அழுமுன்னே ஊரார் தடுமுன்னே
திருக்கழுக்குன்றத் தானையேக் கூறு

என புகழ்கின்றார்

சொக்கநாதப்புலவரால் பாடப்பட்ட தனிப்பால் திரட்டுகளில் கழுக்குன்ற இறைவனைப் பற்றிப் பாடப்பட்டுள்ளது. இறைவனை வைவது போல வைது இறைவனது மேன்மை பெறப்படுகின்றது.

''அடிபட்டீர் கல்லாலும் எறிபட்டீர்
அத்தனைக்கும் ஆளாயந்தப்
படிமட்டும் போதாமலுதை பட்டீர்
இப்படியும் படுவாருண்டோ?
முடிபட்ட சடையுடையீர் கழுக்குன்றீர்
முதற்கோணல் முட்டக்கோணல்
இடிபட்டும் பொறுத்திருந்தீர் சிவசிவா
உம்மை தெய்வமென்னலாமே

என இறைவனின் திருவிளையாடல்கள் அனைத்தையும் தொகுத்துக் கூறியுள்ளார். இறைவனது மகிமையையும் கழுகுகள் வந்து உணவு உண்ணும் மேன்மையையும், ''மாடேறு தாளு மதியேறு சென்னியும் மாமலரோன் ஓடேறு கையும் உடையார் தமக்கிட மோங்கிய நெற் சூடேறு சங்கஞ்சொரி முத்தை முட்டையென்றே கமலக் காடேறுமன்னம் சிறகால் அணைக்குங் கழுக்குன்றமே என பாடுகிறார்.

கழுக்குன்றக்கோவை:

சோமசுந்தர கவிராயரால் பாடப்பெற்றது. இந்நூலாசிரியர் தலப் பெருமைகளை ஆங்காங்கே எடுத்துரைக்கிறார். இத்தலத்து

இறைவனுக்கு மலைமருந்து என்ற பெயர் உண்டென்பதை 'வளை யவன்போற்றும் பிரான் கழுக்குன்றின் மருந்தே' என்றும் கள்ளம் வல்லான் எனும் பெயரை' புல்லர் தம் மனத்திற் கள்ளத் தவன் கழுக்குன்றே' எனவும் கூறுகின்றார். பெண்ணின் நல்லாள் என்ற அம்மையின் பெயரை

'உலகருள் பெண்ணினல்லாளொருந்தோய்ந்த பெம்மான்' என்கின்றார். வேதங்களே அரனாக நிற்பதை 'மறைத்திண்கிரி', 'வேதவெற்பார்' என்கின்றார்.

சங்குத் தீர்த்தத்தில் சங்கு பிறப்பதை,

'வலம்புரி சங்குறு தீர்த்தத்தன் பாற
பாசமொடுங்கப் படிவோர்க்கருள் செய்பரமன்'
என்றும் தன் நூலில் பாடியுள்ளார்.
திருக்கழுக்குன்றத்து உலா : - அந்தக கவி வீரராகவ
முதலியாரால் பாடப்பெற்றது.
வேதங்கள் அரணக நிற்பதை
'தன்னை மறையின் சயிலம்'
'சீர்பூத்த வேதங்களெல்லாம் திருமலையா
ஏர்பூத்த ஞாலத்திருத்தினான்'

என்கிறார். தலத்து இறைவனுக்கு பொன்னிட்ட நாதர் என்ற பெயருண்டு என்பதை,

'திசை முழுதும் பொன்னிட்டாரென கைக்கோ தீயேம்
மிசை முழுதும் பொன்னிட்டு விட்டீர்'

என்றுப் பாடியுள்ளார்.

க்ஷேத்திர பிள்ளைத் தமிழ் என்ற நூலும் கழுக்குன்றத்தின் புகழை விவரிக்கின்றது.

கழுகாசல சதகம்:

இந்நூலின் முழுபிரதி கிடைக்கவில்லை இதை இயற்றியது யாரென்றும் தெரியவில்லை. சுரகுரு என்னும் மன்னன் மாமல்ல புரத்தை ஆட்சிபுரிந்தவன். அவன் தொழுநோயால் நலிய கழுக்குன்ற இறைவனை வணங்கி நோய் நீங்கப் பெற்றான் என

சென்னை-5.

புராணங்கள் கூறுகின்றன ஓலைச்சுவடிகளிலும் திருக்கழுக்குன்ற பூர்வராசாக்கள் பட்டியலிலும் இவன் பெயர் உள்ளது.

சிலேடை வெண்பா :

கழுக்குன்ற இறைவன், இறைவியை தலைவன் தலைவி யாக உருவகித்து இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இது தவிர வேதகிரீசர் பதிகம், மலைமருந்து பதிகம் போன்ற பல நூல்கள் உள்ளன. இக்கோயிலுக்கு அந்தகக் கவி வீரராகவ முதலியார் தலப் புராணம் எழுதியுள்ளார்.

இதுகாறும் காட்டப்பட்டுள்ள தமிழ் இலக்கியங்கள் தவிர இத்தலத்தைப் பற்றிய சமஸ்கிருத இலக்கியங்கள் ஏராளமாக உள்ளன.

திருக்கழுக்குன்ற தலப் புராணம் :-

பாடல் வடிவிலுள்ள இந்நூலை எழுதியவர் அந்தககவி வீரராகவ முதலியார் அழகிய பாடல் வடிவில் அமைந்துள்ளது. முதலில் எல்லா தெய்வங்களையும் வணங்கி துதிபாடுகிறார். பின் நாட்டு வளமும் நில வளமும் பாடுகிறார்.

வேதகிரீசரைப் பாடுகையில்,

சீர்பூத்த உருவகை நான்கு, அருவகை நான்கு,
இருவகையின் செயற்கை ஒன்றாய்,
ஏர் பூத்த நவப்பொருட்கும் முதற்பொருளாம் ஒரு பொருள்
வந்து, எம்மைக் காப்பான்
வேர் பூத்த கிளைகிளைத்து மெய்ஞான மனம் பொதுளி
வெளிநின்றோங்கும்
சூர் பூத்த ஓதம் அலை வேத மலைக் கொழுந்தை, முடிசூடிக்
கொள்வோம்.

என்கிறார்

இங்ஙனம் கழுக்குன்றத்தைப் பற்றிய பல இனிய கருத்துக் களை நமக்கு அவர் நூல் கூறுகிறது. இதுபோல கழுக்குன்றத்தைப் பற்றி பேசும் இலக்கியங்கள் எத்தனை எத்தனையோ!

திருக்கழுக்குன்றம் – கட்டடக்கலை

திருக்கழுக்குன்றக் கோயில் கட்டடக் கலையிலும் சிறப்பான இடத்தைப்பெற்றுள்ளது. ஒரே கோயிலினுள் எல்லாவிதமான கட்டட அமைப்புகளும் காணப்படுகின்றன. ஒவ்வொன்றும் தனித் தனி கலைப்பாணியை விளக்குகின்றன. அவை 1. குடைவரைக் கோயில் 2. திருக்கற்றளி 3. கட்டப்பட்ட கோயில்கள் 4. மண்டபங் கள் போன்றவை.

ஒற்றைக்கல் மண்டபம் இவ்வகையைச் சார்ந்தது. எளிமை யான குடவரைக் கோயில் வேலைப்பாடுகள் ஏதுமின்றி இருநீண்ட செவ்வக கூடங்களை தன்னிடத்தேக்கொண்டுள்ளது. போதிகை யும் மூன்று பட்டைகளுடன் காட்டப்பட்டு உத்திரத்துடன் இணைக் கப்பட்டுள்ளது. கருவறையில் சிவலிங்கமும் அதன் இருபுறம் ஒரே அளவுள்ள கோட்டங்கள் அமைக்கப்பட்டு அவைகளில் விஷ்ணு, பிரம்மன் ஆகியோர் உள்ளனர். கருவறையின் வெளிப் புறம் இரு துவாரபாலகர்கள் காட்டப்பட்டுள்ளனர். வெளி அறையில் வடக்கு தெற்கில் இரு தேவர்கள் உருவம் உள்ளன. குடைந்து எழுப்பப்பட்டக் கோயில் கூரை ஏதும் இல்லை. சுற்றிலும் பாறை களால் சூழப்பட்டுள்ள இடத்தில் இக்கோயில் மிக அழகாக குடைவிக்கப்பட்டுள்ளது. இதன் அழகை பன்மடங்கு அதிகப் படுத்திக் காட்டுகின்றது.

மலை மீதுள்ள வேதகிரீஸ்வரர் கோயிலும் கல்வெட்டுகளில் திருக்கற்றளி எனப்படுகிறது. இதுவும் முழுதும் கற்களால் அமைக்கப் பட்டது. இக்கோயிலும் ஒற்றை கல் மண்டபமும் பல்லவர் காலத்தி லேயே கட்டப்பட்டிருக்கக் கூடும். சிங்கத் தூண்களும் இயற்கை யாக குடைவிக்கப்பட்ட கோயிலும் மிக அழகாக உள்ளன. இவ்விரு கோயில்களும் மாமல்லபுர கோயில்களின் கலைப்பாணியை நன்கு பிரதிபலிக்கின்றது. ஒற்றைக்கல் மண்டபம் மாமல்லபுர பஞ்ச பாண்டவ இரதங்கள் போன்றே உள்ளன. வேதகிரீசர் கோயில் காஞ்சியைக் கைலாசநாதர் கோயில் கட்டிய இராஜசிம்மப் பல்லவ னால் கட்டப்பட்டது.

மலைக் கீழுள்ள ஆதித்தன் கால கோயில் வட்ட வடிவ முடையது இங்கு காட்டப்பட்டுள்ள பூதவரிக்கு இணையாக எதுவுமே கூற இயலாது. பூதங்கள் அனைத்தும் ஒரே அளவில் அத்துணை அழகாகக் காட்டப்பட்டுள்ளன. கோயில் தூங்கானை வடிவிலுள்ளது. விமானம், ஸ்தூபி போன்றவற்றை தன்னகத்தே கொள்ளாமல் கூரை சாதாரணமாகக் காட்சி அளிக்கிறது. தேவக் கோட்டங்களில் உள்ள உருவங்கள் அனைத்தும் உயிரோவியங் களோ எனக் கூறும் அளவுக்கு அழகாக அமைந்துள்ளன. இக் கோயில் ராசகேசரி ஆதித்தனால் கட்டப்பட்டது.

கிழக்கு நோக்கி அமைந்துள்ள பக்தவத்சலர் கோயிலும் திரிபுர சுந்தரி அம்மன் கோயிலும் 13ம் நூற்றாண்டில் ஜடாவர்மன் சுந்தரப் பாண்டியனால் கட்டப்பட்டவை. இவற்றில் பிற்கால சோழர் கலைப்பாணி நன்கு தெரிகின்றது. அதற்கு ஏற்றவாறு கருவறை யில் போக சக்தி அம்மன் சிலை வைக்கப்பட்டுள்ளது. பின்னர் வந்த விஜயநகர மன்னர்களும் சம்புவராய மன்னர்களும் இக் கோயிலுக்கு பல திருப்பணிகளைச் செய்துள்ளனர். கோயில் இவர்களின் காலத்தில் பழுது பார்க்கப்பட்டது. 18ம் நூற்றாண்டில் முன் மண்டபங்கள், ஆமை மண்டபம் போன்றவை கட்டப் பட்டன. இவை சீரங்கத்திலுள்ள குதிரை மண்டபச் சிற்பங்களை நினைவுப்படுத்துகின்றன.

கோயிலின் முன்னுள்ள நாலு கால் மண்டபமும், பதினாறு கால் மண்டபமும் 20 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை.

நான்கு கால் மண்டபம்:

ராஜ கோபுரத்தின் நேர் எதிரிலுள்ளது. நான்கு கால்களாகிய தூண்களைக் கொண்டுள்ளது. தூணை பூதங்கள் தாங்கிக் கொண் டிருப்பது போல உள்ளன. தூண்களில் விஷ்ணு, பிரம்மன், சிவன் சந்திரசேகரராக, பிக்ஷாடணராக, நடராஜராக, பைரவராகக் காட்டப் பட்டுள்ளனர். சிலவற்றில் நாட்டிய மகளிர் உருவமும் சிலவற்றில் துவாரபாலகர் உருவங்களும் உள்ளன.

பதினாறுகால் மண்டபம்:

நான்கு கால் மண்டபத்துக்கு நேர் இணையாக அமைந் துள்ளது. இம் மண்டபம் நான்கு கால் மண்டபமும் ஒரே காலத்தில்

கட்டப்பட்டிருக்கலாம். இம்மண்டபத் தூண்களில் பிரம்மன், விஷ்ணு, சிவன், தேவி, முருகர், வினாயகர் போன்றோரின் உரு வங்கள் உள்ளன.

கோயில் விதானத்தில் 20ம் நூற்றாண்டு ஓவியங்கள் உள்ளன. கோயிலின் நாற்புறமும் ஓவியங்கள் உள்ளன. கிழக்குப் புறத்தில் சுகாசன மூர்த்தியும் மேற்கில் ஞான தக்ஷிணாமூர்த்தியும் வடக்கில் பிரம்மனும் தெற்கில் விஷ்ணுவும் காட்டப்பட்டுள்ளனர்.

சிற்பக் கலை :

சிற்பக்கலையிலும் இக்கோயில் சிறப்பானதொரு இடத்தைப் பெற்றுள்ளது. தற்பொழுது ஆபரணக் கொட்டடியாக விளங்கும் அதித்தன் கோயிலிலுள்ள சிற்பங்கள் மிக அழகு வாய்ந்தவை. மகிஷாசுரமர்தினி, பிரம்மன், விஷ்ணு, ஞான தக்ஷிணாமூர்த்தி, வினாயகர் போன்றவை அதற்குரிய இடங்களில் வைக்கப்பட் டுள்ளன. ஆதித்தன் கால வினாயகர் இக்கோயிலில்தான் இத்துணை அழகுடன் காட்டப்பட்டுள்ளது.

பக்தவத்சலர் கால கோயிலுள்ள சிற்பங்களும் திரிபுர சுந்தரி அம்மன் கோயிலிலுள்ள சிற்பங்கள் பாண்டியர் கலைப் பாணியை எடுத்துரைக்கின்றன. வாயிலில் அமைந்துள்ள வீரபத்ரர், மகிஷாசுர மர்த்தினி சிலையும் 18ம் நூற்றாண்டு கலைப்பாணியை விளக்கு கின்றன. இக்கோயிலிலுள்ள துவார பாலகர்களின் எண்ணிக்கை கணக்கில் அடங்கா. ஒவ்வொன்றும் ஒரு வித அழகுடன் மிளிர் கின்றது. ஆதித்தன் கோயிலிலுள்ள துவாரபாலரும் பக்தவத்சலர் கோயிலின் வாயிலிலுள்ள துவாரபாலரும் வெவ்வேறு காலத்தைச் சார்ந்ததாக இருப்பினும் மிக அழகுடையவை.

குடைவரைக் கோயில்

ஒரு கல் மண்டபம் என்ற பெயரே இம் மண்டபம் முழுதும் கல்லால் ஆனது என்பதைத் தெரிவிக்கின்றது. மலை மீது ஏறும் படிக்கட்டுகளின் எதிர்திசையிலும் அதாவது இறங்கும் வழியிலுள்ளது. மலையை வலம் வருபவர்கள் இம்மண்டபம் வழியாகத் தான் செல்ல வேண்டும். ஊர் மக்களால் ஒரு கல் மண்டபம் என அழைக்கப்படும் இம்மண்டபம் இன்று வழிபாடின்றி இருக்கிறது. இருப்பினும் மலைமீது ஏறுபவர்கள் இறங்கி வருகையில் ஒரு கல் மண்டபத்திலுள்ள இறைவனை அதன் பெருமை அறியாது தொழுது செல்கின்றனர். மலையை விட சற்று உயர்ந்த மட்டத்திலுள்ளது. 3 அடி உயரத்திலுள்ள படிக்கட்டுகள் மீது ஏறிச் சென்றால் இம்மண்டபத்தை அடைய முடியும். கோயில் சுமார் 9 அடி உயரத்திலுள்ளது. வடபுறமும் தென்புறமும் சோபான படிக்கட்டுகள் சுருள் யாழி வடிவில் உள்ளன. படிக்கட்டுகள் இருபுறமும் அமைக்கப்பட்டு பின் அவை இணையுமிடத்தில் ஒரு மேடை போன்ற அமைப்பு காணப்படுகின்றது. அதிலிருந்து ஒரு அடி உயரத்தில் ஒரு நீண்ட செவ்வக அறை ஒன்று காணப்படுகின்றது. அதற்கு இணையாக மற்றொரு நீண்ட செவ்வக அறை உள்ளது. நடுவில் கருவறையில் கிழக்கு திசையில் லிங்கம் அமைந்துள்ளது. முதல் அறையின் முக மண்டபமும் அடுத்த அறையின் அர்த்த மண்டபமும் அருகருகே ஒன்றையொன்று நோக்கியுள்ளன. இரண்டாவது அறையில் சம அளவுள்ள முப்பட்டை தூண்கள் இரண்டு உள்ளன. இரு தூண்களுக்கிடையிலுள்ள இடைவெளி சமமாக உள்ளது. தூண்களில் வேலைப்பாடு ஏதுமின்றி சாதாரணமாகக் காணப்படுகின்றது. தூணின் மீதுள்ள போதிகை வேலைப்பாடின்றி மூன்று பட்டைகள் மட்டும் காணப்படுகின்றன. தூண்கள் 9, 10 அடிகள் உயரமிருக்கும். வாயில் மூன்று வாயில்களை உடையதாகப் பகுக்கப்பட்டுள்ளது. முன் மண்டபத்தில் இரு தூண்களும் அர்த்த மண்டபத்தில் இரு தூண்களுமாக நான்கு தூண்கள் மண்டபத்தைத் தாங்கி நிற்கின்றன. தூண்கள் வேலைப்பாடின்றி முற்கால பல்லவர் பாணியைப் பறைசாற்றுகின்றன. இரு தூண்கள் நேராக நிற்க இரு தூண்கள் மேலுள்ள பிரஸ்தரத்தைத் தாங்கி நிற்கின்றன. தூண்கள் மூன்று

பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் இரண்டு அடி பரப்புள்ள சதுரமாக விளங்குகின்றன. போதிகை 45° வளைந்து காணப்படுகின்றது. மேலுள்ள கூரை கீழுள்ள அமைப்புக்கேற்றபடி அதே அளவில் வேலைப்பாடின்றி காணப்படுகின்றது.

சிலைகளின் அமைப்பு :

இச்சிற்பங்கள் சுமார் 10 அடி உயரமிருக்கும். உயிர் ஓவியங்களோ என நாம் வியக்கும் அளவுக்கு அழகாக உள்ளன. இருவருக்கும் மனிதர் போன்று இரு கைகளே உள்ளன. தெற்கு வடக்கில் ஒரே பாவத்தில் நிற்கின்றனர். இருவருக்கும் ஒரேமாதிரி ஆடை, ஆபரணங்கள் போன்றவை உள்ளன. திரிபங்கத்தில் நின்ற நிலை. வடக்கிலுள்ள சிற்பம் வலக்கையில் விஸ்மய முத்திரையையும் இடக்கையில் கடி ஹஸ்தத்தையும் காட்டி நிற்கிறார். தெற்கிலுள்ள சிற்பம் இடக்கை விஸ்மயத்திலும் வலக்கை கடி ஹஸ்தத்திலும் காட்டி நிற்கிறார். இருவரும் தடித்த முப்புரி நூல் அணிந்துள்ளனர்.இந்த முப்புரி நூல் மட்டும் இல்லாவிடில் இது அரசனின் திருஉருவமாக இருக்குமோ என நம்மை எண்ண வைக்கும். வடபுறத்திலுள்ள சிற்பம் இடக்காதில் பெரிய பத்ர குண்டலத்தையும் வலக்காதில் பல மகரங்கள் கோர்க்கப்பட்ட மகர குண்டலத்தையும் அணிந்துள்ளார். தெற்குப்புற சிற்பம் இடக்காதில் மகரங்கள் கோர்க்கப்பட்ட மகர குண்டலமும் வலக்காதில் பத்ர குண்டலமும் அணிந்துள்ளார். இருவரும் ஜடாமகுடம் அணிந்துள்ளனர். கழுத்தில் ஆரமும் கைகளில் வளைகளும் காப்புகளும் தோளில் வாகுவலயமும் அணிந்துள்ளனர். உதரபந்தமும் காணப்படுகின்றது. தடித்த முப்புரிநூல் வலக்கை மீது ஏறிச் செல்கிறது. இடுப்பில் ஆடை இறுக்கமாகக் கட்டப்பட்டு இருபுறமும் விசிறி போன்று முடிச்சு போடப்பட்டுள்ளது. ஆடையும் வளைவு வளைவாகக் காட்டப்பட்டுள்ளது. இச்சிற்பங்கள் மிகவும் எழிலுடன் விளங்குகின்றன.

அர்த்த மண்டபத்தின் தரை மட்டம் முக மண்டபத்தின் தரைமட்டத்தைக் காட்டிலும் இரு அங்குலம் உயர்ந்து காணப்படுகின்றது. இரு மண்டபங்களிலும் உள்ள தூண்கள் ஒரே அளவே உள்ளன. மேலுள்ள கூரையை ஒரே அளவில் நிறுத்த தூண்களின் மேல் ஒரு சிறு கனமான பகுதி (வஜ்னம்) வைக்கப்பட்டுள்ளது. இதுவே சற்று தாழ்ந்துள்ள அர்த்த மண்டபத்தின் உயரத்தை ஈடு

செய்கின்றது. இதனால் முகமண்டபமும் அர்த்த மண்டபமும் ஒரே உயரத்தில் நிறுத்தப்பட்டு மேலுள்ள கூரையும் ஒரே உயரத்தி லுள்ளது. மேலுள்ள பகுதியும் வேலைப்பாடின்றி காட்டப்பட் டுள்ளது. அர்த்த மண்டபத்தின் இருமுனையிலும் முகமண்டபம் போன்று சிற்பங்கள் ஏதும் இல்லை.

அர்த்தமண்டபத்தின் பின்பகுதியில் கருவறையின் முன்புறம் சற்று முன்னோக்கி உள்ளது. எனவே கருவறை உள்ள இடம் மட்டும் கோயில்கள் பெற்றுள்ள அதிஷ்டானம், பித்தி, கண்டம், குமுதம், பிரஸ்தரம், கபோதம் போன்ற அமைப்புகளைப் பெற்றி ருக்கவில்லை. கருவறையும் ஒரே அளவுள்ள மூன்று கோட்டங் களாகப் பகுக்கப்பட்டுள்ளன. நடுவிலுள்ள கருவறைக்கு (கிழக்கு நோக்கியுள்ளது) ஒருவாயில் உள்ளது. இவ்வாயிலுக்கும் சோபான படிக்கட்டுகள் உள்ளன. கருவறை அர்த்த மண்டபத்தை விட உயர மாக உள்ளதால் அங்கும் இருபுறமும் சோபான படிக்கட்டுக்கள் தெற்கு வடக்கில் அமைந்துள்ளன. இவை கோயிலின் அதிஷ் டானம் முதல் தொடங்கி கடைசிப் படியின்கீழ் ஒரு அரைவட்டம் போன்று செதுக்கப்பட்டுள்ளது. படிகட்டுகளின் இருபுறமும் சுருள் யாழி போன்ற கைப்பிடி அமைக்கப்பட்டுள்ளது. இப்படிகளில் ஏறி கருவறையை அடையலாம். கருவறையின் முற்பகுதி 10½ அடிநீளமும் 1 அடி 9 அங்குலம் அகலமும் உடையது. மேல் பகுதியில் போதிகைகள் நேராக வைக்கப்பட்டுள்ளன. போதிகைகள் அமைந்துள்ள தூண்களும் மேலுள்ள விதானம் போன்று வேலைப் பாடின்றியே உள்ளன. கோயிலின் கட்டடத்தில் (கருவறை நீங்க லாக) அதிட்டானம், உபானம், குமுதம், கண்டம், பட்டிகை, சுவர் போன்ற அமைப்புகள் காணப்படுகின்றன. தூண் அமைந்துள்ள போதிகையின் மேல் கூடு போன்ற அமைப்பு காணப்படுகின்றது.

துவாரபாலர் :

கருவறையின் இரு வாயிலிலும் இரு துவார பாலகர்கள் காட்டப்பட்டுள்ளனர். இருவருக்கும் இரு கைகளே காட்டப்பட் டுள்ளன. இருவரின் முகமும் பக்கவாட்டில் சாய்ந்து திரும்பி காணப் படுகின்றது. திரிபங்கத்தில் நின்றநிலை. யக்ஞோபவீதம் வலக்கை யின் மீது ஏறிச் செல்கிறது. இருவருக்கும் கோரை பற்கள் காட்டப் பட்டுள்ளன. தலையில் மகுடம் உள்ளது. வலப்புறத்திலுள்ள துவாரபாலா வலக்காலை கதை மீது ஊன்றி நிற்கிறார். இடப்புறத் திலுள்ள துவாரபாலர் இடக்காலை கதை மீது ஊன்றி நிற்கிறார்.

இருபுறமும் முடிச்சு போன்ற அமைப்பு காணப்படுகின்றது. கைகளில் வளைகள், காப்புகள் உள்ளன. கழுத்தில் ஹாரம், தோள்களில் வாகுவலயம், இடுப்பில் கடி பந்தம் போன்றவை உள்ளன. வலது புறம் உள்ள துவார பாலர் வலதுகையை கதை மீதும் இடக்கையை கடிஹஸ்தத்திலும் காட்டி நிற்கிறார். இடப்புறமுள்ள துவாரபாலர் இடக்கையை கதையின் மீதும் வலக்கையை கடி ஹஸ்தத்திலும் காட்டி நிற்கிறார். கோரை பற்கள் அவர்களை மனித உருவி னின்றும் வேறுபடுத்திக் காட்டுகின்றன. இருப்பினும் அவர்கள் முகத்தில் காணும் புன்சிரிப்பு நம்மை அயர வைக்கின்றன. அத்துணை அழகுடன் துவாரபாலர் சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது.

கருவறை:

கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. நடுவில் லிங்கம் தரை யினுள் பதிக்கப்பட்டுள்ளது. எனவே ஆவுடையார் தனிப் பகுதியாகக் காணப்படுகின்றது.

கருவறையின் இரு புறங்களிலும் ஒரே அளவுள்ள கோட் டங்கள் காணப்படுகின்றன. வடபுறத்தில் விஷ்ணுவும் தென் புறத்தில் பிரம்மாவும் உள்ளனர். இம்மாதிரியான தனித்தனி கருவறைகள் முதலாம் மகேந்திரவர்மனின் முற்கால கட்டடங் களில் இருப்பது அரிது.

பிரம்மா :

நான்முகங்களில் மூன்று முகங்கள்தான் தெரிகின்றன. பிரம்மனுக்கு நான்கு கைகள் திரிபங்கத்தில் நின்றநிலை, கீழ் வலதுகை கடிஹஸ்தத்திலும் மேல் வலது கையில் கலசமும் கீழ் இடக்கையில் தாமரை மலரும் மேல் இடது கையில் அக்ஷமாலையும் காணப்படுகின்றன. யக்ஞோபவீதம் வலக்கை மீது ஏறிச் செல் கிறது. தலையில் ஜடாபரம். அது பிரம்மனின் காதுகளை மூடி சுருளாகக் காட்டப்பட்டுள்ளது. இம்மாதிரியான பிரம்மனின் சிற்பம் வேறெந்த பல்லவர் கால சிற்பங்களில் இல்லை. காதுகளில் மகர குண்டலம் அது நீள்செவியாக நீண்டுள்ளது. இடுப்பில் இறுக்கமான ஆடை நடுவில் மடிப்பு மடிப்பான அமைப்பு காணப்படுகின்றன.

விஷ்ணு :

நான்கு கரங்கள். திரிபங்கத்தில் நின்ற நிலை. வலது மேற் கையில் பிரயோகச் சக்கரம் கீழ் வலது கையில் சங்கு இடது கீழ்க்

கையில் கடி மேல்கையில் தாமரையும் உள்ளன. கிரீட மகுடம் காணப்படுகின்றது. காதுகளில் பிரம்மனைப் போன்ற மகர குண்டலம். யக்ஞோபவீதம் வலக்கை மீது ஏறிச் செல்கிறது. விஷ்ணுவுக்கு கணுக்கால் வரை ஆடை. இருபுறமும் முடிச்சு போட்டாற் போன்ற அமைப்புக் காணப்படுகின்றது.

நடுவிலுள்ள லிங்கம் சுமார் 6 அடி உயரமுள்ளது. அர்த்த மண்டபத்தில் இருபுறம் பிரம்மா, விஷ்ணு, முக மண்டபத்தில் இருபுறமும் தேவர் சிற்பங்கள் உள்ளன. மகேந்திரவர்மனின் மற்ற குகைக் கோயில்களின்றும் (பல்லாவரம், திருச்சி) இவ்வகை யில் மாறுபட்டு காணப்படுகின்றது. இங்குள்ள உருவங்களும் கட்டட அமைப்பும் மாமல்லையிலுள்ள ஒற்றைக்கல் ரதங்களின் அமைப்பை ஒத்துக் காணப்படுகின்றன. திருக்கழுக்குன்ற ஒற்றைக் கல் மண்டபம் ரதங்கள் கட்டப்பட்ட காலத்தில் தொடங்கியதால் மாமல்லை தருமராஜ இரதத்தை பெரிதும் ஒத்து காணப்படு கின்றது. இம் மண்டபம் முதலாம் நரசிம்மவர்மன் காலத்தில் கட்டப் பட்டது.

ஒற்றைக்கல் மண்டபத்திலுள்ள சிற்பங்களைத் தவிர குறைந்த அகலமுள்ள தூண்கள், வளைந்த வேலைப்பாடற்ற போதிகை, வல்லபி, வஜனம் போன்றவை அமைக்கப்பட்டுள்ளதிலிருந்து ஒற்றைக்கல் மண்டபம் முற்கால பல்லவர் கலைப் பாணியைச் சார்ந்தது என எண்ண இடமளிக்கின்றது. மாமல்லையிலுள்ள ரதங்களுக்கு ஒற்றைக்கல் மண்டபம் முன்னோடியாத் திகழ்ந்தது எனலாம்.

ஒற்றைக்கல் மண்டபத்திலுள்ள லிங்கமே மூலஸ்தான லிங்கம் என்ற கருத்து நிலவுகின்றது. இங்குள்ள கல்வெட்டு 'மூலஸ் தானத்துப் பெருமானடிகள்' எனக் குறிக்கின்றது.

ஒற்றைக்கல் மண்டபத்திலுள்ள கல்வெட்டு தொண்டை மண்டலத்தில் வாதாபி வெற்றியை விளக்கும் ஒரே சான்று. நரசிம்மன், வாதாபியில் தன் வெற்றியைக் குறிப்பது போல திருக்கழுக்குன்றத்திலும் எழுதி வைத்துள்ளான். இக்கல்வெட்டு தமிழும் வட்டெழுத்தும் கலந்த எழுத்தில் உள்ளது. எனவே தொல் லெழுத்து முறைப்படிப் பார்த்தாலும் இக்கல்வெட்டு ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றது. நந்திவர்மன்' தெள்ளாற்றெறிந்த நந்தி வர்மன்' என குறிப்பது போல முதலாம் நரசிம்மவர்மனை 'வாதாபி கொண்ட நரசிங்கப் போத்தரசர் வைத்தது' என குறித்துக் கொள்கிறான்.

இக்கல்வெட்டு தவிர வேறெந்த பிற்காலப் பல்லவர் கல்வெட்டுகள் ஏதுமில்லை.

ஒற்றைக்கல் மண்டபத் தூண்களில் டச்சுக்காரர்களின் கையெழுத்து தேதிகளுடன் எழுதப்பட்டுள்ளன. இவர்கள் மலை மீதுள்ள கோயிலை வணங்கியதாகவும் கழுகுகள் உணவு உண்பதை கண்டு வியந்ததாகவும் வரலாறுகள் கூறுகின்றன.

ஒற்றைக்கல் மண்டபத்தை தன் வெற்றியின் சின்னமாக கட்டிய பின் தன் முன்னே ஸ்கந்தசிஷ்யன் கட்டிய கோயிலுக்குக் கொடை கொடுத்த அக்கோயிலிலுள்ள இறைவனை (ஈசன்) தன் கோயிலிலும் பிரதிட்டை செய்துக் கொண்டான்.

கல்வெட்டுகள் :

நரசிம்மவர்மனின் கல்வெட்டு, 'திருக்கழுக்குன்ற நாட்டு மலைமேல் மூலஸ்தான பெருமானடிகள்' என வருகின்றது. வழிபாட்டுப்புரமாக இக்கோயிலைக் கட்டினான் எனவும் கூறு கின்றது. ஊரின் பெயரையே இறைவனுக்கும் வைத்தல் அக்கால மரபு.

குடைவரையின் நீளம் - 21 அடி 6½ அங்குலம்

பின் சுவரின் ஆழம் - 26 அடி 2 அங்குலம்

வாயிலின் முன் ஆழம் - 17 அடி 4 அங்குலம்

பிரம்மா, விஷ்ணு கருவறைகளின் ஆழம் - 18 அடி 6 அங்குலம்

குடைவரையின் உயரம் - 8 அடி 5½ அங்குலம்.

வேதகிரீசர் கோயில்

மலைமீதுள்ள வேதகிரீசர் கோயில் அல்லது திருமலைக் கோயில் கீழிருந்து 1500 அடி உயரத்திலுள்ளது. வேதங்களே மலையாக நிற்பதால் மலை வேதகிரி என்றும் இறைவன் வேதகிரீசர் என்றும் அழைக்கப்படுகின்றார். வேதத்தின் கம்பீரம் போல மலையும் உயர்ந்து நிற்கின்றது. இறைவனை வேண்டிக் கொண்டதன் பேரில் வேதங்கள் இங்கு மலையாக இருக்கச் செய்து ஈசன் அதன் மீது வீற்றிருக்கிறார். ரிக்வேதம் மலையின் வேராகவும் யஜீர் வேதம் மத்ய பாகமாகவும் ஸாம வேதம் மேற்புறமாகவும் அதர்வண வேதத்தை அதன் சிகரமாகவும்இருக்கச் செய்து ஈசன் அதன் மீது வீற்றிருக் கிறார். வேத மலையின் மீது இறைவன் வீற்றிருப்பதும் நான்கு வேதங்களால் இறைவனைப் பூஜிப்பதிருப்பதும் இம்மலையின் மேன்மைக்கு உதாரணங்களாகும். இம்மலையை வலம் வருவதின் மூலம் தீரா நோய்களின்று விடுபடுகின்றனர். மலையினது மண்ணும் காற்றும் மக்களின் தீராத நோய்களைத் தீர்த்து வைக்கின்றன. ஒரு முறை மலை மீது ஏறினால் அப்பாவம் நீங்க மலையை வலம் வர வேண்டும். எனவேதான் வேதத்தை அவமதிக்க எண்ணாமல் மலையின் புனிதத் தன்மை கெடாமலிருக்க கீழிருந்த படியே பாடிச் சென்றனர் நால்வர். முப்பத்து முக்கோடித் தேவர்களும், பிரம்மா, விஷ்ணு, கோடி ருத்ரர்கள் ஆகியோர் பூசித்த இடம்.

இறைவனின் மாண்பு :

இவ்விறைவனின் மாண்புகளைப் பற்றி ஏராளமான கதைகள் தல வரலாற்றில் கூறப்படுகின்றன.

பிரம்மன் பூசித்த தெய்வம் :

சாவித்திரி, பாரதி என்ற தனது இரண்டு மனைவியர்களில் பாரதியிடம் அதிகப் பற்று உடையவனாய் பிரம்மன் இருத்தலைக் கண்ட சாவித்ரி, ‘வேதங்கள் உம்மை விட்டு நீங்கட்டும்’ என சபிக்க அதன்படி வேதங்கள் நீங்கப் பெற்று மது, கைடபர் எனும் அரக்கர்களிடம் சிக்கி மிகவும் துன்பப்பட்டார்.அப்போது மஹா விஷ்ணு வேதமலை மீது வீற்றிருக்கும் வேதகிரீசரைத் தொழுது

உமது சாபம் நீங்கப் பெறுவீர் என உணர்த்தினார். அதன்படியே பிரம்மனும் வேதகிரி ஸ்தலம் வந்து இறைவனைப் பூசித்து இறைவன் அருளால் தனது சாபம் நீங்கப் பெற்று வேதங்களுடனும் சாவித்திரி யுடனும் சத்தியலோகம் போய்ச் சேர்ந்தார். அதனால்தான் இந்த ஸ்தலம் பிரமபுரி எனும் பெயர் பெற்றது என்பர்.

மஹாவிஷ்ணு பூசித்த இறைவன்:

தேவர்கட்கு தொல்லை கொடுத்து வந்த அரக்கர்களை அழிக்கப் புறப்பட்டார் மஹா விஷ்ணு. அப்போது வந்த அரக்கர்கள் பிருகு முனிவரின் ஆசிரமத்தில் ஓடி ஒளிந்து கொண்டனர். முனிவர் ஆசிரமத்தில் இல்லாத சமயத்தில் அரக்கர்களைத் தன்னிடம் ஒப்படைக்குமாறு விஷ்ணு, முனிவரின் மனைவியிடம் கேட்டார். என்னிடம் சரண் அடைந்தவர்களை நான் காட்டிக் கொடுக்க முடியாது என முனி பத்தினி கூறவே, விஷ்ணு தனது சக்ராயுதத் தைப் பிரயோகித்து அரக்கர் கூட்டத்தோடு, முனிவரது ஆசிரமத் தையும் முனிபத்னியையும் எரித்துவிட்டார். இதை அறிந்த பிருகு முனிவர் விஷ்ணுவைப் பார்த்து ‘சரண் புகுந்தவர்களைக் காத்த எனது மனைவியை அழித்தமையால் நீர், ராமாவதாரத்தில் மனைவி யைப் பறிகொடுத்து வருந்தக் கடவீர்’ என்று சபித்தார். இந்தப் பழி தீர்ந்ததை எண்ணி, தனது கால் விரலை பூமியில் ஊன்றிய போது, கங்கை பிரவஹித்து வந்தது. அந்த நீரை இறந்தவள் மீது தெளிக்க, அவள் உயிர் பெற்று எழுந்தாள். முனிவர் மகிழ்ந்து ‘நான் கொடுத்த சாபம் ராவண வதம் செய்து, சீதையை மீட்டு வர உதவட்டும். ஸ்தீரியைக் கொன்ற பாவம் நீங்க நீர் வேதகிரிக்கு வந்து இறைவனை நோக்கித் தவம் செய்ய வேண்டும்’ எனக் கூறவே அதன்படி மஹாவிஷ்ணு, இங்கு வந்து வேதகிரிநாதனை பலவாறு புகழ்ந்து பூசித்து தனது பாவம் நீங்கப் பெற்றார் என புராணங்கள் கூறுகின்றன. நாராயணன் பூசித்தமையால் வேதகிரி ஸ்தலத்துக்கு நாராயணபுரம் என்ற பெயரும் ஏற்பட்டது.

ருத்ரர்கள் பூசித்த இறைவன்:

ருத்ரர்கள் தம் பாவம் நீங்க அவர்கள் தவம் இயற்ற அதனால் அந்த க்ஷேத்திரத்திற்கு ருத்ர கோடி க்ஷேத்ரம் என்ற பெயர் ஏற்பட்டது.

இந்திரர்கள் பூசித்த இறைவன்:

தேவேந்திரன் பனிரெண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை தனது கர்ம நிவர்த்திக்காகவும் உயர் பதவிக்காகவும் பூஜிக்கிறான் என்பர். அப்பூஜை நீர் இடி விழுதல் மூலம் நடக்கிறது. 12 ஆண்டுக்கு ஒரு முறை இந்த இடி இறைவனுக்கு அருகாமையில் விழுந்து, இறைவனை வலம் வந்து சென்று விடுகின்றது. இந்திரன் இறைவனை நோக்கிப் பூஜை செய்யும் இன்னிகழ்ச்சி, மிகுந்த வியப்பூட்டும் ஒரு நிகழ்ச்சியாகும். இவ்வாறு இடி விழுங்கால் அங்கிருந்து தீர்த்த பாத்திரம் சிறிது ஊனமடைந்திருப்பதை இன்றும் காணலாம்.

அடியார்களை பாடிய அமலன் :

தன்னிகரற்ற தெய்வமாய் வேதகிரீசனை அப்பர் அடிகளார்,

''நான் முகனும் இந்திரனும்
மாலும் போற்றக்
காவார்ந்த பொழிற் சோலைக்
கானப்பேராய்
கழுக்குன்றத்துச்சியாய்
கடவுளே நின்
பூவார்ந்த பொன்னடிக்கே
போதுகின்றேன்
பூம்புகலூர்மேவிய
புண்ணியனே''

எனபாடி இருப்பதினின்றும் சுந்தரர் அவர்கள்,

''நின்ற பாவ வினைகள் தாம்
பல நீங்கவே
சென்று சென்று தொழுமின்
தேவர் பிரானிடம்''

என்று வேண்டியிருப்பதினின்றும் ஞானசம்பந்தர், காதல் செய் கோவில் கழுக்குன்றே' என்று ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் கூறி கழுக்குன்றத்துப் பெருமைகளை விளக்கி இருப்பதிலிருந்தும்,

மாணிக்கவாசகர்,

'சாதல் சாதல் பொல்லாமையற்ற
தனிச் சரண்சரணமெனக்
காதலாலுனையோத நீ வந்து
காட்டியை கழுக்குன்றிலே

போன்ற பாடல்களால் இறைவனைத் துதிப்பதிலிருந்தும் இறைவனதுப் பெருமைகளை உணரலாம்.

கோயிலின் காலம் :

கல்வெட்டுகளில் திருக்கழுக்குன்றமுடைய நாயனார் மலை திருமலை என்றும் வருகிறது. கோயிலின் கருவறை உட்புறச்சுவர் மூன்று பெரியப் பாறைகளால் ஆனது. கர்ப்பகிருஹ வடசுவரில் சோமாஸ்கந்தர் உருவம் உள்ளது. K.R. சீனிவாசன் தனது நூலில் பின்வருமாறு கூறுகின்றார். மலை மீதுள்ள கோயில் நால்வராலும் பாடப்பட்டுள்ளது. அப்பர் தனது பாடல்களில் மலை உச்சி கோயிலைப் பற்றிப் பாடுகின்றார். அவர் முதலாம் மகேந்திர வர்மன் சம காலத்தவர். எனவே முதலாம் மகேந்திரவர்மன் காலத்துக்கு முன்னரே இக் கோயில் கட்டப்பட்டிருக்க வேண்டும். எனவே கல்வெட்டொன்றில் குறிக்கப்படும் ஸ்கந்த சிஷ்யனே இக் கோயிலைக் கட்டியிருக்கலம். மகேந்திரவர்மன்தான் முதல் முதலில் கல்லால் கோயில் கட்டியவன். இதையே மண்டகப்பட்டு கல்வெட்டு உணர்த்துகின்றது.

எனவே கட்டடக் கோயில்களை முதன் முதலில் கட்டத் தொடங்கிய பரமேஸ்வரவர்மனே இக்கோயிலைக் கட்டியிருக்கலாம் என அவர் கருதுகிறார். கோயிலின் வெளிப்பிரகாரச் சுவரிலுள்ள கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ இத் திருக்கற்றளி
செய்வித்தான் அரிவாட்பாக்
கிழான் சாத்தன் மஹிபா
லன்

இக்கோயில் முதலில் செங்கல் (அ) மண் போன்ற அழியக் கூடியப் பொருட்களால் கட்டப்பட்டிருக்கலாம். அக்கோயிலுக்கே முதலாம் நரசிம்மவர்மன் கொடை கொடுத்திருக்க வேண்டும். தான் கொடுத்த கொடையை செப்புப்பட்டயம் (அ) ஓலைச்சுவடிகளில் எழுதி வைத்திருக்கலாம். அதை உறுதிப்படுத்தி கீழே மலை யின் நடுவே தான் கட்டிய ஒற்றைக்கல் மண்டபத்தில் அழியாத கல்வெட்டாக எழுதி வைத்தான். தனது கல்வெட்டில் இரு கோயில்களைப் பற்றிக் குறிக்கின்றான். அவை திருக்கழுக்குன் றத்து பெருமானடிகள், மூலநாட்டுப் பெருமானடிகள். எனவே நரசிம்மவர்மன் குறித்த மற்றொரு கோயில் மலை மீதுள்ள கோயிலே என S.R. பாலசுப்ரமணியம் குறிக்கின்றார். அவ்விருவர் கொடுத்த கொடையையே ஆதித்தன் பிற்காலத்தில் தன் கோயிலில் எழுதி வைத்தான் எனவும் கூறுகின்றார். ஆனால் இக்கருத்தை K.R. சீனிவாசன் ஆதரிக்கவில்லை. ஒற்றைக்கல் மண்டபம், ஆதித்தன் கோயில் ஆகிய கோயில்களில் குறிக்கப்பெறும் கொடைகள் வெவ்வேறு. ஒன்றே அல்ல. ஸ்கந்த சிஷ்யன் கொடுத்த கொடை யின் அளவு எந்த கல்வெட்டிலும் குறிக்கப்படவில்லை. ஒரு கல் மண்டப கல்வெட்டு மலைமீதுள்ள இறைவனதுப் பெயரை மட்டும் குறிப்பிட்டு வழிப்பாட்டுபுரமாக இறையிலி நிலம் வைத்ததைக் குறிக்கின்றது. எனவே ஸ்கந்த சிஷ்யன் திருக்கழுக் குன்றத்திலுள்ள வேறு கோயிலுக்கு கொடை கொடுத்திருக்கலாம் என தனது நூலில் கூறுகிறார்.

S.R. பாலசுப்ரமணியம் கோயிலின் அமைப்பைப் பற்றி சில கருத்துக்களைக் கூறுகின்றார். இறைவன் (லிங்கம்) பின் ஒரு சோமாஸ்கந்தர் உருவமும் சிங்கத் தூண்களும் உள்ளன. சோமாஸ் கந்தர் சிற்பம் வைப்பது ராஜசிம்மன் கால கலைப்பாணி. இதற்கு மாமல்லையிலுள்ள எல்லா கோயில்களும் உதாரணம். எனவே வேதகிரீசர் கோயில் கி.பி. 695 -722-ல் ஆண்ட ராஜசிம்மன் இரண்டாம் நரசிம்மவர்மன் கட்டியதே எனக் கூறுகின்றார்.

கோயிலின் அமைப்பு :

கருவறை கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. கருவறை யின் உட்புறச்சுவர் மூன்று பெரிய தனிப் பாறைகளால் ஆனது. ஸ்வயம்பு லிங்கம். இத்தல விருக்ஷம் வாழைமரம். எனவேதான் அருணகிரி, ‘கதலிவனமேவுப் பெருமாளே’ எனப் பாடுகிறார்.

லிங்கமே இளம் வாழைப்பூ போன்ற முகப்புடையது என்பர். இறைவன் இங்கு தான் விசுவரூப தரிசனம் அளிக்கிறார். லிங்கத்தின் மேற்புறம் வெள்ளியால் ஆன பாம்பு கவசம் உள்ளது. லிங்கத்தின் மூன்று புறங்களிலும் இராசசிம்மன் கால சிற்பங்கள் உள்ளன. மேற்குப் பகுதியில் சோமாஸ்கந்தர் உருவம் உள்ளது. சிவனுக்கு 4 கரங்கள், கைகளில் படமெடுத்து ஆடும் நாகம், அக்கமாலை, வரதம், யோகம் போன்ற முத்திரைகள் காட்டப்பட்டுள்ளன. ஈசன் ஒரு பெரிய ஆசனத்தின் மீது அமர்ந்துள்ளார். அருகில் உமையன்னை இரு கரங்களுடனும் ஒரு கையில் மலரையும் மறு கையை குகன் மீதும் தாங்கி நிற்க அன்னை எழிலே உருவாய் இறைவன் அருகில் அமர்ந்திருக்கிறார். அன்னையின் மடியில் ஸ்கந்தன் அமர்ந்திருக் கிறார். இச்சிற்பம் மாமல்லையிலுள்ள மகிஷாசுரமர்த்தினி மண்ட பத்திலுள்ள சோமாஸ்கந்தர் சிற்பம் போன்றே உள்ளது. ஆனால் இங்கு காளை உருவம் இல்லை. இறைவனின்கீழ் தொழுது நிற்கும் அடியார். இது மார்க்கண்டேயனாக இருக்கலாம். இறைவனின் வலப்புறத்தில் பிரம்மனும் இடப்புறத்தில் விஷ்ணுவும் காணப்படு கின்றனர். வடப்புறச் சுவரில் தெற்கு திசையில் மேதா தக்ஷிணா மூர்த்தி உருவம் உள்ளது. இறைவனுக்கு நான்கு கரங்கள். கைகளில் அக்கமாலை, கெண்டி, ஞான, அபய முத்திரைகள் காட்டப்பட் டுள்ளன. இறைவன் உயர்ந்த பீடத்தின் மீது அமர்ந்துள்ளார். இறை வனின் மேற்புறம் கவரி வீசும் இரு பெண்கள் காட்டப்பட்டுள் ளனர். இறைவனின்கீழ் காட்டப்பட்டுள்ள இரு முனிவர்களே இன்று கழுகு வடிவில் வந்து உணவு உண்ணும் ரிஷிகள். தென்புற சுவரில் வடபுறம் நோக்கி காளை மீது கம்பீரமாக அமர்ந்திருக்கும் அர்த்த நாரீஸ்வரர் உருவம். தடித்த யோக பட்டம் இடக்காலின் மீது ஏறிச் செல்கிறது. இடது கையின் மீதுள்ள வீணையின் மேல் 3 தலை பாம்பொன்று சுற்றப்பட்டுள்ளது. கீழ் இடதுகை இடது தொடைமீது வைத்தபடி மேல் வலது கையில் திரிசூலம் உள்ளது. வலது கையில் ஒரு தலைபாம்பு படமெடுத்து ஆடுகின்றது. வலப்புறம் ஜடாமகுடமும் இடப்புறம் கிரீட மகுடமும் உள்ளன. இம்மூன்று சிற்பங்களும் சுமார் 7 அடிஉயரமுள்ளவை. இவை அனைத்தும் பல்லவர் காலத்தவை என பார்க்கும் போதே தெரிகின்றது. சில சிவன் கோயில்களில் காணப்படுவது போல நந்தி வெளிப்புறம் இல்லாமல் உட்புறமே உள்ளது. இந்திரன் உருவமும் உள்ளே உள்ளது. மலையின் கீழ் தாழக் கோயிலில் மலையைப் பார்த்தவாறு ஒரு பெரிய நந்தி ஒன்று உள்ளது.

அம்மன் சன்னதி :

சொக்கநாயகி அல்லது பெண்ணின் நல்லாள். சுமார் 7 அடி உயரமுள்ள சிலை உள்ளது. பத்மபீடத்தின் மீது நின்ற நிலை. இறைவிக்கு 4 கரங்கள். தாமரை, அபயம் வரதம் அருகில் 14ம் நூற்றாண்டில் கட்டப்பட்ட நர்த்தன வினாயகர் சன்னதி ஒன்று உள்ளது.

கோயில் உபானம், முப்பட்டை குமுதம், ஜகதி, மனிதமுக கூடு, அன்னவரி, வேசர விமானம் இவற்றுடன் காணப்படுகிறது. கும்பபஞ்சரம் இல்லை. கோயிலைச் சுற்றிய கோட்டங்களில் உருவம் ஏதுமில்லை. அழகுக்காகவே வைக்கப்பட்டுள்ளன.

கோயிலின் தெற்குப்புற வாயிலில் வினாயகர், முருகர் சிற்பங்கள் உள்ளன. இங்குள்ள கல்வெட்டு 12ம் நூற்றாண்டில் பூவனூர் சூரிய தேவன் என்பான் பலகைப்படியில் வினாயகர், முருகர் உருவம் அமைத்ததாய் கூறுகின்றது. தவிர 14ம் நூற்றாண்டு கல்வெட்டு ஒன்று பிள்ளையார் கோயிலுக்கு கோபுரம் அமைத்ததாய் கூறுகின்றது. தவிர ஜடாவர்மன் சுந்தரபாண்டியன், கோப்பெருஞ்சிங்கன் ஆகியோரின் கல்வெட்டுகள் உள்ளன. கி.பி. 14ம் நூற்றாண்டு கல்வெட்டொன்று காஞ்சியில் வாழும் கண்டராயர் எனும் பக்தன் ஒருவன் முன் மண்டபத்தைப் பெரிதாக்கினான் எனக் கூறுகின்றது. கோயிலின் தெற்குப்புற கல்வெட்டு இத்திருக்கற்றளி எடுத்தது சாத்தான் மஹிபாலன் எனக் கூறுகின்றது. இங்குள்ள கல்வெட்டொன்று பக்தன் ஒருவன் மலை மீது செல்லும் படிகளை அமைத்ததாய் கூறுகின்றது. எனினும் படிகளைப் பார்க்கையில் அவை அனைத்தும் ஒரே மாதிரியே உள்ளன. எனவே 12-ம் நூற்றாண்டில் அமைக்கப்பட்ட படிகள் எவை எனத் தெரியவில்லை. தற்போதுள்ள படிகள் அனைத்தும் கி.பி. 14, 15ம் நூற்றாண்டுகளில் விஜய நகர மன்னர்களால் திருப்பணி செய்யப்பட்டபோது அமைக்கப்பட்டவை போன்று தோற்றமளிக்கின்றது.

வேதகிரிசர் கோயிலின் தெற்குப் பகுதியிலேயே பக்ஷிகள் வந்து தினமும் உணவு உண்ணுகின்றன. ஒரு பாறையின் மீது அமர்ந்து பட்டர் உணவு கொடுக்க அவை இரண்டும் உண்ணுவது இறைவனே நேரில் வந்து உண்பது போன்ற பிரமையை நமக்கு அளிக்கின்றது.

மலை மீதுள்ள கோயிலின் பல இடங்களில் பல லிங்கங்களும் அதன் எதிரே நந்திகளும் உள்ளன. சில இடங்களில் அடிவாரம் கட்டப்பட்டு தற்போது மிகுந்த இடிபாடுகளுடன் காணப்படுகின்றன. ஒரு காலத்தில் பல சிறு கோயில்கள் இருந்திருக்க வேண்டும்.

மலைமீது ஒரு புறத்தில் ஒரு அடிகளாரின் ஆசிரமம் உள்ளது. இம் முனிவர் வெகு காலம் யாருடனும் பேசாது மௌன விரதம் இருந்து நிஷ்டையில் உயிர் நீத்தார் இவர் என்று கூறுகின்றனர்.

- 4 SEP 2012
சென்னை-5.

பக்தவத்சலர் கோயில்

தற்பொழுதுள்ள பக்தவத்சலர் கோயில் 1290ல் ஜடா வர்மன் சுந்தரப் பாண்டியனால் கட்டப்பட்டது. ஆதித்தன் கால கோயிலுக்குத் தெற்கில் அதாவது கிழக்கு நோக்கி கருவறை அமைக்கப்பட்டுள்ளது. மூன்றாம் ராசராசனின் குழப்பான ஆட்சி யைப் பயன்படுத்தி சோனாட்டைக் கைப்பற்றினான் ஜடாவர்மன் சுந்தரப்பாண்டியன். பின் தான் பிடித்த சோனாட்டை அவனுக்கு திருப்பியளித்து, 'சோனாடு கொண்டருளிய சுந்தரப்பாண்டியத் தேவர்' எனப்பெயர் கொண்டான். எனினும் தொண்டை நாடு சுந்தரப் பாண்டியனின்கீழ் சிறிது காலம் இருந்தபோது கழுக்குன்றத் தில் பக்தவத்சலர் கோயிலையும் திரிபுரசுந்தரி அம்மன் கோயிலை யும் கட்டினான்.

பழமையான கோயில் விடுத்து ஏன் மன்னன் மற்றொரு கோயிலைக் கட்டினான்? பழையக் கோயில் ஏன் வழிப்பாட்டினின்று நீக்கப்பட்டது போன்ற வினாக்களுக்கு சரியான விடை இன்னும் தெரியவில்லை. கோயிலினுள் காணப்படும் கல்வெட்டுகளுள் பழமையானது ஜடாவர்மன் சுந்தரபாண்டியனது. கோயிலின் சுற்றுச்சுவர்களில் பாண்டியர், விஜய நகர மன்னர் கல்வெட்டுகள் உள்ளன. ஆதித்தன் கோயில் இறைவன் திருக்கழுக்குன்றமுடைய மஹாதேவர் என அழைக்கப் பட்ட பெயரிலேயே இவ்விறைவனும் அழைக்கப்படுகிறான். சுந்தர பாண்டியன் கல்வெட்டு, 'எம் மண்டலமும் கொண்டருளிய ஸ்ரீ சுந்தர பாண்டியத் தேவர்க்கு' எனத் தொடங்குகின்றது.

இவனது கல்வெட்டு திருக்கழுக்குன்றமுடைய மஹாதேவர்க்கு நிலம் கொடுத்து அந்நிலத்தில் சிவபுர நந்தவனம் அமைத்து பின்னர் அந்நிலத்தில் வீடுகள் அமைக்கவும் உத்தரவு அளித்து அந்நிலம் ஆதிசண்டேஸ்வர தேவகன்மிகளிடம் விடப்பட்டதைக் குறிக்கின்றது. இன்றும் கோயிலுக்கு எதிரிலுள்ள இடம் சிவபுரம் என அழைக்கப்பட்டு அந்நிலம் கோயிலுக்கு சொந்தமானதாக உள்ளது. சுந்தரப் பாண்டியனின் 9ம் ஆட்சியாண்டு கல்வெட்டில் திருக்கழுக்குன்றமுடைய நாயனாருக்கு நிலத்தை அளிக்க அந்நிலம்

T. 7337.

தேவகன்மிகள் அரசாங்க அதிகாரிகளான காமன் அரசன் என்ப வனின் நிலத்தை கோயிலுக்கு அளித்தனர். 9ம் ஆண்டு கல்வெட் டொன்று சுந்தரபாண்டியன் பொன் அளித்ததைக் குறிக்கின்றது. எனவே தான் இறைவன் பொன்னிட்டிசுரமுடைய நாயனார் என அழைக்கப்படுகின்றார். மற்றொரு கல்வெட்டு சுந்தரப் பாண்டியன் 67½ பணம் மதிப்புள்ள ஒரு லிங்கத்தை வைத்ததாகக் கோயி லின் தென்புறச் சுவரில் சுந்தரப் பாண்டியனின் சிதைந்த கல்வெட் டொன்று உள்ளது. மாறவர்மன் விக்ரம பாண்டியனின் கல்வெட் டுகளும் கோயிலின் தென்புற சுவரில் உள்ளன. தவிர விஜய நகர மன்னர் கல்வெட்டுகளும் சம்புவராயர் கல்வெட்டுகளும் கோயிலின் வடபுறச் சுவற்றில் உள்ளன.

ஜடாவர்மன் வீரபாண்டிய தேவனின் 13ம் ஆட்சியாண் டில் களத்தூர் நாட்டு மக்கள் காளிங்கராயன் சந்தி எனும் விழா நடத்த ஒரு கிராமத்தைக் கொடையாக அளித்ததை விளக்குகிறது கோயிலின் தென்புறமுள்ள கல்வெட்டு.

ராஜநாராயண சம்புவராயரின் 1347 வருட கல்வெட்டு 350 பணம் மதிப்புள்ள புதுப்பட்டினம் என்ற ஊரைக் கொடையாக அளித்ததை விளக்குகிறது.

விஜயநகர மன்னர்கள் :

வீரபிரதாப பொக்கராயரின் (சகவருடம் பொறிக்கப்பட்ட) 1406-ஆம் வருட கல்வெட்டுகள் இரண்டு உள்ளன. வீரபிரதாப தேவராயர், வீரபிரதாப பூபதிராயன் ஆகியோரின் கல்வெட்டுகள் உள்ளன.

வீரபிரதாப தேவராயன் 1398 ல் வெங்கலப்பாக்கம் என்ற ஊரை கோயிலுக்கு அளித்தான்.

வீரபிரதாப பொக்கராயன் 1406 ல் பொக்கராயன் சந்தி எனும் விழா நடத்த நிலமும், அதே ஆண்டில் ஆயிர வேலிப்பற்று என்ற நிலமும் கொடுக்கப்பட்டது.

வீர விஜய பூபதி ராயன் 1408 ல் நேர்குளம் என்ற ஊரை சார்ந்த ஒருவன் விளக்கெரிக்க 32 பசுக்கள் கொடுத்துள்ளான். மற்றொரு கல்வெட்டு நாகேஸ்வரமுடையான் வில்லவரையன் என்பான் விழா நடத்த நிலம் அளித்ததைக் கூறுகின்றது. இது தவிர

 T 7237

விருப்பண்ண உடையாரின் இருகல்வெட்டுகள் உள்ளன. ஒரு கல்வெட்டு 1360 பணம் மதிப்புள்ள வம்பாதி என்ற ஊரை நாராயண தேவன் கொடை அளித்ததாகக் கூறுகின்றது. மற்றொரு கல்வெட்டு 1560 பணம் மதிப்புள்ள 53 வேலி நிலம் அளிக்கப் பட்டதைக் குறிக்கின்றது. தேவராயனின் கல்வெட்டொன்று 820 பணம் மதிப்புள்ள நிலத்தை இறைவனுக்கு அளித்ததாகக் கூறுகின்றன.

18ம் நூற்றாண்டில் செங்கல்பட்டு மாவட்டத்தை ஆண்ட தொண்டைமான் ராயன் என்பான்' ஈச்சங்காரணை' எனும் கிரா மத்தை இறைவனுக்கு அளித்ததாகக் கூறுகின்றது. இவ்வாறாக பக்தவத்சலர் கோயில் தென்புற வடக்குப்புறச் சுவர்களில் பல கல்வெட்டுகள் உள்ளன.

கோயிலின் அமைப்பு :

கிழக்குப் பார்த்த கருவறையின் நடுவில் சுமார் இரண்டு அடி உயரமுள்ள பிரதிட்டை செய்யப்பட்ட லிங்கம் வைக்கப்பட் டுள்ளது. ஆதித்தன் கால கோயிலில் இருந்த லிங்கமே இன்று பக்தவத்சலர் கோயிலில் வைக்கப்பட்டுள்ளது என்பது சிலர் கருத்து. கோயிலில் கருவறையின் இருபுறத்திலும் உட்புறம் இரு துவாரபாலர் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. இவை 14ம் நூற்றாண்டு சிற்பங்களாகத் தோன்றுகின்றன. கோயிலின் கருவறை சுந்தர பாண்டியனால் கட்டப்பட்டது. கோயிலின் முன் மண்டபம் 18-ம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. தூண்கள் வேறிடத்திலிருந்து கொண்டு வந்து வைக்கப்பட்டிருக்க வேண்டும். கோயிலின் 2ம் திருச்சுற்றில் 63 நாயன்மார்களின் சிற்பங்கள் வைக்கப்பட்டுள்ளன. மேற்கு திசையில் பல வகைப்பட்ட லிங்கங்கள் உள்ளன. தெற்குத் திசையில் பல வகைப்பட்ட லிங்கங்கள் உள்ளன. தெற்குத் திசை யில் 63 நாயன்மார்களின் செப்புச்சிலைகள் உள்ளன. அதன் அருகில் ஒரு முருகர் சிற்பம் வள்ளி தெய்வயானையுடன் வைக்கப் பட்டுள்ளது. அதன் அருகில் ஒரு சுரங்கம் 1974ம் வருடத்தில் கண்டுபிடித்துள்ளனர்.

கோயில் அதிட்டானம், கண்டம், ஜகதி , பத்மம் முப்பட்டை குமுதம், சுவர், கூடு, பட்டிகை போன்றவைகளும் தூண்களுக் கிடையே மிக அழகான கும்ப பஞ்சரமும் உள்ளன. அழகான தாமரை போன்று கும்ப பஞ்சரம் காணப்படுகின்றது. கும்ப

பஞ்சரத்தின் இருபுறமும் முடிச்சிட்டாற் போன்ற அமைப்பு காணப் படுகின்றது. தூண்களில் வினாயகர், முருகர் போன்றோரின் சிறு உருவங்களும் குள்ள பூதத்தின் சிற்பங்களும் உள்ளன.

சுவரின் கால்களில் நாகபந்தம் இல்லை. பக்தவத்சலர் கோயிலும் அம்மன் கோயிலும் ஒரே காலத்தில் கட்டப்பட்டிருப் பினும் இரு கோயிலும் கட்டட அமைப்பில் பெரிதும் மாறுபட்டு காணப்படுகின்றன. தேவ கோட்டங்களில் உருவங்கள் செதுக்கப் பட்டு உருவங்கள் இருக்க வேண்டிய இடத்தில் வைக்கப்பட் டுள்ளன.

தெற்குப்புறத்தில் வினாயகர் உருவம் உள்ளது. பத்ரபீடத்தின் மீது நின்ற நிலை. இடம்புரி வினாயகர். பெரியவயிறு காணப் படுகின்றது. கடிபந்தம் காணப்படுகிறது. மெல்லிய முப்புரி நூல் காணப்படுகின்றது. கிரீடம் காணப்படுகிறது. இருகைகள் இடக்கை தும்பிக்கையையும் வலக்கை அங்குசத்தையும் பிடித்துள்ளது.

தக்ஷிணாமூர்த்தி :

பத்ரபீடத்தின் மீது அமர்ந்து வலக்காலை மடக்கி இடக்காலை அபஸ்பாரம் மீது வைத்துக் கொண்டுள்ளார். கீழே அவரது ஞான உபதேசத்தைக் கேட்டு நிற்கும் முனிவர் கூட்டம். அங்குசம், சூலம். அபயம், ஆலமரத்தின் கீழ் அமர்ந்த செல்வன்.

லிங்கோத்பவர் :

தேவகோட்டத்தில் கருவறையில் மேற்குத் திசையிலுள் ளது. தலையின் கிரீடத்தில் பாதியும் கீழே காலில் பாதியும் செதுக்கப்படவில்லை. 'அடிமடி காணா அண்ணல்' என்ற கருத்தை மெய்ப்பிப்பது போல அமைந்துள்ளது.

இறைவனின்கீழ் நான்முகனும் விஷ்ணுவும் நின்ற நிலை யில் அஞ்சலி ஹஸ்தத்தில் காட்டப்பட்டுள்ளனர். கீழே வராஹமும் மேலே கருடனும் காண்பிக்கப்பட்டுள்ளனர். இறைவனுக்கு 4 கரங்கள் உள்ளன. மழு, மான், கடிபந்தம், உதரபந்தம் போன்றவை உள்ளன. கணுக்கால் வரை ஆடை உள்ளது. காதுகள் நீள்செவி யாகக் காட்டப்பட்டுள்ளது.

பிரம்மா :

வடக்குப் பகுதியில் நான்முகன், கணுக்கால் வரை ஆடை உள்ளது. உதரபந்தம், கடிபந்தம் போன்றவை காட்டப்பட்டுள்ளன. மெல்லிய முப்புரி நூல் காணப்படுகின்றது.

துர்க்கை:

வடக்குப்பகுதியில் எருமைத்தலை மீது நின்ற நிலை. பத்ரபீடத்தின் மீது பத்மபீடம். 4 கரங்கள் பத்ரகுண்டலம் காதுகளில் உள்ளன. கணுக்கால் வரை நீண்ட ஆடை காட்டப்பட்டுள்ளது.

சண்டி :

வடக்கில் கிழக்கு நோக்கிய சண்டியின் உருவம். பத்ர பீடத்தின் மீது அமர்ந்த நிலை. வலது கையில் கதையும் இடக்கை தொடை மீதும் வைக்கப்பட்டுள்ளன.

கருவறையின் அருகில் மற்றொரு சண்டிகேஸ்வரர் உருவம் உள்ளது. அதன் அருகிலுள்ள ஒரு லிங்கத்தைப் பூசிப்பது போன்று காட்டப்பட்டுள்ளது.

கருவறையில் பிரதிட்டை செய்யப்பட்ட லிங்கம் உள்ளது. அங்கு போக சக்தியின் சிலை உள்ளது. கருவறையில் போக சக்தியை வைக்கும் பழக்கம் உத்தம சோழன் காலத்திலிருந்தே தொடங்கியது இங்கும் பின்பற்றப்பட்டுள்ளது. கருவறையின் கோமுகம் ஒரு யாளியின் வாயிலிருந்து வருவது போல காட்டப்பட்டுள்ளது.

கருவறையிலுள்ள போகசக்தி சிலை 11ம் நூற்றாண்டைச் சார்ந்தது. வலதுகையில் மலரையும் இடக்கை டோல ஹஸ்தத்திலும் காட்டப்பட்டுள்ளது. பத்ர பீடத்தின் மீது பத்ம பீடத்தின் மீது நின்ற நிலை. கருவறையின் அமைப்பு 15ம் நூற்றாண்டினதாகக் காணப்படுகிறது. அடுத்துள்ள அர்த்த மண்டபம் அதே காலத்தைச் சார்ந்தது. முன் மண்டபம் பிற்காலத்தைச் சார்ந்தது. முதல் திருச்சுற்றில் அமைந்துள்ள தூண்களும் பிற்காலத்தைச் (18ம் நூற்றாண்டு) சார்ந்தவை. அதில் பல சிற்பங்களும் உள்ளன. கருவறையின் முன்னுள்ள நந்தியும் பலிபீடமும் பிற்காலத்தவை.

கோயிலின் இரண்டாம் திருச்சுற்றில் மேற்குப் பகுதியிலுள்ள பல லிங்கங்கள் :

சோமநாதர், மல்லிகார்ஜூன கேஸ்வரர், மஹா காளேஸ்வரர், கமலேஸ்வரர், வைத்யநாதஸ்வரர், பீமேஸ்வரர்.

வடக்குப் பகுதியிலுள்ள லிங்கங்கள் :

ராமகாதேஸ்வரர், நாகேஸ்வரர், விஸ்வநாதர், திரியம்பகேஸ்வரர், கேதாரேஸ்வரர், கிருகணேஸ்வரம். இந்த லிங்கங்கள் அனைத்தும் சுமார் 200 வருடங்களுக்கு முற்பட்டவை. நாயன்மார்கள் சிலைகளும் சிற்பங்களும் அதே காலத்தவை. கோயிலின் வடக்குப் பகுதியில் கிழக்கு நோக்கிய பைரவர் சிலை சுமார் 10ம் நூற்றாண்டைச் சார்ந்தது.

கிழக்கில் கருவறையை நோக்கியவாறு ஒரு சிவ சூரிய மூர்த்தி சிலை உள்ளது. சிவன் கோயில் இருக்கும் நவக்கிரஹம் இக்கோயிலில் இல்லை. நவக்கிரஹத்துக்குப் பதிலாக இச்சிற்பம் உள்ளது. மலைமீதுள்ள லிங்கம் ஸ்வயம்பு ஆதலால் நவக்கிரகம் இல்லை.

சிவசூரிய மூர்த்தி:

பத்ர பீடத்தின் மீது நின்ற நிலை. சுமார் 4 அடி உயரமுடையது. சுமார் 18 ம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இருக்கலாம். கணுக்கால் வரை ஆடை காட்டப்பட்டுள்ளது. கால்களில் காப்பு காணப்படுகின்றது. கடிபந்தம், உதரபந்தம் போன்றவைக் காணப்படுகின்றன. கிரீடமகுடம் காணப்படுகிறது. இருகரங்களிலும் தாமரை மலர் காணப்படுகிறது. சன்ன வீரம் காட்டப்பட்டுள்ளது. முகத்தைச் சுற்றி ஒளிவட்டமும் இறைவனைச் சுற்றி திருவாச்சியும் உள்ளன.

முன் மண்டபம் :

கி.பி. 18ம் நூற்றாண்டில் கட்டப்பட்டிருக்க வேண்டும். பல தூண்கள் உள்ளன. தூண்களில் சிற்பங்கள் பிற்காலத்தவை எனத் தெளிவாக தெரிகின்றது.

ஒரு தூணில் தசாவதார சிற்பங்கள் வரிசையாகக் காட்டப்பட்டுள்ளன. கருவறையின் வாயிலிலுள்ள தூண் ஒன்றில் ஒரு

அரசன் உருவமும் அவன் அருகில் கழுகுகளும் காட்டப்பட்டுள் ளன. அவற்றில் ஓவியம் வரையத் தொடங்கியுள்ளது தெரிகிறது. இவனே இம்மண்டபத்தைக் கட்டியவனாக இருக்கலாம். மற்றொரு தூணில் இதே மன்னன் தன் இரு தேவியருடன் காட்டப்பட்டுள் ளான். இது தவிர மார்க்கண்டேயன் கதை, அகத்திய முனிவர், முருகர், விநாயகர், வீரபத்ரர், நாட்டிய மகளிர், சந்திரசேகரர், முனிவர்கள், கொடிப்பெண், நடராஜர், அருகில் குடமுழா வாசிக்கும் நந்தி போன்றவை காட்டப்பட்டுள்ளன.

தூண்கள் வேலைப்பாடின்றி மூன்று பட்டையாய் காட்டப் பட்டுள்ளன. மேலுள்ள போதிகையும் அதிக வேலைப்பாடற்று உள்ளது. மூன்று பட்டையாய் பிரிக்கப்பட்டு சதுரம் போன்ற அமைப்பு காட்டப்பட்டு அதில் கோலம் போன்ற அமைப்பு காணப் படுகின்றது. தூணின் மேல்பகுதியில் வாழைப்பூ போன்ற அமைப்பு காணப்படுகின்றது. கோயிலின் முதல் சுற்றில் மட்டும் தூண்கள் உள்ளன.

கருவறையின் இருபகுதியில் இரு துவார பாலகர்கள் உள்ள னர். இவை சுமார் 5 அடி உயரமுடையவை. இவை பிற்காலத் தவையே.

வலப்புறமுள்ள துவாரபாலர் வலக்காலை கதை மீதும் இடப்புறமுள்ள துவாரபாலர் இடக்காலை கதை மீதும் வைத்துள் ளனர். இடப்புறமுள்ள துவாரபாலர் வலக்கையை கஜ ஹஸ்தத் திலும் இடக்கை விஸ்மய முத்திரையையும் வலப்புறமுள்ள துவாரபாலர் இடக்கை கஜ ஹஸ்தத்திலும் வலக்கை விஸ்மய முத்திரையையும் காட்டி நிற்கிறார். வாயில்கோரை பற்கள் காட்டப் பட்டுள்ளன. இடுப்பில் கணுக்கால் வரை ஆடை உள்ளது. இடை யில் ஒரு சிறு கத்தி செருகப்பட்டுள்ளது. கோயிலின் முன் மண்டபத்திலும் பல தூண்கள் காட்டப்பட்டுள்ளன. கோயிலின் கருவறையின் வடக்குப் புறத்தில் கீழ்திசை நோக்கி சீரங்கம் கோயிலிலுள்ள குதிரை மண்டபம் போன்ற அமைப்புள்ளது. மண்டபத்தின் இருபுறமும் சுருள் யாழி அமைப்பு காணப்படுகின்றது. மேல் மண்டபத்தில் நடராஜர் சிலை உள்ளதால் இம்மண்டபம் நடராஜர் மண்டபம் எனப்படுகிறது.மண்டபத்தின் இரு புறமும் ஆழி சக்கரம் போன்ற அமைப்புள்ளது. சக்கரத்தில் பெரிய அச்சாணி காட்டப்பட்டுள்ளது.

குதிரை மண்டபம் :

குதிரை மீது ஏறிச் செல்லும் வீரர்கள் பலர் காட்டப்பட்டுள் ளனர். மிகுந்த வேலைப்பாட்டுடன் காணப்படுகின்றது. கீழே தூணை ஒரு குள்ள பூதம் தன் கைகளில் தாங்கி நிற்கின்றது. அதன் மேலும் ஒரு குள்ள பூதமும் சுற்றிலும் அன்னங்களும் காட்டப்பட்டுள்ளன. அதன் மேல் கத்தி ஏந்திய போர் வீரன் ஒருவன் காட்டப்பட்டுள்ளான் அதன் மேல் கடிவாளம் இட்ட ஒரு பெரிய குதிரையும் அதன் மேல் கத்தியை கையில் கொண்டுள்ள வீரன் அமர்ந்தவாறு காட்டப்பட்டுள்ளது. அதன் மேல் பகுதியில் வேலைப்பாடுகளும் வாழைப்பூ போன்ற அமைப்பும் காணப் படுகின்றன. இது விஜயநகர் காலத்தது எனினும் அதிலுள்ள சிற்பங்கள் பிற்காலத்தில் செதுக்கப்பட்டவை. இம்மண்டபம் 18ம் நூற்றாண்டில் எடுக்கப்பட்டதாகும். இங்குள்ள ஒரு சிற்பத் தில் தொழுது நிற்கும் அரசன் காட்டப்பட்டு அவன் அருகில் கல்வெட்டும் உள்ளது. 'தம்பி எல்லப்ப முதலியார் சதா சேவை' எனக் கூறுகின்றது. எனவே அவனே இம்மண்டபத்தை எடுத் திருக்கலாம்.

மண்டபத்தின் இரு பகுதிகளிலும் இதே போன்று இருபது தூண்கள் உள்ளன. தூண்களில் நாட்டிய மகளிர், பிக்ஷாடணர், அகத்தியர், குள்ள பூதம், பிரம்மா, ஆலமர் செல்வன், மார்க்கண் டேயன், பைரவர், முருகன், பிள்ளையார், துர்க்கை, அரசன் அரசியர் கழுகு உணவு உண்பதை கண்டு மகிழும் காட்சி போன்றவை சிற்பங்களாக உள்ளன.

நடுவில் தெற்குநோக்கி நடராஜர் சிவகாமி அம்மையுடன் உள்ள 11ம் நூற்றாண்டு செப்புச்சிலை உள்ளது. மிகவும் அழ கானது. பத்ரபீடத்தின் மீது பத்மபீடத்தில் அபஸ்மாரன் மீது இடக் காலை வைத்து ஆடும் நிலை. இடக்கை கஜ ஹஸ்தத்திலும் வலக்கையில் உடுக்கையிலும் காட்டப்பட்டுள்ளன. குதிரை மண்டபத்திலுள்ள சில தூண்களில் புலியோடு சண்டை புரியும் வீரன் உருவம் உள்ளது. நடராஜர் மண்டபத்தின் அருகில் ஒரு யாகசாலை உள்ளது. இங்கு தான் உற்சவங்களின் போது நீர் பிரதிட்டை செய்ய முடிகின்றது.

கருவறையின் வாயிலில் இரு மிகப்பெரிய சுமார் 8 அடி உயரமுள்ள இரு துவாரபாலர் சிற்பங்கள் உள்ளன. இவையும்

அருகிலுள்ள வீரபத்ரர் சிற்பமும் நடராஜர் மண்டபத்தின் வாயிலுள்ள மகிஷாசுரமர்த்தினி சிற்பமும் 18ம் நூற்றாண்டைச் சார்ந்தவை

துவாரபாலர் :

உயர்ந்த 3 அடி உயரமுள்ள பீடத்தில் மிக உயரமாகக் நின்றவாறு காட்டப்பட்டுள்ளார். இடப்புறம் உள்ளவர் இடக்காலை கதை மீது ஊன்றியிருக்க கதையில் பாம்பு சுற்றப்பட்டுள்ளது. நான்கு கரங்கள். வலப்புறம் உள்ள துவாரபாலர் வலக்காலை கதையின் மீது ஊன்றியுள்ளார். கழுத்தில் ஹாரமும் கைகளில் வளையல்களும் காதுகளில் பத்ர குண்டலமும் உள்ளன. கைகள் சூசி, தர்ஜனி, விஸ்மயம், கஜ ஹஸ்தத்திலும் காட்டப்பட்டுள்ளன. மிகவும் அச்சத்தைத் தரக் கூடியனவாக தோற்றமளிக்கின்றது.

அகோர வீரபத்ரர் :

உற்சவ பரிவார மூர்த்தி அறைக்கு தெற்கிலும் வாயிலிலிருந்து கிழக்கிலும் உள்ளது. இதுவும் சுமார் 10 அடி உயரமுள்ளது. உயர்ந்த பீடத்தின் மீது நின்றநிலை. இச்சிலையைப் போன்றே தஞ்சையிலுள்ள பட்டீஸ்வரத்திலும் உள்ளது.

இறைவனுக்கு 10 கரங்கள் காட்டப்பட்டுள்ளன. தலையில் ஜ்வாலா மகுடம். காதுகளில் பத்ர குண்டலம். முகத்தில் தெளிவான புன்னகையொன்று காணப்படுகின்றது. பத்ம பீடத்தில் நின்ற நிலையில் காட்டப்பட்டுள்ளார். கால் வரை நீண்ட பெரிய மண்டை ஓட்டு மாலை காட்டப்பட்டுள்ளது. உதர பந்தம், கடிபந்தம் போன்றவை காட்டப்பட்டுள்ளன. கைகளின் குறுக்கே நீண்ட ஒரு சூலம் காட்டப்பட அதில் ஒரு பாம்பு சுற்றப்பட்டுள்ளது. இடுப்பிலும் ஒரு பாம்பு சுற்றப்பட்டுள்ளது. கால்களில் காப்பு, கழுத்தில் பாம்பு மாலை, கைகளில் தடித்த காப்பு போன்றவை காட்டப்பட்டுள்ளன. இறைவன் முகத்தைச் சுற்றி ஒளிவட்டம். இறைவனைச் சுற்றி கல்லால் ஆன ஒரு பிரபை காட்டப்பட்டுள்ளது. கணுக்கால் வரை ஆடை, கவசம் உள்ளது. நடுவில் சுருள் சுருளான அமைப்புக் காணப்படுகிறது. கால் பாதத்தில் சரஸீம், தோளில் வாகுவலயம், வாகுபந்தம், கையின் மேல் சரஸீ, மார்பில் சன்ன வீரமும் காட்டப்பட்டுள்ளன. வலக்கால் மேல்நோக்கி இடக்கால் பதிந்து போருக்கு ஆயத்தமாய் இருப்பதைப் போன்று காட்டப்பட்டுள்ளது.

மகிஷாசுரமர்த்தினி :

எருமைத் தலை மீது தன் சூலத்தைக்குத்தி கொல்வது போன்று காட்டப்பட்டுள்ளது. இவள் சம்ஹாரம் செய்வதை ஈசன், பிரம்மன், விஷ்ணு ஆகியோர் மேலிருந்த பார்ப்பதை போன்று காட்டப்பட்டுள்ளனர். கணுக்கால் வரை நீண்ட ஆடை உள்ளது. காதுகளில் மகர குண்டலம். கோரை பற்கள் நெற்றியில் பொட்டு உள்ளது. தலையில் கிரீடம் உள்ளது. கைகளில் அணி உள்ளது. தோளில் வாகு வலயம் கால்களில் தண்டை போன்றவை உள்ளன. இறைவிக்கு 6 கரங்கள். முன்மண்டபத்திலும் அர்த்தமண்டபத்திலும் 18ம் நூற்றாண்டு ஓவியங்கள் உள்ளன.

பக்தவத்சலர் கோயிலின் உட்புறச் சுவரில் பல தமிழ் எண்கள் காணப்படுகின்றன. பிற்காலத்தில் இக்கோயிலிலும் திருப்பணி நடைபெற்றதாக இதிலிருந்து தெரிகின்றது. அப்போது கல்வெட்டுகள் இடம்பெயராமல் இருப்பதற்கு பெரிதும் முயன்றிருக்கின்றனர். எனினும் கோயிலின் மேற்குப் புறத்திலுள்ள கல்வெட்டு இடம் பெயர்ந்துள்ளது. சில இடங்கள் எழுத்துக்கள் தலைகீழாக உள்ளன. ஆதித்தன் கால கோயிலைத் திருப்பணி செய்தோர் எடுத்த அக்கறையை பிற்கால மன்னர்கள் எடுத்துக் கொள்ளவில்லை என்றே கூற வேண்டும். கோயிலின் உட்புறச் சுவர்களில் சில தமிழ் எண்கள் குறிக்கப்பட்டுள்ளன. இவை பின் வந்த விஜயநகர மன்னர்களால் பழுது பார்க்கப்படும்போது எழுதப்பட்டிருக்க வேண்டும்.

ஆமை மண்டபம் :

பக்தவத்சலர் கோயில் மண்டபம், அம்மன் கோயில் முன் மண்டபம் போன்றே அமைந்துள்ளது. இது கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. பார்ப்பதற்கு தற்கால கலையரங்கம் போன்றே அமைந்துள்ளது. ஆமை இம்மண்டபத்தைத் தாங்கி நிற்பது போல உள்ளதால் ஆமை மண்டபம் எனப்படுகிறது. இதற்கு பக்தவத்சலா சபை எனவும் பெயருண்டு. இம்மண்டபத்தின் ஒவ்வொரு தூணிலும் குதிரை வீரன் சிற்பம் உள்ளது. இது காஞ்சியிலுள்ள ஏகாம்பரநாதர் கோயில் அமைப்பையும் சீரங்கம் கல்யாண மண்டப அமைப்பையும் ஒத்துள்ளது. இது இக்கோயிலின் முன் மண்டப அமைப்பை பெரிதும் ஒத்துள்ளதால் முன் மண்டபத்தைக் கட்டிய தம்பி எல்லப்ப முதலியாரே இம் மண்டபத்தையும் கட்டியிருக்க வேண்டும்.

இம் மண்டபத்தின் கிழக்கிலும் வடக்கிலும் களிற்றுப் படிக்கட்டுகள் அமைந்துள்ளன. கிழக்குத் திசையிலும் தெற்கு திசையிலும் முன் புறத்தில் தூண்கள் இல்லை. பின் நேர்நேராக இரு வரிசையிலும் சுமார் 20 தூண்கள் உள்ளன. இடையில் இரு புறமும் நான்கு தூண்களும் பின்புறத்தில் இரு தூண்களும் உள்ளன. நடுவில் மேடை போன்ற அமைப்பு காணப்படுகின்றது. மேடையின் நான்கு புறம் வேலைப்பாடற்ற தூண்கள் உடைய குறுகிய அறைகள் உள்ளன. அதன் மேற்புறம் நான்கு பட்டையான உத்தரம் போன்ற அமைப்புள்ளது. தூணின் மேற்புறம் குள்ள பூதங்களின் உருவம் பக்கவாட்டில் இறைவனின் உருவம் உள்ளது. நாற்புறமும் இறைவன், இறைவி உள்ளது. அதன் அருகிலுள்ள பட்டையான மேற்பகுதியில் கஜலக்ஷ்மி உருவம் நாற் பகுதியிலும் உள்ளது. இருயானைகள் தன் தும்பிக்கையில் நீர் கொணர்ந்து நீராட இறைவி பத்மத்தின் மேல் பத்மாசனமிட்டு அமர்ந்துள்ளாள்.

தூணின் அமைப்பு :

குள்ள பூதம் ஒன்று கீழிருந்து தூணைத் தாங்குவது போல உள்ளது. இதன் சற்று மேல் மற்றொரு குள்ள பூதமும் அன்னவரியும் உள்ளன. அதன் மேல் ஒரு பூதம் தன் இரு கைகளிலும் தூணைத் தாங்கியுள்ளது. அதன் மேல் குதிரை மீது சவாரி செய்யும் ஒரு வீரன் உள்ளான். வீரனின் கையில் ஒரு பெரிய கத்தி உள்ளது. குதிரை கடிவாளம் இட்டு தன் முன்னங்கால்கள் இரண்டையும் தூக்கி நின்றுள்ளது. அந்த இருகால்களுக்கிடையே மற்றொரு வீரன் நீண்ட கத்தியுடன் நின்றுள்ளான். குதிரைமீதுள்ள வீரன் கத்தியை சுழற்றி போருக்கு ஆயத்தமாக உள்ளான். குதிரையின்கீழ் புலியுடன் வீரனாகக் காட்டப்பட்டுள்ளான். ஆமை மண்டபத்தின் எல்லா தூண்களிலும் புலியைக் கொல்லும் வீரன் காட்டப்பட்டுள் ளான். அதிட்டானம், கண்டம், முப்பட்டை, குமுதம், பத்மம் போன்றவை உள்ளன. மண்டபத்தின் மேலுள்ள மேடையும் இம்மாதிரியான அமைப்பிலேயே உள்ளது.

தூணிலுள்ள சிற்பங்கள் :

இம்மண்டபத் தூண்களில் நாட்டிய மகளிர் சிற்பங்கள் பல உள்ளன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு முக்கிய நாட்டிய கரணத்தை விளக்குகின்றது. பல தூண்களில் நடராஜர் சிற்பம் உள்ளது. அக் காலத்தில் இம்மண்டபம் நாட்டிய அரங்கமாகத் திகழ்ந்திருக்க

வேண்டும். இன்றும் கோயிலில் நடைபெறும் கலை நிகழ்ச்சிகள் அனைத்தும் இம்மண்டபத்திலேயே நடைபெறுகின்றன. தூணில் பைரவர், பிக்ஷாடணர், வீரபத்ரர், சந்திரசேகரர், குள்ள பூதம், துவாரபாலர், யாளிகளின் நடனம், பூதங்களின் நடனம், லக்ஷ்மி, கஜலக்ஷ்மி, பிரம்மன், விஷ்ணு, சரஸ்வதி, முருகர், வினாயகர், சுப்ரமணியர், முருகன் வள்ளி தெய்வயானையுடன், தக்ஷிணா மூர்த்தி, துர்க்கை, மகிஷாசுரமர்த்தினி போன்ற சிற்பங்கள் உள்ளன. தூணின் படிக்கட்டுகளின் இரு பகுதியிலும் இரு பெரிய சக்க ரங்கள் உள்ளன. அவைகளின் நடுவே இரு அச்சாணிகள் உள்ளன. இம்மண்டபமே ஒரு இரதம் போன்ற அமைப்பிலுள்ளது.

ஆமை மண்டபத்தின் மூன்று புறமும் கைகள் உள்ளன. அவை நடுவிலுள்ள மேடையைத் தாங்குகின்றன. முன்னுள்ள ஆமை முகம் உடைந்து விட்டது. இதனாலேயே இம் மண்டபம் ஆமை மண்டபம் எனப்படுகிறது. இம் மண்டபத்தில் கலை நிகழ்ச்சி நடைபெறுகையில் ஆயிரத்துக்கு மேற்பட்டோர் அமர்ந்து காண முடியும். இன்றும் பல கலை நிகழ்ச்சிகள் இங்கு நடைபெறுகின்றன.

ஆமை மண்டபத்தின் மேடை மீதுள்ள பல சிற்பங்கள் உடைந்து விட்டன. ஆமையின் தலையும் உடைந்து விட்டது. பெரிய இந்த மண்டபத்தின் அழகு மிக தெளிவுறத் தெரிகின்றது. உற்சவத்தின் பொழுது எல்லா இறைவனுக்கும் இம் மண்டபத்தில் வைத்தே உற்சவம் நடைபெறுகிறது. இம் மண்டபம் சுமார் பதினைந்து அடி உயரமுள்ளது. 45 மீ சுற்றளவுடையது. கோயிலி னுள்ளேயே கலை அரங்கம் போன்ற அமைப்பை வைத்துள்ளது மண்டபம் கட்டியவனின் கலை உணர்ச்சியை விளக்குகிறது. அதற்கேற்றாற்போல வருடம் முழுதும் இக்கோயிலில் உற்சவங்கள் நடைபெறு கின்றன.

-4 SEP 2012
சென்னை-5.

ஆபரணக் கொட்டடி

மலைக்கீழுள்ள தாழக் கோயில் தற்போதைய பக்தவத்சலா் கோயிலின் தெற்குப் பகுதியிலுள்ளது. அக்கோயிலின் இரண்டாவது பிரகாரத்தில் அமைந்துள்ளது. இன்று வழிபாடற்று பூட்டப்பட்டுள்ளக் கோயில் ஒரு காலத்தில் அத்துணைச் சிறப்புடன் வழிபட்டு வந்துள்ளது. ஆனால் இன்று அக்கோயிலைப் பார்க்கக் கூட இயலாத வகையில் பூட்டப்பட்டு ஆபரணக் கொட்டடியாகப் பயன்படுத்தப்படுகிறது. இக்கோயில் ராசகேசரியின் 27ஆம் ஆட்சியாண்டில் அதாவது முதலாம் ஆதித்தன் காலத்தில் கட்டப்பட்டது. இக்கோயில் கல்வெட்டுகளில் மிகப் பழமையானதும் அதுவே. திருப்புறம்புயம் போரின் பின் தொண்டை நாட்டில் தன் ஆட்சியை நிறுவிய ஆதித்தன் தன்னை 'தொண்டை நாட்டு பாவிய இராசகேசரி' எனக்கூறிக் கொண்டான். தொண்டை நாட்டை ஆண்ட முதல் இராசகேசரி இவனே. ஆதலால் இக்கோயில் முதலாம் ஆதித்தனால் கட்டப்பட்டது என முடிவு செய்யப்பட்டுள்ளது. கட்டட அமைப்பைக் கொண்டு பார்த்தாலும் இக்கோயில் முற்கால சோழர் (அ) பிற்காலப் பல்லவர் கலைப் பாணியை தெளிவாக விளக்குகின்றது.

கஜபிரஸ்த அல்லது தூங்கானை வடிவில் வட்டமாக அமைந்துள்ளது. தேவகோட்டங்கள் எடுக்கப்பட்டு அவற்றில் உருவங்கள் காணப்படுகின்றன. கோயிலின் வெளிப்புற சுற்றுச் சுவர்களில் கோட்டங்கள் அமைத்து அதில் உருவங்களை வைத்தல் பிற்கால பல்லவர் கலைப்பாணி. முதலில் நான்கு கோட்டங்களே வைக்கப்பட்டன. பின் அவைகளின் எண்ணிக்கை படிப்படியாக அதிகமாயின. இம்முறைக்கு திருக்கழுக்குன்றக் கோயில் சிறந்த எடுத்துக்காட்டாகும். இக்கோயிலில் ஐந்து கோட்டங்கள் ஒரே அளவில் செய்யப்பட்டு அவற்றில் ஒரே அளவுள்ள உருவங்கள் வைக்கப்பட்டுள்ளன. இம்முறை ஆதித்தன் காலத்தில் பூரண வளர்ச்சி அடைந்ததை திருக்கழுக்குன்றக் கோயில் உணர்த்துகின்றது. திருத்தணியில் அபராஜிதவர்மனால் கட்டப்பட்ட வீராட்டானேசுவர் கோயிலின் கட்டட அமைப்பை இக்கோயில் பெரிதும் ஒத்துக் காணப்படுகின்றது. திருத்தணிக் கோயிலே ஆதித்தன் கோயிலுக்கு முன்னோடியாக திகழ்ந்தது எனலாம்.

ஆதித்தன் தன் ஆட்சியை தொண்டை நாட்டில் பரப்பியதன் வெற்றியைக் குறிக்க இக்கோயில் கட்டப்பட்டது. தன் வெற்றியின் நினைவாகத் தனது 27ம் ஆட்சியாண்டில் கொடைக் கொடுத்துள்ளான். கல்வெட்டு ஸ்கந்தசிஷ்யனும் நரசிம்மப் பல்லவனும் கொடுத்த கொடையையும் ஆதித்தன் புதுப்பித்ததையும் விளக்குகிறது. இம்மாதிரியான கல்வெட்டு கிடைப்பது மிகவும் அரிது. எழுத்து முறைப்படிப் பார்த்தாலும் கி.பி. 11ம் நூற்றாண்டைச் சார்ந்தது என ஊகிக்க முடிகிறது.

ஸ ஸி ஸ்ரீ கோவிராஜகேசரி பருமற்கு யாண்டு இ
வ த
ருபத்தேழாவது களத்தூர்க் கோட்டத்து
திருக்கழுக்குன்ற நாட்டு ஸ்ரீ மூலஸ்தான நாட்டுப் பெருமான் அ
டிகளுக்கு இறையிலியாக ஸ்கந்த சிஷ்யன் கொடுத்தமை
யில் அப்படியே **பாடவைக்** கொண்ட நரசிங்கப்
போத்தரையன் அப்பரிசை ரக்ஷித்தமையில் **அந்தரையன**
குணவன் மகன் புத்தன் மகன் **வழிப்பாட்டினில்** பூர்வ
ராஜாக்கள் வைத்த படியே வைத்தேன் இது ராஜ கேசரிப
ன்மரனனேன் இத்தர்மம் ரக்ஷித்தார் அடி என் முடிமேல்

தற்போதுள்ள கோயிலைக் கட்டியது ஆதித்தன் என வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். ஸ்கந்த சிஷ்யன் கொடுத்த கொடை இங்குதான் குறிக்கப்பட்டுள்ளது.

ஸ்கந்தசிஷ்யன் கொடுத்த கொடை ஏன் ஆதித்தன் கோயிலில் எழுதி வைக்கப்பட வேண்டும்? மேலும் நரசிம்மவர்மன் தன் கோயிலில் தன் முன்னோன் கட்டிய கோயிலிலுள்ள இறைவனையே பிரதிட்டை செய்து தன் முன்னோர் கட்டிய கோயிலுக்கு கொடை கொடுத்தான் என்ற வரலாற்றுக் குறிப்பு நமக்கு கிடைக்கின்றது. எனவே ஆதித்தன் காலக் கோயிலைத்தான் முன்பு ஸ்கந்த சிஷ்யன் செங்கல் அல்லது மண் போன்ற அழியக்கூடியப் பொருட்களால் கட்டினான். அதையே 11ம் நூற்றாண்டில் கற்றளியாக அமைத்தான். எனவேதான் ஸ்கந்த சிஷ்யனும் நரசிம்மவர்மனும் இவனது கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளனர்.

அமைப்பு:

வட்ட வடிவில் அமைந்துள்ளது. மேலே கூரை இல்லை. பின்னர் இயற்கைச் சூழ்நிலைகளினால் இழந்திருக்கலாம். தூங்கானை வடிவில் கோயில் அமைந்துள்ளது. தேவ கோட்டங்கள் அனைத்தும் ஒரே அளவில் ஒரே இடைவெளியில் அமைந்துள்ளன. உருவங்கள் அனைத்தும் அவை இருக்க வேண்டிய இடத்தில் அமைந்துள்ளன. பூதவரி மிகவும் அழகாகக் காட்டப்படடுள்ளன. பூதங்கள் மிக அழகாக உள்ளன. அவை அனைத்தும் ஒரே அளவில் நடன மாடுவது போல காட்டப்பட்டுள்ளன. ஒரு குள்ள பூதம் மேளம் வாசிக்க ஒன்று குழலூத பூதங்கள் நடனமாடும் சிற்பம் மிக அழகாகக் காட்டப்பட்டுள்ளது. நடனத்தைக் கண்டு வியந்த ஒரு குள்ள பூதம் அழகாகக் காட்டப்பட்டுள்ளது. நடனத்தைக் கண்டு வியந்த ஒருகுள்ள பூதம் மற்றொரு பூதத்தின் மீது அமர்ந்து கண்டு களிக்கின்றது. பூதவரியில் ஆங்காங்கே இறைவனின் திருவிளையாடல்களும் நாயனார் கதைகளும் விளக்கப்பட்டுள்ளன. ஒரு புறம் கண்ணப்பர் கதை காட்டப்பட்டுள்ளது. ஆடு மேய்த்து வரும் கண்ணப்பன் காட்டப்பட்டுள்ளான். தன் கண்ணைப் பிடுங்கி தெய்வமாகக் காட்டப்பட்டுள்ள லிங்கத்தின் மீது வைக்க யத்தனிக்க லிங்கத்தினின்று இறைவன் தடுத்தாட் கொண்டு 'பொறு கண்ணப்பர் எனக்கூறுவது போன்று லிங்கத்தினின்று ஒரு கை காட்டப்பட்டுள்ளது. மற்றொரு புறம் நாயனார் கதை காட்டப் பட்டுள்ளது. இறந்த தன் மகனை மடிமீது கிடத்திய ஒரு அடியார் உருவம் அருகில் லிங்கம் ஒன்று காட்டப்பட்டுள்ளது. அதன் அடியில் லிங்கத்துக்கு மாலை அணிவிக்கும் ஒரு அடியவர். இது அப்பூதி அடிகள் கதையையும் அப்பரின் கதையையும் விளக்கும் கதையாக இருக்கலாம். பூதங்கள் அனைத்தும் சுமார் ½ அடி உயர மிருக்கும், மார்பில் ஒரு முப்புரிநூல் காட்டப்பட்டுள்ளது. பூதவரி மிகவும் அழகாக ஆதித்தன் கால கோயிலிலேயே காட்டப்பட் டுள்ளது மிகவும் அரிது:

தேவகோட்டங்கள் :

கருவறையில் தற்போது லிங்கம் இல்லை எனினும் லிங்கம் இருந்ததற்கான அடையாளம் உள்ளது. இருபுறமும் துவாரபாலர் காட்டப்பட்டுள்ளனர். கருவறை தெற்கு நோக்கியுள்ளது.

இடப்புறம் உள்ள துவாரபாலர் :

கதை மீது இடக்கால் ஊன்றிக் காட்டப்பட்டுள்ளது. 4 கரங்கள் காட்டப்பட்டுள்ளன. கைகள் விஸ்மயம், சூசி போன்ற முத்திரை களை காட்டி நிற்கின்றன. காதுகளில் பத்ரகுண்டலம். கோரைபல் காட்டப்பட்டுள்ளது. இடுப்பில் கத்தி செருகப்பட்ட வஸ்திரம் கணுக்கால் வரை உள்ளது. இது ஒற்றைக்கல் மண்டபத்திலுள்ள துவாரபாலர் போன்றே பலவகைகளிலும் காட்டப்பட்டிருந்தாலும் இங்கு காட்டப்பட்டுள்ள துவாரபாலரின் உருவம் மெல்லியதாகக் காட்டப்பட்டுள்ளது.

வலப்புறம் உள்ள துவாரபாலர் :

இதுவும் இடப்புறமுள்ள துவாரபாலரையே பலவிதத்திலும் ஒத்து காணப்படுகின்றது. வலக்கால் கதையின் மீது ஊன்றி நிற்கிறார். கைகளில் காட்டப்படும் முத்திரைகள் சில மாற்றி காட்டப் பட்டுள்ளன. இரு துவாரபாலர்களின் முகத்திலும் புன்முறுவல் காணப்படுகின்றது. இரு சிற்பங்களும் சுமார் 4 அடி உயரம் இருக்க லாம். கோயிலின் சுற்றுப்புறச் சுவர்களில் வேறெந்த சிற்பமும் இல்லை.

வெளிப்புறச்சுவர் தேவக்கோட்டங்கள்:

விஷ்ணு துர்க்கை:

வடக்குப் பகுதியில் கிழக்கு நோக்கியுள்ளது. எருமை மீது நின்றநிலை. நான்கு கரங்கள், வலது மேற்கை மீது கிளி அமர்ந்துள் ளது. கிளி அழகா அதைப் பிடித்திருக்கும் கை அழகா எனக் கூறும் அளவுக்கு கை அத்துணை பெண்மை அழகுடன் விளங்குகின்றது. கரங்களில் சக்கரம், சங்கு, ரிஷபத்தைப் பிடித்திருப்பது போலவும் , கடி ஹஸ்தத்திலும் உள்ளன. இறைவியின் மார்பில் முப்புரி நூல் காட்டப்பட்டுள்ளது. கால்வரை சுருள் சுருளான ஆடை காதுகளில் பத்ரகுண்டலம். கிரீட மகுடம். கைகளில் வளையல்கள் கால்களில் தண்டைபோன்றவை உள்ளன. தலையைச் சுற்றி ஒளி வட்டம் உள்ளது. பின்னால் ரிஷபம் நிற்பதாகக் காட்டப் பட்டுள்ளது. வலக்கை அதன் முகத்தை தடவிக் கொண்டிருக்கின்றது. திரிபங்கத்தில் நின்ற நிலையில் முகத்தில் அழகிய புன்னகைக் காட்டப்பட்டுள்ளது மிகவும் அழகுவாய்ந்த இச்சிற்பம் சீனிவாச நல்லூர் சிற்பங்களைக் நினைவூட்டுகின்றன.

பிரம்மன் :

அதே திசையில் நான்முகன். அதில்மூன்று முகங்கள் காட்டப்பட்டுள்ளன. வலக்காலை மடித்து இடக்காலை நீட்டி பத்ர பீடத்தின் மீது அமர்ந்த நிலை. மிகவும் அழகான முகம். கரண்ட மகுடம். உதரபந்தம் கடிபந்தம் போன்றவை காட்டப்பட்டுள்ளன. காதுகளில் குண்டலங்கள். முழங்கால் வரை சுருள் சுருளான ஆடை உள்ளது. நான்கு கரங்கள்.

விஷ்ணு:

வடக்குத் திசையில் அமைந்துள்ளது. பத்ர பீடத்தில் அமர்ந்து வலக்காலை மடித்து இடக்காலை தொங்கவிட்ட நிலை. முகத்தைச் சுற்றி ஒளிவட்டம் அமைந்துள்ளது. கிரீட மகுடம் அமைந்துள்ளது. கழுத்தில் ஆரம், கைகளில் வளையல்கள், தோளில் வாகுவலயம், கடிபந்தம், உதரபந்தம் போன்றவை காட்டப்பட்டுள்ளன. மார்பில் முப்புரிநூல் உள்ளது. இறைவனுக்கு 4 கரங்கள் கைகளில் சக்கரம், சங்கு, அபயம், கடி போன்ற முத்திரைகள் காட்டப்பட்டுள்ளன. கணுக்கால் வரை ஆடை சுருள் சுருளாக மிக அழகாகக் காட்டப் பட்டுள்ளது.

ஞான தக்ஷிணமூர்த்தி :

மேற்குத் திசையில் தக்ஷிணாமூர்ததி ஞான உருவில் காட்டப் பட்டுள்ளார். பத்ரபீடத்தின் மீது முழந்தாளிட்டு அமர்ந்த நிலை. தடித்த யோகபட்டம் வலது காலின் மீது செல்கிறது. மிக அழகான முகம். கணுக்கால் வரை ஆடை காட்டப்பட்டுள்ளது. 4 கரங்கள்.

வினாயகர் :

ஆதித்தன் கால வினாயகர் மேற்குத் திசையில் காட்டப் பட்டுள்ளார். பத்ர பீடத்தின் மீது அமர்ந்த நிலை. இடம்புரி வினாயகர்.

பத்ம பீடத்தின் மீது அமர்ந்த நிலை. கைகளில் பாசம், அங்குசம், மோதகம், எழுத்தாணி போன்றவை உள்ளன. இடம்புரி வினாயகர் ஆதித்தன் கால வினாயகர் சிற்பம் உள்ளது மிக அரிது.

மேலே கூறிய எல்லா சிற்பங்களும் ஆதித்தன் காலத்தவை. உயிரோவியங்களோ என வியக்கும் அளவிற்கு மிக அழகாக உள்ளன. இங்குள்ள சிற்பங்கள் ஸ்ரீனிவாச நல்லூர் கோயில் சிற்பங் களை நினைவூட்டுகின்றன.

கோயிலின் அமைப்பு அதிட்டானம், பட்டிகை, முப்பட்டை, குமுதம், கண்டம், பத்மம், சுவர், பூதவரி, பலகை போன்றவை உள்ளன. கூரை இல்லாததால் விமானமும் இல்லை. சுவர் வேலைப் பாடற்று காணப்படுகிறது. பட்டிகை, கலசம், கும்பம், பத்மம், பலகை போன்றவைகளுடன் காணப்படுகின்றன. கோயிலின் வெளிப்புற அமைப்பைப் போன்றே உட்புறமும் அமைந்துள்ளது. இக்கோயி லுக்கென தனிப்பட்ட செப்புச்சிலைகள் இல்லை.

கோயிலின் வெளிப்புறச் சுவர்களில் பல தமிழ் எண்கள் காணப்படுகின்றன. இதற்குக் காரணம் 13ம் நூற்றாண்டில் திருப்பணி நடைபெற்றபோது இடம் பெயரால் இருக்க எண்கள் இடப்பட்டுள்ளன. கல்வெட்டுகள் மாறிவிடாமல் இருக்கவும் இம்முறை கையாளப்பட்டிருக்க வேண்டும். பிற்காலத்தில் ஆண்ட மன்னர்கள் தங்கள் முன்னோர் கட்டிய கோயில்களின் அழகு எந்த விதத்திலும் குறையக்கூடாது என எடுத்துக் கொண்ட முயற்சிகளை ஆதித்தனின் திருக்கழுக்குன்றக் கோயிலில் கண்டு வியக்காமல் இருக்க முடியவில்லை.

கல்வெட்டுகள் :

ஆதித்தன் காலம் முதல் இராஜாதித்தன் காலம் வரை பல கல்வெட்டுகள் உள்ளன. சுமார் இருபத்தைந்து கல்வெட்டுகள் உள்ளன. அவைகளில் சில சிறந்த வரலாற்று உண்மைகளையும் சில கொடுத்த கொடைகளையும் விளக்குகின்றது. விஜயநகர மன்னர்கள் கல்வெட்டுகள் இக்கோயில் கிடங்கிலிருந்து திருட்டுப் போனதை விளக்குகின்றது. எனவே அவர்கள் காலத்திற்கு சற்று முன்னரே இக்கோயில் வழிபாட்டினின்று நீக்கப்பட்டு ஆபரணக் கொட்டடியாக மாற்றப்பட்ருக்க வேண்டும். இது ஏன் வழிபாட் டினின்று நீக்கப்பட்டு அதே எல்லையில் மற்றொரு கோயில் கட்டப்பட்டது என்பதற்கான காரணங்கள் தெளிவுற விளக்கப் படவில்லை.

கல்வெட்டில் இறைவனது பெயர் ‘மூலஸ்தான பெருமா னடிகள்’ என முதலாம் குலோத்துங்கன் காலம் வரையிலும் பின்னர் ‘திருக் கழுக்குன்றமுடைய மஹாதேவர்’ எனவும் வருகின்றது. பின்னர் கட்டப்பட்ட பக்தவத்சலர் கோயில் இறைவனும் இப் பெயரால் குறிக்கப்படுகிறார். எனவே ஆதித்தன் கால கோயிலில்

இருந்த லிங்கமே பிற்காலத்தில் கிழக்கு நோக்கி வைக்கப்பட்டதோ என்ற ஐயம் எழுகின்றது.

1. ஆதித்தனின் 27 ம் ஆண்டு கல்வெட்டு புதுப்பித்தல் தன் முன்னோர் கொடுத்த கொடையை உறுதிபடுத்தியதை விளக்கு கிறது.

2. பராந்தகனின் கல்வெட்டொன்று 'மதுரை கொண்ட பரகேசரி எனத் தொடங்கி ஆமூர் கோட்டத்து கரைக்காட்டூர் நெடுமாற் சாத்தன் சென்னிப் பேரரையன் என்பான் தன் தாயின் (கோயில்நங்கை) நினைவாக ஒரு விளக்கெரித்ததை விளக்கு கிறது.

3. மூன்றாம் கிருஷ்ணனின் இரு கல்வெட்டுகள் இங்குள்ளன. இவை 'கச்சியுந் தஞ்சையும் கொண்ட ஸ்ரீ கன்னர தேவர்க்கு' எனத் தொடங்குகின்றன.

   பதினேழாம் ஆட்சியாண்டு கல்வெட்டு கரைநாட்டு சென்னிப் பேரரையன் என்பான் கொடுத்த விளக்கு குறித்து குறிக்கிறது.

4. 19ம் ஆட்சியாண்டு கல்வெட்டு கரைநாட்டு சாத்தான் பேரரை யன் என்பான் நிலம் கொடுக்க அந்நிலத்தைக் கொண்டு ஒரு கருவறையும் அதற்கு நீர் வசதி செய்யப்பட்டு அப் பொறுப்பு ஊர்ச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்நிலம் ஈசான சிவன் என்பானிடமிருந்து வாங்கப்பட்டது எனக் குறிக்கின்றது.

5. முதலாம் ராஜேந்திரனின் கல்வெட்டு மெய்க்கீர்த்தியுடன் தொடங்கி இறைவனுக்கு சனாதனபுரத்து சங்கரப் பாடியான் கொடுத்த விளக்குக் கொடையை விளக்குகின்றது.

6. ராஜாதிராஜன்: மெய்க்கீர்த்தியுடன் தொடங்கி அவனது ஆட்சி யில் நடந்த மிக முக்கிய நிகழ்ச்சியான ஆஹவ மல்லன் எனும் சாளுக்கிய மன்னனைத் தோற்கடித்து பின் இறைவ னுக்கு நிவந்தமாக அவ்வூர் அமைந்த வியாபாரிகள் நிலம் கொடுத்ததை விளக்குகிறது.

7. இரண்டாம் ராஜேந்திரன்: இவனது கல்வெட்டும் மெய்க் கீர்த்தியுடன் தொடங்கி ஆஹவ மல்லனின் ஆனை, குதிரை, பெண்டிர், பண்டாரம் வென்று இரட்ட மண்டலத்தைக் கைப்பற்றிய பின் அவனது 5ம் ஆண்டில் செம்பூர் கோட்டத்து பட்டின நாடு கொடுவூர் பள்ளிகண்டன் சாத்தனை ராஜேந்திர சோழ செம்பூர் நாட்டுடையான் நொந்தாவிளக்கு எரிக்க 90 ஆடுகள் கொடுத்தான்.

8. வீரராஜேந்திரன்: மெய்க்கீர்த்தியுடன் தொடங்கி எட்டாம் ஆட்சியாண்டில் விளக்குக்கென கண்ணப்பன் என்பான் 540 ஆடுகள் கொடுத்த கொடையை இவன் கல்வெட்டு விளக்குகின்றது.

9. முதலாம் குலோத்துங்கன்: தனது 12ஆம் ஆட்சியாண்டில் புரவுவரி திணைக்களம் எனும் சேக்கிழார் சொற்படி நமிநந்தி அடிகள் மடம் கட்ட ராஜராஜபுரம் எனும் ஊரைச் சார்ந்த மக்கள் நிலம் கொடுத்ததை விளக்குகிறது.

10. 13 ம் ஆண்டில் கோயிலுக்கென நிலம் கொடுத்த 'நாற்பாற் எல்லையும் காட்டி' முன்பிருந்த செப்பேட்டின்படி குறித்ததை கல்வெட்டு குறிக்கின்றது.

11. 14ம் ஆட்சியாண்டில் விளக்கெரிக்க ஆடுகள் கொடை கொடுத்ததைக் குறிக்கின்றது.

12. 42ம் ஆட்சியாண்டில் அரும்பிக் கிழான் பொன்னம்பலக் கூத்தன் எனும் படைத்தலைவன் கோயிலுக்கென நிலம் கொடுத்ததை விளக்குகின்றது.

13. விக்ரமசோழன்: 3ம் ஆட்சியாண்டில் திருக்கழுக்குன்றமுடைய மஹாதேவர்க்கு கொடுவூர்குடி பள்ளி திருவெண்காட்டு சாத்தையான் குரு குலவராய பெரிய அரையன் என்பவன் நொந்தா விளக்குக்கென விட்ட சாவா மூவா பேராடு தொண் ணூறு என அவன் கல்வெட்டு குறிக்கின்றது.

14. இரண்டாம் குலோத்துங்கன்: தனது 12 ம் ஆட்சியாண்டில் விளக்குக்கென கொடை கொடுத்துள்ளான்.

15. மூன்றாம் ராஜாதிராஜன்: மெய்க்கீர்த்தியுடன் தொடங்கி நாகன் குடி நாகங்குடையாந் ....ற்றம் பலமுடையான நொந்தா விளக்குக்கென விட்ட சாவா மூவா பேராடு முப்பத்தைந்து என கூறுகின்றது. 9ம் ஆட்சியாண்டில் ஆடுகள் கொடை கொடுத்தான்.

16. மூன்றாம் குலோத்துங்கன்: 1178, 1216 ஆண்டுகளில் கோயிலை பழுது பார்க்க நிலமும் விளக்கெரிக்க பசுக்களும் கொடை கொடுத்துள்ளான்.

17. பின்னர் ஆண்ட காடவர் மன்னன் கோப்பெருஞ்சிங்கன் 1274ல் விளக்கெரிக்க பசுக்கள் கொடுத்துள்ளான்.

18. ஜடாவர்மன் சுந்தர பாண்டியனும் மாறவர்மன் விக்ரம பாண்டியனும் கோயிலுக்கு கொடை கொடுத்துள்ளனர். இவை கோயிலின் வெளிப்புற சுவர்களில் உள்ளன.

தற்போதுள்ள கோயிலைக் கட்டியவன் மாறவர்மன் சுந்தர பாண்டியன். இவன் முற்கால ஆதித்தன் கோயிலுக்கும் கொடை கொடுத்துள்ளதிலிருந்து அவன் காலத்தில் இரு கோயில் களும் வழிபாட்டினில் இருந்திருக்க வேண்டும்.

19. பின் ஆண்ட விஜயநகர மன்னர்கள் காலத்திலேயே ஆதித்தன் கோயில் வழிபாட்டினின்று நீக்கப்பட்டு ஆபரணக் கொட்டடி யாக மாற்றப்பட்டிருக்க வேண்டும்.

20. விருபண்ண உடையார் காலத்தில் நிகழ்ந்த இந்த ஆபரண கொட்டடியிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு நகை திருட்டை விளக்குகிறது. பொன்னம்பலக்கிழான் என்பான் ஆபரண அறையைத் திறந்து இறைவனது திருவாசியைக் கவர அக்கோயில் வாயிற் காப்போன் உண்மையைப் பகர மஹாசபை கூடி அவனை சிவ துரோகி என முடிவு செய்தது. அவன் நிலங்களும் சொத்துக்களும் பறிமுதல் செய்யப்பட்டு ஏலத்தில் 850 பணத்தைப் பெற்றது. அப்பணம் கோயில் கஜானவில் மஹாசபையின் பொறுப்பில் விட்டது. இவைத் தவிர துண்டு கல்வெட்டுகள் இரண்டு உள்ளன. மொத்தத் தில் இருபத்து மூன்று கல்வெட் டுகள் இங்குள்ளன.

கோயிலின் வெளிப் பிரகாரத்தில் தெற்கு நோக்கி ஒரு பைரவர் சிலையுள்ளது. இது. கி.பி.10ம் நூற்றாண்டை சார்ந்தது. முதலாம் ராஜேந்திரன் காலத்தை சார்ந்ததாக இருக்கலாம்.

பைரவர்:

பத்ர பீடத்தின் மீது பத்ம பீடத்தில் நின்ற நிலை. ஆடை யின்றி காணப்படுகின்றது. தடித்த முப்புரிநூல் காணப்படுகின்றது.

ஜ்வாலா மகுடம். இடுப்பில் தடித்த பாம்பு சுற்றப்பட்டுள்ளது. நான்கு கரங்கள் சுமார் நான்கு அடி உயரமுடைய இச்சிற்பம் ராஜேந்திரன் காலத்தை (10 நூற்றாண்டு) சார்ந்ததாக இருக்கலாம்.

சங்கீத விநாயகர் :

கோயிலின் தென்மேற்கில் அமைந்துள்ள விநாயகரும் சோழர் காலத்தை சார்ந்தது. பத்ர பீடத்தின் மீது முழந்தாளிட்டு அமர்ந்த நிலை. தடித்த உருவமாகக்காட்டப்பட்டுள்ளார். இறை வனின் வயிறு அவ்வளவு பெரியதாகக் காட்டப்படவில்லை. இடம்புரி விநாயகர். இறைவனுக்கு நான்கு கரங்கள் காட்டப் பட்டுள்ளன.

மேற்கூறிய இரு சிற்பங்களும் 10-ம் நூற்றாண்டைச் சார்ந் தவை. எனினும் அதே ஆண்டில் ஆண்ட ராஜேந்திர சோழனே கொடுத்தான் என்பதை விளக்க போதிய ஆதாரங்கள் இல்லை.

ஆதித்தன் கால கோயிலில் (ஆபரணக் கொட்டடி) காணப் படும் தமிழ் எண்கள் இவ்விரு கோயில்களிலும் இல்லை. கட்ட டத்தை நோக்குகையில் தற்போது எழுப்பப்பட்டவை என்றே தோன்றுகின்றன. ஆதித்தன் கால கோயிலில் எண்கள் கல்லால் எழுதப்படாமல் சுண்ணாம்பு அல்லது வர்ணத்தில் தான் எழுதப் பட்டுள்ளன. அவை கோயிலின் மேற்புற சுவர்களிலே எழுதப் பட்டதிலிருந்து பிற்காலத்தில் இக்கோயிலை பழுது பார்த்திருப் பவர் எழுதியிருக்கலாம் என எண்ண இடமளிக்கின்றது. இதே போன்று மதுரை, சிதம்பரம், காஞ்சி கோயில்களிலும் உள்ளன.

திரிபுரசுந்தரி அம்மன் கோயில்

திரிபுர சுந்தரி அம்மன் கோயிலும் 1290ல் மாறவர்மன் சுந்தர பாண்டியனால் கட்டப்பட்டது. இக்கோயிலின் தெற்குப்புற சுவற்றிலும் தேவகோட்டத்தில் பட்டிகையிலும் மாறவர்மன் சுந்தர பாண்டியனின் கல்வெட்டுகள் உள்ளன. கல்வெட்டில் இறைவன் பெயர் 'பொன்னிட்டி சுவரமுடைய நாயனார்'. எனவேதான் சோமாஸ்கந்தர் சிலையிலுள்ள ஈசனின் கையில் பொன் உள்ளது. முதல் கல்வெட்டு ரேவதி நாளில் நால்வரால் இறைவனுக்கு நொந்தா விளக்கெரிக்க நூறு சாவா மூவா பேராடுகள் தந்ததை விளக்குகிறது. மற்றொரு கல்வெட்டு இறைவனைப் பூசிக்க பொன்னும் பணமும் கொடுத்து இறைவனுக்கு விளக்கெரிக்க அப்பொறுப்பை சிவருத்திர பண்டிதரிடம் ஒப்படைத்தான். மற்றொரு கல்வெட்டு வைகாசி மாதம் இறைவனுக்கு நிவந்தம் அளித்ததை விளக்குகின்றது.

கோயிலின் அமைப்பு :

சுவாமி கோயிலும் அம்மன் கோயிலும் ஒரே காலத்தில் கட்டப்பட்டிருந்தாலும் இரண்டிற்கும் கட்டட அமைப்பில் மிகுந்த வேறுபாடு உள்ளது. இங்கு தூண்களுக்கு இடையே கும்ப பஞ்சரம் இல்லை. கால்களில் பெரிய நாகபந்தம் காணப்படுகிறது. தேவ கோட்டங்கள் உள்ளன. ஆனால் அவற்றில் உருவம் ஏதுமில்லை. கோட்டங்களின் மேல் மகர தோரணமும் கீர்த்தி முகமும் காட்டப்பட்டுள்ளன. கோயிலின் கட்டட அமைப்பில் அதிட்டானம், முப்பட்டை குமுதம், கண்டம், பட்டிகை, பத்மம், சுவர், நாகபந்தம், பலகை, கும்பம், கலசம், கண்டம், பலகை, கபோதம், பத்மவரி, கூடு (மனித முகம்) யாளிவரி, வேசர விமானம், ஸ்தூபி போன்றவை காணப்படுகின்றன.

இறைவி :

சுமார் ஆறு அடி உயரமுடையது. பத்ர பீடத்தின் மீது பத்ம பீடத்தில் நின்றிநிலை. இறைவியின் பெயர் திரிபுர சுந்தரி. நான்கு கரங்கள் மார்பில் ஸ்ரீ சக்கரம் தலையில் கிரீடம் உள்ளது. இறைவியின்

உருவ அமைதியை அபிராமி பட்டரின் அபிராமி அந்தாதி விளக்குகின்றது.

துணையும் தொழுந்தெய்வமும் பெற்ற தாயும்
சுருதிகளின்
பணையும் கொழுந்தும் பதி கொண்ட வேரும்
பனிமலர் பூக
கணையும் கரும்புச் சிலையுமென் பாசாங்குசமும்
கையில்
அணையுந் திரிபுர சுந்தரி யாவதறிந்தினமே.

கோயிலில் இந்த அம்மனுக்கே முக்கியத்துவம். தாழக் கோயிலில் நடைபெறும் எல்லா உற்சவங்களும் இந்த இறைவிக்கே நடைபெறுகின்றன. கோயிலின் முன் மண்டபத் தூண்கள் 18ம் நூற்றாண்டில் கட்டப்பட்டவை . தூண்கள் மூன்று பட்டையாய் பிரிக்கப்பட்டு நடுவில் சதுரம் போன்ற அமைப்பு காணப்படுகின்றது. தூணின் மேலுள்ள போதிகை மூன்று பட்டையாய் வேலைப் பாடின்றி உள்ளது. கருவறையின் வாயிலில் முருகர், வினாயகர் சிற்பங்கள் உள்ளன. வாயிலின் இருபுறமும் கலந்து ஐந்து தூண்கள் வீதம் மொத்தம் பத்து தூண்கள் உள்ளன.

கோயிலின் முன் மண்டபம் குதிரை மண்டபம் போன்றே உள்ளது. இதுவும் 18ம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. 20ம் நூற்றாண்டில் நாட்டுக்கோட்டை செட்டியாரால் திருப்பணி செய்யப்பட்டபோது சற்று உயரமாக எடுக்கப்பட்டது.

கொடி மரத்தில் சூலம், வினாயகர், முருகர், ஈசன் போன்றோர் காட்டப்பட்டுள்ளனர். வாயிலில் நந்திக்குப் பதிலாக யாளி உருவம் உள்ளது. யாளி திறந்த வாயுடன் காண்பிக்கப்பட்டுள்ளது.

கருவறையில் அம்மனின் செப்பு சிலை உள்ளது. பத்ர பீடத்தில் பத்ம பீடத்தின் மீது நின்ற நிலை. வலக்கையில் மலரும் இடக்கையில் டோலஹஸ்தமும் காட்டப்பட்டுள்ளன. கி.பி. 14ம் நூற்றாண்டைச் சார்ந்தது. வாயிலில் இரு பாவை விளக்கு சிற்பங்கள் உள்ளன. சுமார் 100 வருடத்துக்கு முந்தியது. சுமார் 3 அடி உயரமுடையது. பத்ர பீடத்தின் மீது பத்ம பீடத்தில் நின்ற நிலை.

இரு கைகளிலும் அகல், கைகளில் வளையல்கள் கணுக்கால் வரை ஆடை மடிப்பு மடிப்பாக உள்ளது. தலையில் கொண்டை.

குதிரை மண்டபம் :

நடராஜர் மண்டபம் போன்றே குதிரை மீது செல்லும் குதிரை வீரன் காட்டப்பட்டுள்ளான். இங்குள்ள தூண்களில் எந்த அரசன் உருவமும் இல்லை. கரடி அல்லது புலியுடன் போரிடும் வீரன் உருவம் இல்லை. தூண் சிற்பங்களில் நாட்டிய மகளிர், பிக்ஷாடணர், குள்ளபூதம், நடராஜர், பைரவர், வினாயகர், முருகர் போன்ற பல உருவங்கள் காணப்படுகின்றன.

பிரத்யட்ச வேதகிரி :

திரிபுர சுந்தரி அம்மன் கோயிலின் நேர் எதிரில் லிங்கம் உள்ளது. எதிரில் நந்தியும் பலி பீடமும் உள்ளன. இது கி.பி. 18ம் நூற்றாண்டில் கட்டப்பட்டது.

சோமாஸ்கந்தர்

சோமாஸ்கந்தர் ஆலயம் கிழக்கு நோக்கி பக்தவத்சலர் கோயிலின் அருகில் உள்ளது. கோயிலின் வாயிலில் தெற்கு வடக்கில் சுருள் யாழி படிக்கட்டுகள் உள்ளன. படிக்கட்டுகளின் இருபுறமும் மேடைபோன்ற அமைப்புள்ளது. உட்புறம் வேலைப் பாடற்ற முப்பட்டை தூண்கள் உள்ளன. மேலுள்ள போதிகை வேலைப்பாடற்று மூன்று பட்டையாய் உள்ளது. இத்தூண்கள் அனைத்தும் 18ம் நூற்றாண்டைச் சார்ந்தவை. கருவறை சற்று உயரமான இடத்தில் அமைந்துள்ளது. அங்கு சோமாஸ்கந்தர் சிலை உள்ளது.

இறைவனும் இறைவியும் பத்ம பீடத்தில் அமர்ந்த நிலை. இறைவன் வலக்காலை நீட்டி இடக்காலை மடக்கி வைத்துள்ளார். இறைவன் கைகளில் மழு, மான் ஆகியவற்றைக் கொண்டுள்ளார். சுந்தரருக்குப் பொன் வழங்கிய இடம் கழுக்குன்றமே. அருகில் உமையன்னை இறைவனை நோக்கி அமர்ந்துள்ளார். அவரது கைகளில் மலர், டோல ஹஸ்தம் ஆகியவை உள்ளன. இருவருக்கும் இடையில் ஸ்கந்தன் சிறு பாலனாக நின்ற நிலை சோமாஸ்கந்தர் ஆலயத்தில் இன்றுள்ள சிலை கி.பி. 11ம நூற் றாண்டைச் சார்ந்தது. அருகில் தனி அம்மன் செப்பு சிலை உள்ளது. 100 வருடங் களுக்கு முற்பட்டது. இறைவி பத்மபீடத்தில் நின்ற நிலை. கைகளில் மலர், டோல ஹஸ்தம் போன்றவை உள்ளன.

ராஜேந்திரன் கால கல்வெட்டு தேச விடங்க தேவர்க்கு விளக் கெரிக்க பொன்னும், சாவா மூவா பேராடும் கொடுத்ததை விளக்கு கிறது. தேசவிடங்க தேவர் என்பது கோயிலிலுள்ள சோமாஸ் கந்தரையேக் குறிக்கும் என S.R. பாலசுப்பிரமணியம் தனது நூலில் கூறுகின்றார். விடங்க எனில் செப்புச் சிலையைக் குறிக்கும்.

இக்கோயிலில் நடைபெறும் எல்லா உற்சவங்களும் இந்த இறைவனுக்கு நடைபெறும். இவரே இக்கோயிலின் உற்சவ மூர்த்தி. மூன்றாம் குலோத்துங்கன் கல்வெட்டு நானாதேசிகன் எனும் வணிகக் கூட்டம் விடங்கத் தேவரின் கோயிலைப் புதுப்பிக்க நிலம் தானம் அளித்ததைக் குறிக்கிறது. எனவே இக்கோயில் சோழர்

காலத்திலிருந்தே சிறப்புற்றிருந்தது தெரிகிறது. சோமாஸ்கந்தர் கோயில் அதிட்டானம், பத்மம், உபானம், கூடு (மனிதமுகம்) அன்னவரி, பட்டிகை, பத்மம், முப்பட்டை குமுதம் போன்றவை உள்ளன. வேசரவிமானம், ஸ்தூபி போன்றவை உள்ளன. சுவரில் கால், பெரிய நாகபந்தம், கலசம், கும்பம், பத்மம், பலகை போன்றவை உள்ளன. தூண்களில் பெரிய கும்பபஞ்சரம் உள்ளது. கோயிலின் அமைப்பில் பக்தவத்சலர் கோயில் போன்றே உள்ளது. விமானத்தைச் சுற்றிலும் உருவங்கள் இரு நிலையிலும் உள்ளன. தேவ கோட்டங்கள் உள்ளன. ஆனால் அதில் உருவங்கள் உள்ளன. கோபுரத்தில் மேற்கில் ஞான தக்ஷிணாமூர்த்தி இடக்காலின் கீழ் அபஸ்மாரம் கீழே ஞான உபதேசத்தைக் கேட்கும் முனிவர் கூட்டம். தெற்கில் பிரம்மன் கீழ் நிலையில் தேவியருடன் நின்ற நிலையிலும் மேல் நிலையில் பிரம்மன் அமர்ந்த நிலையிலும் உள்ளன. வடக்கில் விஷ்ணு தன் தேவியருடன் நின்ற நிலையிலும் மேல்நிலையில் அமர்ந்த நிலையிலும் உள்ளன. வடக்கில் விஷ்ணு தன் தேவியருடன் நின்ற நிலையிலும் மேல் நிலையில் பிரம்மன் அமர்ந்த நிலையிலும் உள்ளன. கிழக்கில் சுகாசனரும் மேல்நிலையில் சந்திர சேகரரும் உள்ளன. நாற்புறமும் எண்திசை காவலர்களும் நாற்புற மூலைகளில் பூதங்கள் தன் கையால் தாங்கி நிற்பதைப் போலக் காட்டப்பட்டுள்ளன. இக்கோபுரம் 18ம் நூற்றாண்டில் கட்டப்பட் டிருக்கலாம்.

வெளிப்பிரகாரம் :

சோமாஸ்கந்தர் கோயிலுக்கு அருகில் ஏகாம்பரநாதர் கோயில் உள்ளது. நடுவில் ஒரு லிங்கம் உள்ளது. வாயிலில் நந்தியும் பலிபீடமும் உள்ளன. விமானம் குடிசை வடிவில் அமைந்துள்ளது. 18ம் நூற்றாண்டில் கட்டப்பட்டது.

ஆத்மநாதர் :

இறைவனின் திருவடிகள் காட்டப்பட்டுள்ளன. இறைவனின் திருவடிகளை மாணிக்கவாசகர் இங்கு தான் கண்டு மகிழ்ந்தார். அதன் வெளியில் ஒரு பீடத்தின் மேல் மாணிக்கவாசகர் அஞ்சலி ஹஸ்தத்தில் காட்டப்பட்டுள்ளார். அதற்கு நேர் எதிரில் மாணிக்கவாசகர் சன்னதி உள்ளது.

ஜம்புகேஸ்வரர் :

சோமாஸ்கந்தர் கோயிலின் பின் மேற்குத் திசையில் அமைந்துள்ளது. நடுவில் லிங்கம் அமைந்துள்ளது. அதின் நேர் எதிரில் நந்தியும் பலிபீடமும் அமைந்துள்ளன. கோயில் அதிட்டானம், கண்டம், குமுதம், தேவகோட்டம் போன்ற அமைப்புகளைப் பெற்றுள்ளன. வேசரவிமானம் அதன் மேல் ஸ்தூபி போன்றவைகள் உள்ளன. இது 20ம் நூற்றாண்டில் கட்டப்பட்டிருக்கலாம். கோபுரத்தில் நான்கு திசையிலும் எண் திசைக் காவலர்கள் உள்ளனர்.

அருணாசலேஸ்வரர்:

கருவறையில் லிங்கம் கோயில் அதிட்டானம், பத்மம், குமுதம், பட்டிகை போன்றவையுடன் வேசர விமானம் உள்ளது. எண் திசை காவலர்கள் மேல் விமானத்தில் காட்டப்பட்டுள்ளனர். கிழக்கில் தேவியுடன் சுகாசன மூர்த்தி அருகில் முருகர், வினாயகர் நின்ற நிலையில் உள்ளனர். தெற்கில் பிரம்மா தேவியருடன் நின்ற நிலை வடக்கில் ஆதிசேஷன்மேல் அமர்ந்த விஷ்ணு அருகில் தேவியருடன் காட்டப்பட்டுள்ளார். மேற்கில் ஞான தக்ஷிணாமூர்த்தி அருகில் முயலகன் அவரது ஞான உபதேசத்தைக் கேட்கும் முனிவர்கள் காட்டப்பட்டுள்ளனர்.

அருணாசலநாதர் :

கருவறையில் லிங்கம் எதிரில் நந்தி, பலிபீடம் போன்றவை உள்ளன. கோயில் அதிட்டானம், உபானம், குமுதம், பட்டிகை, கண்டம் போன்றவை உள்ளன. வேசர விமானம் அதன் மேல் உருவங்கள் அவை இருக்க வேண்டிய இடத்திலுள்ளன.

வண்டுவனப் பிள்ளையார்:

வண்டுகள் உறைகின்ற சோலையின் கண் அமர்ந்ததால் வண்டுவனப் பிள்ளையார் எனப்படுகிறார். இக்கோயிலில் அமைந்துள்ள வினாயகர் மிகப் பெரியது. இச்சிலை பழமையானது. இக்கோயில் 18ம் நூற்றாண்டுக்கு முன்னரே இருந்துள்ளது. அந்தகக் கவி வீரராகவ முதலியார் தனது நூலில் வண்டு வனப் பிள்ளை யாருக்கு காப்புச் செய்யுள் எழுதப்பட்டதிலிருந்து அக்கோயிலின் பழமை நன்குப் புலனாகின்றது.

பிள்ளையாரின் துதிக்கை இடப்புறமாக அமைந்துள்ளது. பத்ரபீடத்தின் மீது பத்மபீடத்தின் மீது வலக்காலை நீட்டி இடக் காலைமடக்கி அமர்ந்த நிலை. இறைவனுக்கு நான்கு கரங்கள். கணுக்கால் வரை ஆடை மழு, அங்குசம், எழுத்தாணி, கொழுக் கட்டை அமைந்துள்ளது. மார்பில் மெல்லிய முப்புரிநூல் உள்ளது. சுமார் 4 அடி உயரமுடையது. கீழிருந்து பீடம் மூன்று அடி உயர முடையது.

திருக்கழுக்குன்றத்து உலாவில் அந்தகக்கவி வீரராகவ முதலியார்,

புவனிக்கொரு முதலாம் பொற்கழுக்குன் றீசர்
பவனித் திருவுலாப் பாடக் - கவி நடத்தும்
பண்வெனத் தந்தாமப் பாம்பளிப் பாம்பு தொழும்
வண்டுவனத் தந்தா வளம்

என்று கூறுகின்றார்.

திருக்கழுக்குன்றக் கோவையில்,

சீருறு திங்களணிகழுக்குன்றொளிர் செஞ்சடையோன்
வாருறு பூண்முலை மங்கை மணாளன் மலரடிக்காம்
தாருறு கோவை புனையவென் னாவிற்றழைத்தருளும்
காருறு மும்மத நால்வாயோ னரங்கரக் கற்பகமே

காப்புச் செய்யுளாக வண்டுவனப் பிள்ளையாரைப் பற்றி பாடுகின்றார்.

வண்டுவனப்பிள்ளையார் கோயிலின் விமானத்தில் நாற்புறமும் பிள்ளையார் உருவங்கள் உள்ளன. மூலையில் எண் திசைப் பாலகர்கள் அதை தாங்கிக் கொண்டிருப்பது போல காட்சி யளிக்கின்றது.

இவ்விறைவனுக்கு வினாயக சதுர்த்தி விழா சிறப்பாக நடை பெறுகின்றது.

சண்முகன் :

கோயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. ஜம்புநாதர் கோயிலுக்கு அருகிலும் சோமாஸ்கந்தர் கோயிலுக்கு பின்புறம்

அமைந்துள்ளன. இக்கோயில் பழமையான கோயிலாக இருப்பினும் பிற்காலத்தில் திருப்பணி செய்யப்பட்டது.

ஆறுமுகன் சிலை கருவறையிலுள்ளது. சுமார் ஆறு அடி உயரமுடையது. கையில் வேல், சேவல்கொடி, அபயம், வரதம் போன்றவை காட்டப்பட்டுள்ளன. அருகில் வள்ளி தெய்வயானை சிற்பங்கள் உள்ளன. வள்ளியின் கையில் நீலோற்பவ மலரும் தெய்வயானை கையில் தாமரை மலரும் உள்ளன. முருகன், வள்ளி, தெய்வயானை சிற்பங்கள், வெள்ளி கவசங்கள் உள்ளன. அருணகிரிநாதர் மலை மீதுள்ள வேதகிரிசுரையே முருகனாக எண்ணிப் பாடுகின்றார். இக்கோயில் 18ம் நூற்றாண்டில் கட்டப் பட்டிருக்கலாம். 1970-ம் ஆண்டில் இக்கோயிலுக்குத் திருப்பணி நடந்தது. கந்த சஷ்டி விழாவும் ஒவ்வொரு மாதமும் கிருத்திகை விரதம், சஷ்டி விரதம் போன்றவை மிக சிறப்பாகக் கொண்டாடப் படுகின்றன. அன்று முழுதும் இறைவனுக்கு முழு அபிஷேகம் நடைபெறுகின்றது. கந்த சஷ்டி விரதம் அன்றும் மிக சிறப்பாக அபிஷேகம் நடைபெறுகின்றது.

மாணிக்கவாசகர்

தலப்புராணம்

வெருவேல், ஐந்நூற்றிரடி விழிபடைத்தாய், அமரரொடும் விடாத துன்பம் மருவேல், ஐம்மழைநிறத்தாய், மலர் அகத்தாய், எனத்தனது மலர்க்கண் சாத்திப் பெருவேலை பொருதலைக்கும் கருவேலைக்கு அவுணர் கணப்பெருகு வேலைக்கு ஒரு வேலை விடுத்தானை, இரு வேலையும் தம்மியேற்கு உணரல் வேலை இறைவனை இங்ஙனம் கூறும்.

மாணிக்கவாசகர் இத்தலத்து இறைவனை குரு வடிவாகக் கண்டு தரிசித்த இடம். ஆதலில் கோயிலினுள் மாணிக்கவாசக ருக்கென்று தனி சன்னதி உள்ளது. இறைவனது ஸ்ரீபாதத்தையும் (இறைவனது திருவடிகள்) இத்தலத்தில் பெற்றதாக இலக்கியங் களும் புராணங்களும் கூறும். இதனாலேயே கோயில் கருவறையிலும் மலை அடிவாரத்திலும் காலடிகள் செதுக்கப்பட்டுள்ளன. மாணிக்க வாசகர் சிற்பம் கோயிலின் தென் மேற்கில் அமைந்துள்ளது. அதற்கு நேர் அருகில் இறைவனின் ஸ்ரீபாதம் உள்ளது. அதன் வெளியில் மாணிக்கவாசகர் கைகூப்பிய நிலையில் அடியார்களுடன் நின்ற நிலையில் உள்ளார். இது 14ம் நூற்றாண்டினதாக இருக்கலாம். இக்கோயிலின் வெளிப்புற சுவரில் முதலாம் குலோத்துங்க சோழன் கல்வெட்டு உள்ளது. அவனது 3ம் ஆட்சியாண்டில் காஞ்சி மாநகரில் வாழும் எண்ணை வியாபாரிகள் கழுக்குன்ற கோயிலில் சந்தித்து திருக்கழுக்குன்றமுடைய நாயனார் கோயிலிலுள்ள திருப்பெருந் துறை ஆளுடையார் முன்னுள்ள கோயில் இறைவனுக்கு விளக் கெரிக்க தினமும் எண்ணெய் தருவதாக முடிவு செய்தனர். அதே சுவற்றில் மற்றொரு கல்வெட்டு மிகவும் சிதைந்த நிலையிலுள்ளது. இது மன்னனது 3ம் ஆட்சியாண்டையும் குறிக்கின்றது. எனவே இக்கோயிலும் முதலாம் குலோத்துங்க சோழன் காலத்திலேயே கட்டப்பட்டிருக்கலாம்.

கோபுரங்கள்

கோபுரங்கள்:

ஊரின் நாற்புறமும் கோபுரங்கள் உள்ளன. கோயில் என்றாலே கோபுரங்கள் எனக் கூறும் அளவுக்கு நான்கு திசை யிலும் கோபுரங்களும் அதை ஒட்டிய மாட வீதிகளையும் கொண் டுள்ளது. நாற்திசையிலுள்ள கோபுரங்களைத் தவிர வாயிலில் ஒரு பெரிய கோபுரம் உள்ளது. ஆக கோயிலுக்கு மொத்தமாக ஐந்து கோபுரங்கள் உள்ளன.

கோபுரங்கள் கீழ்ப்பகுதி கருங்கல்லாலும் மேற்பகுதி செங்கல் லாலும் ஆனவை. ஓலைச்சுவடிகளின்று கிருஷ்ண தேவராயரே இக் கோபுரங்களைக் கட்டினான் என அறிய முடிகின்றது. ஆனால் கழுக்குன்றத்தில் தற்போதுள்ள கோபுரங்களைப் பார்க்கையில் அவை 18ம் நூற்றாண்டினதாகத் தோற்றமளிக்கின்றது. உட்கோபுரங் களின் வெளிப் புறச்சுவரில் அஞ்சலி ஹஸ்தத்தில் ஒரு உருவம் உள்ளது. அவர் தன் தேவியரோடு காட்டப்பட்டு அவர் ரிஷப ஆருடராக இறைவனைக் கண்டு மகிழ்வது போல காட்டப்பட் டுள்ளது. அவனே இக்கோபுரங்களை எழுப்பியிருக்கலாம் என தோன்றுகிறது.

ராஜகோபுரம் :

கோயிலின் வாயிலில் கிழக்கு நோக்கி அமைந்துள்ள கோபுரம் இராஜகோபுரம் எனப்படுகிறது. ஏழு நிலைகளை உடை யது. சுமார் முப்பது அடி உயரமுடையது. கோபுரத்தின் கீழ் பகுதி கல்லால் ஆனது. அதிஷ்டானம், ஐகதி, பத்மம், கண்டம், முப்பட்டை குமுதம், கண்டம், கூடு போன்றவை உள்ளன. அதிஷ் டானத்தில் இரு நிலைகள் உள்ளன. மேல் பகுதியில் கோபுரம் போன்ற சிறு சிறு அமைப்பு காணப்படுகின்றது. தேவ கோஷ்டங் களின் நடுவே கும்ப பஞ்சரம் உள்ளது. தேவக் கோட்டங்களில் உருவம் இல்லை.அவை அழகுக்காகவே வைக்கப்பட்டுள் ளது. கோட்டங்களின் மேல் மகர தோரணம் கோபுரம் - போன்று காணப்படுகிறது. இக் கோபுரத்தின் பழமை அழகு தெரியாத அளவுக்கு வெண்மை பூசப்பட்டுவிட்டது.

கோயிலின் ஏழு நிலைகளிலும் ஒவ்வொரு வாயிலிலும் இரு துவார பாலர்கள் காட்டப்பட்டுள்ளனர். வலப்புறமுள்ள துவார பாலர் வலக்காலை கதை மீதும் இடப்புறமுள்ள துவாரபாலர் இடக்காலை கதை மீதும் வைத்துக் கொண்டுள்ளனர். வலக்கை கஜ ஹஸ்தத்திலும் இடக்கை விஸ்மயத்திலும் காட்டப்பட் டுள் ளன. ஒவ்வொரு துவார பாலரின் முகத்திலும் ஒரு புன்முறுவல் தவழ்கின்றது.

ரிஷிகோபுரம் :

கோயில் கருவறையின் நேரில் உள்ள இக்கோபுரம் ரிஷி கோபுரம் எனப்படுகின்றது. இக் கோபுரத்திலும் திருப்பணி நடை பெற்றபோது வர்ணம் பூசி விட்டனர். எனவே பார்ப்பதற்கு சுதை உருவம் போன்று தோற்றமளிக்கின்றது. இக்கோபுரம் ஐந்து நிலை களை உடையது. வேசர விமானம் போன்று அமைந்துள்ளது. தேவக் கோட்டங்கள் இருப்பினும் உருவம் ஏதும் இல்லை. நிலை களில் உருவம் உள்ளன. மேற்குப் பகுதியில் முதல் நிலையில் ஞான தக்ஷிண மூர்த்தி அமர்ந்த நிலையில் உள்ளார். காலின்கீழ் அபஸ்மாரம் உள்ளார். அருகில் ஞான உபதேசத்தைக் கேட்கும் முனிவர்கள். மேல் நிலைகளில் நடராஜர் உருவம் உள்ளது. காலின்கீழ் அபஸ்மாரம் காட்டப்பட்டுள்ளார். தெற்குப் பகுதியில் விஷ்ணு தன் தேவியருடன் முதல் நிலையில் அமர்ந்த நிலை யிலும் இரண்டாம் நிலையில் நின்ற நிலையிலும் காட்டப்பட் டுள்ளனர். கோபுரத்தின் உட்புறத்தில் மகரத்தின் மீது அமர்ந்த கொடிப்பெண் காட்டப்பட்டுள்ளது.

மேற்கு கோபுரம்:

ஏழு நிலைகளை உடையது. கட்டட அமைப்பைப் பார்க்கை யில் 18ம் நூற்றாண்டில் கட்டப்பட்டது போன்று தோற்றமளிக் கின்றது. கீழ்பகுதி கருங்கல்லாலும் மேற்பகுதி செங்கல்லாலும் ஆனது. கட்டட அமைப்பு அதிட்டானம், உபானம், பட்டிகை, கண்டம், முப்பட்டை குமுதம், கண்டம் கூடு (மனிதமுகம்) போன் றவை உள்ளன. அதிட்டானத்தில் இதுபோன்று இரு நிலைகள் உள்ளன. கோபுரத்தின் மேல் நிலையில் தேவக்கோட்டங்கள் உள்ளன. கோட்டங்களில் உருவம் இல்லை. கோட்டங்களின் மேல் மகரத் தோரணம் போன்று கோபுரம் போன்ற அமைப்புக் காணப் படுகிறது. தூண்களுக்கு இடையே கும்பபஞ்சரம் உள்ளது.

கும்பபஞ்சரம் மீதும் கோபுரம் போன்ற அமைப்பு உள்ளது. ஒவ்வொரு நிலையிலும் துவாரபாலர் உருவம் உண்டு. வலப் புறமுள்ள துவாரபாலர் வலக்காலை கதை மீதும் இடப்புறமுள்ள துவாரபாலர் இடக்காலை கதை மீதும் கொண்டுள்ளனர். வலப்புற துவாரபாலர் இடக்கையை கஜ ஹஸ்தத்திலும் வலக்கையை விஸ்மயத்திலும் காட்டி நிற்க இடப் புறமுள்ள துவாரபாலர் வலக் கையை கஜ ஹஸ்தத்திலும் இடக்கையை விஸ்மயத்திலும் காட்டி நிற்கிறார். மேற்கு கோபுர விதானத்தின் மீது 18ம் நூற்றாண்டு ஓவியங்கள் உள்ளன. அவ்வோவியத்தில் அரசனும் அரசியும் கழுகு வந்து உணவு உண்பதைக் காண்பது போலவும் பட்டர் அரசனுக்கு பரிவட்டம் அளிப்பது போலவும் காட்டப்பட்டுள்ளன. ஒரு புறம் மீனாட்சி திருக்கல்யாணமும் ஒருபுறம் ரதி மன்மதன் உருவமும் ஒருபுறம் விஷ்ணு, பிரம்மன், மாஹேஸ்வரர் போன் றோரும் காட்டப்பட்டுள்ளனர். கோயிலின் வெளிப்புறசுவரில் அஞ்சலி ஹஸ்தத்தில் ஒரு அரசன் தன் இரு தேவியருடன் காட்டப்பட்டள்ளார். அவர் இறைவனை ரிஷப ஆருடராகக் காண் பதாகக் காட்டப்பட்டுள்ளார். உட்புறத்தில் மகரத்தின் மீது நிற்கும் கொடிப்பெண்ணின் உருவம் உள்ளது. அதன்மீது சுருள் சுருளாகக் கொடி காட்டப்பட்டு அந்த சுருள்களில் லிங்கத்தை வணங்கும் அடியார் கூட்டம் காட்டப்பட்டுள்ளது. கோபுரத்தின் மேலும் நாட்டிய மகளிர் உருவம் உள்ளது. உட்புறச்சுவரில் அனுமன், காளிங்கமர்த்தனன் போன்ற உருவங்கள் உள்ளன.

தெற்கு கோபுரம் :

ஏழு நிலைகளை உடையது. கீழ்பகுதி கருங்கல்லாலும் மேற்பகுதி செங்கல்லாலும் ஆனது. கீழுள்ள அதிட்டானம் இரு நிலைகளை உடையது. அதிஷ்டானம், கண்டம், குமுதம், பட்டிகை, சுவர் போன்ற அமைபபுகளை தன்னகத்தே கொண் டுள்ளது. தேவ கோட்டங்களின் மீது கோபுரம் போன்ற அமைப்பு உள்ளது. தேவ கோட்டங்களில் உருவம் ஒன்றுமில்லை. ஒன்றில் உருவம் உள்ளது. உருவம் உள்ள தேவக்கோட்டம் சற்று முன் னோக்கியுள்ளது. தூண்களுக்கு இடையே கும்ப பஞ்சரம் உள்ளது.

தேவகோட்டத்தின் (இடப்புறம்) முதலில் ஒரு துவாரபாலர் உருவம் உள்ளது. இடக்கையை கஜ ஹஸ்தத்தில் வைத்து வலக் கையில் விஸ்மய முத்திரையிலும் காட்டுகிறார். இடக்காலை கதை மீது ஊன்றியுள்ளார்.

அருகில் வீரபத்ரர் உருவம் உள்ளது. அருகில் தக்ஷன் உருவம் சிறியதாகக் காட்டப்பட்டுள்ளது. தக்ஷன் எருமை முகத்தில் காட்டப்பட்டுள்ளார். வீரபத்ரர் ஜ்வாலா மகுடம் அணிந்துள்ளார். கைகளில் சூலும், கொம்பு, பாம்பு, கடிபோன்ற முத்திரைகளை காட்டி நிற்கிறார். வீரபத்ரரின் தோற்றம் மிகவும் அச்சம் தரும் வகையில் உள்ளது

வலப்புற கோட்டத்தில் ஒன்றில் துவாரபாலர் உருவமும் ஒருபுறம் பைவர் உருவம் உள்ளன. துவாரபாலர் வலக்காலை கதையின் மீது வைத்து வலக்கையை கஜஹஸ்தத்திலும் இடக்கையை விஸ்மய ஹஸ்தத்திலும் காட்டி நிற்கிறார்.

அருகிலுள்ள ஒரு கோட்டத்தில் பைரவர் உருவம் உள்ளது. பைரவர் பின்னால் நிற்கும் நாயின் உருவம் மிக அழகாக உள்ளது. பைரவர் ஆடையின்றி உள்ளார். இடையில் பாம்பு சுற்றப்பட்டுள்ளது. ஜ்வாலா மகுடம் உள்ளது. கைகளில் உடுக்கை, அங்குசம், சூலம், கடி முத்திரைகளை தாங்கி நிற்கிறார்.

சுற்றுப்புறங்களிலுள்ள தேவக்கோட்டங்களில் உருவம் ஏதும் இல்லை.

கோபுரத்தின் வெளிப்புறத்தில் (ஊரை நோக்கியவாறு உள்ளது) நான்கு கோட்டங்களில் உருவங்கள் உள்ளன. வலப்புறக் கோட்டங்களில் துவாரபாலரும் அருகில் அமர்ந்த கணபதியும் உள்ளனர். இடப்புற கோட்டங்களில் துவார பாலரும் முருகனும் உள்ளனர்.

வடக்கு கோபுரம் :

கோபுரங்களிலேயே மிகவும் உயரமானது கீழ்ப்பகுதி கடினமான கருங்கல்லினால் ஆனது. ஒன்பது நிலைகளை உடையது. ஊரில் நுழையும்போதே வடக்கு கோபுரம்தான் உயர்ந்து காணப்படுகிறது. மேல்பகுதி செங்கல்லால் ஆனது. தெற்கு கோபுரம் போன்றே கோட்டங்களில் துவாரபாலர் இருவர், வீரபத்ரர், பைரவர் ஆகியோர் உள்ளனர். தெற்கு கோபுரம் போன்றே விதானத்தின் மீது கருங்கல்லால் ஆன உருவங்கள் உள்ளன. கோயிலின் வெளிப்புறத்தில் கோட்டங்களில் துவாரபாலர், முருகன், வினாயகர் ஆகியோர் உள்ளனர். கோபுரத்தின் ஒவ்வொரு நிலையிலும்

துவாரபாலர் நிற்கின்றனர். கோபுரத்தின் வெளிப்புறத்தில் அரசன் தேவியரோடு அஞ்சலி ஹஸ்தத்தில் உள்ளார். உட்புறம் காளிங்க நர்த்தனன், நால்வர் போன்றோர் காட்டப்பட்டுள்ளனர். படியின் மேல் கொடிப்பெண் உள்ளாள். கொடிப் பெண்ணின் மீதுச் சுற்றப்பட்டுள்ள கொடியின் மீது லிங்கத்தை தொழும் அடியார் கூட்டம் உள்ளது. மறுபுறம் அனுமன், நால்வர், நாட்டிய மகளிர் போன்றோர் காட்டப்பட்டுள்ளனர்.

கிழக்கு கோபுரங்கள் தவிர மற்ற எல்லா கோபுரங்கள் பழமை அழகுடன் திகழ்கின்றன.

மதில்கள்

கோயிலின் வெளிப்புறத்தில் நான்கு புறங்களிலும் மதில்கள் சூழப்பட்டுள்ளன. இம்மதில்கள் ஆதித்தன் கால கோயிலுக்கென எடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆதித்தன் கோயில் தெற்கு நோக்கியும் தற்போதைய பக்தவத்சலர் கோயில் கிழக்கு நோக்கியும் அமைந்துள்ளது. இவ்விரு கோயில்களுக்கும் இணைந்து ஒரே மதில்கள் உள்ளன. இவை ஆதித்தன் கால கோயிலுக்கென எடுக்கப்பட்டவையா அல்லது சுந்தர பாண்டியன் காலத்தில் எடுக்கப்பட்ட கோயிலுக்கு எடுக்கப்பட்டவையா எனத் தெரியவில்லை. எனினும் தற்போதைய பக்தவத்சலர் கோயிலுக்கேற்றபடியே திசைகள் கூறப்பட்டுள்ளன. நாற்புற மதில்களிலும் ஏராளமான கல்வெட்டுகள் உள்ளன. இவற்றில் ஏராளமான சோழர் கால கல்வெட்டுகள் உள்ளன.

தெற்கு மதில்:

கோயிலின் தெற்கு மதிலில் தான் அதிகமான கல்வெட்டுகள் உள்ளன. இங்கு மொத்தம் முப்பத்தொன்று கல்வெட்டுகள் உள்ளன. இங்குள்ளதில் பழமையானது முதலாம் குலோத்துங்கன் காலத்தைச் சார்ந்தது. எனவே குலோத்துங்க சோழனே இம்மதிலைக் கட்டியிருக்கலாம். மேலும் இக்கோயிலில் இவனது காலத்தில் குலோத்துங்க சோழீஸ்வரம்' எனப்பட்டது. இவன் கழுக்குன்ற இறைவனுக்கு அதிக அளவில்கொடை கொடுத்துள்ளான். இவனது ஈழ படையெடுப்பை பற்றியும் அப்போருக்குதான் தன் சேனைகளை அனுப்பியதாகவும் இங்கு எழுதி வைத்துள்ளான். இவனது 47ம் ஆட்சியாண்டில் அரும்பிக்கிழான் பொன்னம்பலக் கூத்தன் எனும் முதலாம் குலோத்துங்கனின் படைத்தலைவன் விளக்கு கொடை கொடுத்துள்ளான்.

விக்ரம சோழன் :

3வது ஆட்சியாண்டில் சேவூர் எனும் கிராமத்தை விற்றுக் கொடுத்ததாகவும், 4ம் ஆட்சியாண்டில் பலம்பட்டின வேளாளன் ஒருவன் விளக்கெரிக்க ஆடு கொடுத்ததும், 9ம் ஆட்சியாண்டில் அம்மணம்பாக்கம் உறவர் இறைவனுக்கு நிவந்தம் செய்ய நிலம்

கொடுத்ததும் 13ம் ஆண்டில் என்றத்தூர் பள்ளி ஒருவன் விளக்கெரிக்க கொடை கொடுத்ததும் விளக்கப்படுகின்றது. 14ம் ஆண்டில் கம்பன் பள்ளிகள் மாணிக்கம் என்பான் விளக்கெரிக்க ஆடுகள் கொடுத்தான் எனவும் கூறுகின்றது.

இரண்டாம் குலோத்துங்கன் :

எதிரிலி சோழ சம்புவராயன் என்பான் ராமன் அம்பலக் கூத்தன் என்பானை ஒரு சச்சரவில் கொல்ல தண்டனையாக விளக்கெரித்தான்.

இரண்டாம் ராஜாதிராஜன் :

14ம் ஆட்சியாண்டில் ஏமப்பேரூர் ராஜேந்திர சோழ நல்லூர் நாட்டான் ஒருவன் கொடுத்த கொடையை கல்வெட்டாக எழுதி வைத்துள்ளான்.

17ம் ஆண்டில் சோழ கோன் சித்திரமேலிக் கடக்கன் என்பான் விளக்குக்கு கொடை கொடுத்துள்ளான்.

மூன்றாம் குலோத்துங்கன் : -

6ம் ஆட்சியாண்டில் எருவையூர்நாட்டு பள்ளி ஒருவன் விளக்கெரித்தான்.

12ம் ஆட்சியாண்டில் எழுவன் வஞ்சி முத்தரையன் என்பான் இருவரை கொன்றதால் இரு நந்தா விளக்கெரித்தான்.

15ம் ஆட்சியாண்டில் நாயகத்தேவன் என்பான் விளக்கெரித்தான். 25ம் ஆண்டில் ஒழுகரை நாட்டான் விளக்கெரித்தும் அதே ஆண்டில் கிழமையூர் என்ற ஊரை இரு பிராமணர்கள் கோயிலுக்கு கொடுத்த கொடையையும் குறிக்கின்றது.

30 ம் ஆண்டில் குன்றன் என்பான் தன் தாயின் நினைவாக விளக்கெரித்ததை விளக்குகின்றது.

35ம் ஆண்டில் நமிநந்தி அடிகள் மகன் பெரியன் இறைவனின் திருபட்டம் திருட அவன் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டு அப்பணம் நூறு கால் மண்டபம் கட்டப் பயன்பட்டது.

38ம் ஆண்டில் வீரர்களுக்கு நினைவு மண்டபம் எழுப்ப பழையனூர் நாட்டான் ஒருவன் தன் வீட்டை 400 காசுகளுக்கு விற்றுக் கொடுக்க அப்பணம் மண்டபம் கட்டிய கொத்தனாருக்குக் கொடுக்கப்பட்டது.

38ம் ஆண்டில் சிவந்த வண்ணப் பெருமாள் அகோரதேவ ராவலர் மடம் கட்ட வைப்பாக்கம் மாஹேஸ்வரர்கள் ஒரு வீடு விற்றுக் கொடுத்ததைக் கூறுகின்றது.

இதுதவிர மூன்றாம் குலோத்துங்கன் தன் ஆட்சியில் திருப் பட்டிகைப் பலகைச் செய்ய பொன், வெள்ளி போன்றவை கொடுத் தான். திருப்பட்டிகைப் பலகை என்பது இறைவனுக்கு அளிக்கப் படும் ஒரு கவசம் போன்றது.

மூன்றாம் ராஜராஜன் :

12ம் ஆட்சியாண்டில் ஒரு தவறு செய்ததற்காக சுந்த சியன் எனும் குறுமுகைப் பள்ளி ஒருவன் விளக்கெரித்தான். 17ம் ஆட்சியாண்டில் சோரன் பிச்சாண்ட தேவ பேரரையன் என்பான் விளக்கெரிக்க கொடை கொடுத்தான். 18ம் ஆண்டில் இறைவ னுக்கு ஆனஞ்சு அபிஷேகம் செய்ய களத்தூர் நாட்டான் ஒருவன் பசு தானம் அளித்தான்.

கோப்பெருஞ்சிங்கன் :

சோழர் ஆட்சியின் பின் ஆட்சி புரிந்தவன் காடவ மன்னன் கோப்பெருஞ்சிங்கன். இவனும் இருவிளக்கு கொடை கொடுத்துள் ளான். தன் வெற்றிகளைக் குறிக்கும் பாடல் கல்வெட்டை இங்கு தான் எழுதி வைத்துள்ளான்.

பாண்டியர் :

ஜடாவர்மன் சுந்தர பாண்டியன் நான்கு ஊர்களை இறை வனுக்கு அளித்ததை விளக்கும் ஒரு கல்வெட்டு இங்குள்ளது.

இவைத் தவிர அரசன் பெயரற்ற சில கல்வெட்டுகள் உள்ளன. அவற்றுள் ஒன்றில் படின அரசுகோல் எனும் நீர் அளவு குறிக்கப்பட்டுள்ளது.

T.7337.

வடமதில் :

இறைவனின் கோயிலைச் சுற்றி வடபுறத்தில் அமைந் துள்ள மதில் ஆதித்தன் கால முழுமைக்கும் இடப்படவில்லை. தேவகோட்டத்தில் அமைந்துள்ள விஷ்ணு துர்க்கை சிற்பம் அருகில் சுவர் அமைந்துள்ளது. இது பிற்காலத்தில் எடுக்கப்பட்டிருக்கலாம் என எண்ண வைக்கின்றது. ஆனால் இம்மதிலில் ராஜாதிராஜன் கல்வெட்டு எழுதப்பட்டிருப்பதிலிருந்து இம்மதில் அவனால் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்ற உண்மை புலனாகிறது. இம் மதிலில் மொத்தம் எட்டு கல்வெட்டுகள் உள்ளன. ராஜாதி ராஜனின் கல்வெட்டு மிகவும் சிதைந்துள்ளதால் அது கூறும் செய்திகளைத் தொகுக்க இயலவில்லை. அதே இடத்திலுள்ள பிற்காலத்தைச் சார்ந்த மற்றொரு கல்வெட்டு கோயிலில் விளக் கெரிக்க நிலம் தானமாக வழங்கியதை விளக்குகிறது.

மூன்றாம் குலோத்துங்கன் :

தனது 20ம் ஆட்சியாண்டில் குலோத்துங்க சோழ கங்கராயன் என்பான் புறவரி கட்டளை செலுத்த நிலம் கொடுத்ததை விளக்கு கிறது. இவன் குலோத்துங்கன் கால குறுநில மன்னனாக இருந் திருக்க வேண்டும்.

மற்றொரு கல்வெட்டு காவல் காணியாகக் கொடுக்கப்பட்ட நிலத்தைக் கண்காணிக்க மகாசபை ஒருவனை நியமித்ததாகக் கூறுகின்றது. மறுகல்வெட்டு திருப்புரியீடுப் பட்டி செய்ய நிலம் கொடுத்ததை விளக்கும்.

மூன்றாம் ராசராசன் :

தனது 20 ம் ஆட்சியாண்டில் புறவரி கட்டளைக்காக நிலம் கொடுத்ததை விளக்கும்.

விஜய நகர மன்னர்கள் :

விருப்பண்ண உடையாரின் ஆட்சியில் மணநல்லூர் ஆதித்த தேவன் என்பான் விளக்கு கொடை கொடுத்ததை விளக்கு கிறது.

T1337

கிருஷ்ண தேவராயர்:

இவரது ஆட்சியில் தனது தாயின் நினைவாக குறுமுகை என்ற ஊரை தெய்வங்கள் பெருமாள் முதலியார் திருமலை அப்பர் என்பான் தன் தாயின் நினைவாக அளித்தான்.

மற்றொரு கல்வெட்டு பெருங்குடி எனும் நிலத்தைக் (கோயிலுக்கு சொந்தமானது) குத்தகைக்கு விட்டதைக் குறிக்கின்றது.

மேற்குச்சுவர் : -

மேற்கு மதிலில் உள்ள பழமையான கல்வெட்டு குலோத்துங்க சோழனது. அவனது 42 ம் ஆட்சியாண்டைச் சார்ந்தது. இது மிகவும் சிதைந்துள்ளது. அடுத்து விக்ரம சோழனின் 3வது ஆட்சியாண்டு கல்வெட்டு உள்ளது. இரண்டாம் குலோத்துங்க சோழன் 3ம் ஆண்டு கல்வெட்டு மெய்க்கீர்த்தியுடன் காணப்படுகின்றது.

மூன்றாம் குலோத்துங்கன் :

14ம் ஆண்டில் உய்யவந்தான் மண்டையன் என்பான் பசுக்கள் கொடை கொடுத்துள்ளான். 20 ம் ஆட்சி ஆண்டில் என்றத்தூர் நாட்டான் ஒருவன் கொடை கொடுத்தான்.

கிழக்குச் சுவர் :

கிழக்கு மதிலில் பதினேழு கல்வெட்டுகள் உள்ளன. அதில் முற்பட்டது முதலாம் குலோத்துங்கன் காலத்தைச் சார்ந்தது. எனவே அவனே இம்மதிலையும் கட்டியிருக்க வேண்டும். 34ம் ஆண்டு கல்வெட்டு மஹாதேவர் கோயிலுக்கு கீழக்கந்தை வேளாளன் ஒருவன் விளக்கெரித்ததை விளக்குகிறது. மற்றொரு கல்வெட்டு பள்ளியறை சுவாமிக்கு நகை கொடுத்ததை விளக்குகின்றது.

விக்ரம சோழன் :

15ம் ஆட்சியாண்டு கல்வெட்டு கொடுவூர் பள்ளி ஒருவன் விளக்கெரிக்க பசுக்கள் கொடுத்ததை விளக்குகிறது. மற்றொரு கல்வெட்டு திரையன் என்பான் மூன்று விளக்கெரிக்க பசுதானம் கொடுத்ததைக் குறிக்கின்றது.

இரண்டாம் ராசராசன் :

இவனது மெய்க்கீர்த்தியுடன் தொடங்கி நாள் மட்டும் குறிப்பிடப்படுகின்றது.

குலசேகர பாண்டியன் :

அஷ்டமி தினத்தன்று அமிலப் பள்ளம் என்ற ஊரை திருக்கழுக்குன்ற நாட்டார் ஏலம் விட்டதாகக் கூறுகின்றது.

கம்பண்ண உடையார் :

கைக்கோளர் மீது இடப்பட்ட வரியைக் குறிக்கின்றது. துணிகளை வேற்றூருக்கு எடுத்துச் சென்று விற்கும் போதும், வாங்கும் போதும் இடப்பட்ட வரியைக் குறிக்கின்றது.

விருப்பண்ண உடையார்:

தையூர், சாலைப்பாக்கம், கடலூர் ஆகிய கிராமந்தோறும் சேர்ந்து ஆதித்த தேவன் முருகாழ்வான் என்பானுக்கு விற்கப் பட்டது.

கோயிலின் மிக முக்கியமான கல்வெட்டுகள் கோயிலின் சுற்றுப்புற சுவர்களிலேயே உள்ளன. மூன்று பக்க மதில்களையும் கட்டியவன் முதலாம் குலோத்துங்க சோழன் என கல்வெட்டுகளின்றுத் தெரிகின்றது. இக்கோயிலுக்கு குலோத்துங்கசோழீஸ்வரம் என்ற பெயர் உண்டு என்று கல்வெட்டுகளினால் பெறப்படும் உண்மை இக்கருத்தினை மெய்ப்பிக்கின்றது. வடபுறத்தில் பிற்காலத்தில் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்பது தெரிகின்றது. மதில்களில் சுமார் 71 கல்வெட்டுகள் உள்ளன. அவற்றில் பல மிகவும் சிதைந்த நிலையிலுள்ளன. பல கல்வெட்டுகளை அவை எழுதியது தெரியாமல் சுண்ணம்பை பூசிவிட்டனர். அவை நல்ல நிலையில் இன்று இருப்பின் மிக முக்கிய உண்மைகளை நம்மால் கண்டு பிடித்திருக்க முடியும். இன்று காணப்படும் நான்கு சுற்று மதில்களும் பக்தவத்சல கோயிலைச் சுற்றியும் அமைந்துள்ளன.

தீர்த்தங்கள்

தீர்த்தங்கள்

திருவெள்ளறையில் குளங்கள் எத்துணைப் பெருமை உடையனவோ திருக்கழுக்குன்றத்தில் தீர்த்தங்கள் அத்துணை பெருமை உடையவை. கழுக்குன்றத்தில் எங்கு நோக்கினும் அழகிய பெருங் குளங்கள்தான். இவை ஊரின் இயற்கை அழகைப் பன்மடங்கு உயர்த்திக் காட்டுகின்றன. ஊர் மக்களுக்கு குடிதண்ணீர் பஞ்சமின்றிக் கிடைக்கவும் இக்குளங்கள் உதவி செய்கின்றன. மலை மீதுள்ள வேதகிரீசர் கோயிலிலிருந்துப் பார்க்கையில் வரிசையாக எல்லா குளங்களும் நம் கண்முன்னே தோன்றுகின்றன. ஒவ்வொரு தீர்த்தமும் ஒரு முக்கிய செய்தியை நமக்குத் தெரிவிக்கின்றன. தமிழகத்தில் வேறெந்த தலத்திலும் இல்லாத விந்தைகள் இக்குளங்களில் நிகழ்கின்றன. இதனாலேயே இத்தலம் தீர்த்தங்களின் பெயரைக் கொண்டே சங்கு தீர்த்தம், பக்ஷி தீர்த்தம் என பல வகைகளிலும் அழைக்கப்படுகின்றன.

பக்ஷி தீர்த்தம்:

கழுக்குன்றத்தில் இரு கழுகுகள் (பக்ஷிகள்) இறைவனை வழிபடுதலால் இப்பெயர் பெற்றது. இக்கழுகுகள் இரண்டும் இறைவனை வணங்கி தினமும் 11 மணி அளவில் பக்ஷி பாறையில் அமர்ந்து பண்டாரம் கொடுக்கும் பொங்கலை உண்டு செல்கின்றன. இந்த காணற்கரிய காட்சியைக் காண்பதற்கென்று உலகெங்கிலும் இருந்து மக்கள் இங்கு வருகின்றனர். உணவு உண்ட பின் மலையை மும்முறை வலம் வந்து வேதகிரிஸ்வரரை வழிபடுகின்றன. இது கழுகுப் பூஜை எனப்படும். இக்கழுகுகள் காலையில் கங்கையில் நீராடி நடுப்பகலில் திருக்கழுக்குன்றத்தில் உணவு உட்கொண்டு, மாலையில் இராமேஸ்வரத்தில் வழிபட்டு இரவு சிதம்பரம் சென்று வருகின்றன என்று ஒரு கர்ண பரம்பரை கதை கூறுகின்றது.

கோயிலின் தல வரலாறுப்படி இக்கழுகுகள் யுகம் யுகமாக இறைவனைப் பூசிப்பதாகக் கூறப்படுகிறது.

பிரம்மனின் எட்டு புதல்வர்கள் ஈசனின் ஸ்வரூபணம் பெற கடுந்தவம் புரிந்தனர். அவர்களின் தவத்தை மெச்சி இறைவன் அவர்கள் கண்முன் தோன்றி வரம் தர விழைந்தார். ஆனால் பிரம்மனின் புதல்வர்கள் ஸயூஜ்யம் வேண்டும் என வரம் கேட்டனர். முதலில் இறைவனைக் காண விரும்பியவர்கள் இறைவனுடன் கலக்க வேண்டும் என்று வரம் கேட்டதால் இறைவன் வெகுண்டு அவர்களை எட்டு கழுகுகளாக மாற வேண்டும் என சபித்தார். சபிக்கப்பட்ட முனிவர்கள் தாங்கள் சாபவிமோசனம் பெற ஒவ்வொரு யுகத்திலும் இருவராக கழுகு உருவில் வந்து கழுக்குன்றத்தில் தொழுது விமோசனம் பெறுகின்றனர். கழுகுகள் சண்டன், பிரசண்டன் என்பன கிரேதாயுகத்திலும் சம்பாதி, ஜடாயு என்பவை திரேதாயுகத்திலும் சம்புகுத்தன், மாகுத்தன் என்பவை துவாபரயுகத்திலும் பூசித்துப் பேறு பெற்றன. சம்பு, ஆதி எனும் கழுகுகள் அடுத்த யுகத்திலும் பூஷா, விதாதா எனும் இரு கழுகுகள் கலியுகத்திலும் பூசித்து வருகின்றன. அருணகிரியே 'கழுகு தொழு வேதகிரி' எனப் பாடுவதிலிருந்து பன்னெடுங்காலமாக கழுகுகள் வந்து உணவு உண்பதுப் புலனாகின்றது. கழுகுகள் வந்து உணவு உண்பதைக் காண வரும் பக்தர்கள் இறைவனே நேரில் வந்து உண்பதாக எண்ணுகின்றனர். புலாலிலேயே வாழும் கழுகுகள் இவ்வளவுப் புனிதத் தன்மையோடு வாழுகின்ற நெறிமுறையை எங்கும் காணமுடியாது. இக்கழுகுகள் புலால் மறுத்தப் பறவைகளாய் வாழ்கின்றன. ஒற்றைக்கல் மண்டபத்தின் தூண்களில் பல ஆங்கில எழுத்துக்கள் காணப்படுகின்றன. இத்தலத்துக்கு வந்த டச்சுக்காரர்கள் இத்தலக் கழுகுகள் உணவு உண்கையில் அதில் மாமிசத்தைக் கலந்து வைத்ததாயும் உடனே அக்கழுகுகள் உண்ண மறுத்துச் சென்றன என்றெல்லாம் தல வரலாறு விரிகின்றது.

சங்கு தீர்த்தம்:-

கழுக்குன்றத்துக்கே உரிய மற்றொரு ஈடு இணையற்ற சிறப்பு இங்குள்ள சங்கு தீர்த்தம். பனிரெண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை சங்கு பிறக்கின்றது. பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை குரு கன்னியாராசியில் பிரவேசிக்கும் புனித நாளில் சங்கு பிறக்கின்றது. இக்குளத்தில் மார்க்கண்டேயன் பூசை செய்ததாக தல வரலாறு கூறுகின்றது. இறைவனின் திருவருளை வேண்டி நின்ற மார்க்கண்டேயன் இத்தலத்தில் வழிபட வழிபாட்டிற்குப் பாத்திரம் இன்றி வருந்த குளத்தினின்று சங்கு வந்ததென்றுக் கூறும்.

மேலும் இந்திய புனித நதிகளான கங்கை, யமுனை, சரஸ்வதி போன்றவர்களுக்கிடையே யார் உயர்ந்தவர் என்ற போட்டி வந்ததாக வும் அவர்களை சமாதனப்படுத்த இறைவன் அவர்கள் எல்லோரை யும் விட கழுக்குன்ற நீரே சிறந்தது எனக் கூறினார். எனவே எல்லா நதிகளும் அத்துணைப் பெருமை உடைய கழுக்குன்ற நீரில் வந்து கலந்ததாகக் கூறப்படுகின்றது. இத்தகைய அரும் பெரும் பேறு படைத்தது சங்கு தீர்த்தம்.

இந்த குளத்தில் தான் பனிரெண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை சங்கு பிறக்கின்றது. சாதாரணமாக கடலில் தான் சங்கு தோன்றும். கடல் நீரில் இருக்கும் எல்லா சத்துக்களும் இந்நீரில் உள்ளதால் தான் சங்கு பிறக்கின்றது. இக்குள நீரைப் பரிசோதித்த விஞ்ஞானிகளும் இத்தகைய முடிவுக்கு வந்துள்ளார்கள்.

சங்கு வரும் சமயத்தில் நீர் அனைத்தும் பொங்கி ஓவென்ற பயங்கர ஒலி எழும். அதை அறிந்த கோயில் அதிகாரிகள் மேள தாளத்துடன் அக்குளத்துக்குச் சென்று ஒரு தட்டை அதில் வைப்பர். எங்கோ எழும் சங்கு அத்தட்டின் நடுநாயகமாக வந்து அமரும். அச்சங்கை எல்லா வீதிகளுக்கும் ஊர்வலமாக எடுத்துச் செல்வர். பின்னர் மேளதாளத்துடன் அது கோயிலிலே வைக்கப்படும். சங்கை காதில் வைத்துக் கேட்டால் ஓம் ஓம் என்ற ஓங்கார ஒலி கேட்கும். இவ்வாறு சங்கு பிறந்த ஆண்டில் கும்பகோணத்தில் நடைபெறும் மஹாமகம் போன்று 'சங்கு தீர்த்த புஷ்கர மேளா' என்று சிறப்பாக விழா எடுப்பர். இக்குளம் வேதகிரிக்கு தென் கிழக்கில் உள்ளது.

நந்தி தீர்த்தம்:

கீழ்க்கோயிலின் வடகிழக்கு மூலையில் நந்தி தீர்த்தம் எனப்படும் தடாகம் உள்ளது. சிவபெருமானை பூஜிக்க இத்தலத் தில் வழிபட்ட நந்திதேவர் இக்குளத்தில் ஸ்நானம் செய்ததாகக் கூறப்படுகின்றது. அந்த குளத்தின் அருகில் மலையை நோக்கிய வாறு 4 அடி உயரமுள்ள மிக அழகான நந்தி உள்ளது. மலை மீதுள்ள லிங்கம் ஸ்வயம்பு ஆதலின் அதன் எதிரே நந்தி இல்லை. மேலும் மலை மீதுள்ள சொக்கநாயகி வேற்று சாதியைச் சார்ந்தவள். அதனால் வெகுண்ட நந்தி தேவர் இங்கு வந்து அமர்ந்தார் என்று கர்ண பரம்பரை கதை கூறுகின்றது. எனினும் நந்தி தேவர் தவம் செய்த இடம் இதுவே என தலப்புராணம் கூறுகின்றது.

-4 SEP 2012
சென்னை-5.

சஞ்சு தீர்த்தம்:

சுரகுரு என்னும் மன்னன் தன் நோய் நீங்கப் பெற்ற குளம் இது என்பர். மலை மீது கழுகுகள் உண்டாக்கிய சுனை நீரில் ஒரு சமயம் சுரகுரு மன்னனின் நாய் தன் தாகம் தணிகக நீர் அருந்த அதன் உடல் பொன்னிறமாக மாறியது. தன் வெண்குஷ்ட நோய் நீங்க வாயை மூடிக்கொண்டு இந்நீரில் மூழ்க வாய் நீங்கலாக எல்லா இடங்களும சாதாரணமாக மாறி நோய் நீங்கப் பெற்றான். எனவே இவன் வெள்வாயன் எனப்பட்டான் இன்றும் தோல் சம்பந்தப்பட்ட நோய்களுக்கு இக்குளநீர் மருந்தாகப் பயன்படுகிறது.

இந்திர தீர்த்தம்:

இந்திரன் பூசித்த இடம். தேவர்களின் தலைவன் தன் பாவம் நீங்க இக்குளத்திலே நீராடி இறைவனைத் தொழுது பேறுபெற்றான்.

வருணத் தீர்த்தம் :

மழை கடவுள் வருணன் இறைவனின் அருளைப் பெற தவம் செய்த இடம் வருணத்தீர்த்தம்.

இவைத்தவிர மார்க்கண்டேய தீர்த்தம், அகலிகா தீர்த்தம், சம்பாதி தீர்த்தம், ருத்ரகோடி தீர்த்தம் போன்று பல குளங்கள் உள்ளன.

இறைவன் மூர்த்தியாகவும் தலமாகவும் தீர்த்தமாகவும் இருந்து ஆன்ம கோடிகளுக்குத் திருவருள் புரிகின்றார் என்பது ஆன்றோர் கண்ட மரபு. இதையே தாயுமானார் சுவாமிகள் மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாய்த் தொடங்கினார்க்கு வார்த்தை சொல்ல சத்குருவும் வாய்க்கும் பராபரமே என்று பாடுகிறார். இதையே திருக்கழுக்குன்ற தல வரலாறு எழுதிய அந்தககவி வீரராகவ முதலியாரும்,

காணினுங்கைதொடி னுமள்ளித் தெளிப்பினுமுட்
கொளினும்
கணப்பொழுது முழுகினும் போய்க்கால் வழுக்க விழினும்
பாணிவிரி திரையினொரு பனித்திவலைபடினும்

படருங் காற்றணுகினு மெய்ப் பாதகமுங் குடிபோம்
சேணுலகு தொழுமிந்தத் தடந்தொறு நீர்முகந்து
செலுமடியோரய மேதத்திற நிகராம் விரதம்
பூணுமவர் படிந்தியற்றிலனந்த மெனப் பலிக்கும்
புராரியென்றுந் தீர்த்தமென்று மிரண்டிலையிப்புரிக்கே.

இங்ஙனம் கழுக்குன்றத்தில் வெவ்வேறு தீர்த்தங்களில் பலவடிவாக நின்று அருள்பயக்கிறார்.

பிற கோயில்கள்

ருத்ரன் கோயில் :

ஊரின் ஒதுக்குப்புறமாக வடகிழக்கில் அமைந்துள்ளது. இதுவே புராதனக் கோயில் என ஊர் மக்கள் அனைவரும் கருது கின்றனர். ருத்ரர்கள் பூசித்த இறைவன் அந்த ருத்ரர்கள் மலை மீது ஏறாமல் கீழிருந்தபடியே வணங்கிச் சென்றனர்.

ருத்ர பாராயணம் செய்து கொண்டிருந்த அரக்கர்களைக் கொன்ற பாவத்தைப் போக்கிக் கொள்ள மலை மீதிருந்த கோடிக் கணக்கான ருத்ரர்கள் இறைவனை நோக்கித் தவம் செய்தனர். எனவே திருக்கழுக்குன்றத்துக்கு ருத்ர கோடி க்ஷேத்ரம் என்றும் இக் கோயிலைப் பற்றி ருத்ரகோடி மகாத்மியம் என்ற புத்தகமும் உண்டு. கழுக்குன்ற இறைவனுக்கு பூசை செய்யும் பொழுதும் இத்தலம் ருத்ரகோடி க்ஷேத்திரம் என கூறப்படுகிறது. அத்துணை பழமை வாய்ந்தது இக்கோயில் என்கின்றனர். ஆனால் இக்கோயிலின் கட்டட அமைப்பைப் பார்க்கையில் இது 18ம் நூற்றாண்டில் கட்டப் பட்டதென்றே தோன்றுகிறது.

ருத்ரர்கள் அசுரர்களுக்கிடையே நடந்த போர் சமணருக்கும் சைவர்களுக்கும் நடந்த போரை குறிக்கலாம் என்ற கருத்து நிலவு கிறது. எனவேதான் நால்வர் இத்தலத்தைப் பற்றிப் பாடுகையில் சமணரை சாடி இருக்கின்றனர். எனவே இங்கு சமணர் பலர் வாழ்ந் திருக்க வேண்டும் என்பது புலனாகிறது. இது ஒரு வைப்புத்தலம்.

ருத்ரன் கோயில் இன்று மிகவும் பாழடைந்த நிலையிலுள் ளது. கோயிலுக்குப் பூசை செய்வோர் தவிர செல்வோர் யாரும் இல்லை. கோயில் ஊரின் ஒதுக்குப் புறத்தில் அமைந்துள்ளது ஒரு காரணமாகும். ஒரு காலத்தில் இக்கோயிலில் சிறப்பாக வழிபாடு நடைபெற்றிருக்க வேண்டும்.

கருவறை கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. லிங்கம் ஸ்படிக கல்லால் ஆனது இறைவனது பெயர் ருத்ர கோடீஸ்வரர். கருவறை யின் வாயிலில் கழுக்குன்றக் கோயிலின் கண் துவாரபாலர் சிலை அமைந்துள்ளது. தேவ கோட்டங்களில் உருவங்கள் உள்ளது.

அவைகள் அனைத்தும் தாம் இருக்க வேண்டிய இடங்களில் அமைந்துள்ளன. தெற்குப் பகுதியில் வினாயகர், வடக்குப் பகுதியில் பிரம்மன், கிழக்குப் பகுதியில் விஷ்ணு, மேற்குப் பகுதியில் ஞான தக்ஷிணாமூர்த்தி ஆகியோர் உள்ளனர். கோயிலின் இரண்டாம் திருச்சுற்றில் தெற்குப் பகுதியில் நால்வரும், வடக்குப்பகுதியில் பைரவரும், அருகில் சண்டியும் மேற்குப் பகுதியில் ஷண்முகரும் உள்ளனர்.

அம்மன் கோயில் முன்பு வெளிப்புறத்தில் தனியாக கிழக்குப் பார்த்து வைக்கப்பட்டிருந்தது. அக்கோயில் இடிந்து விடவே தற்போது இறைவியை கோயிலினுள் வைத்துள்ளனர். அன்னை யின் பெயர் அபிராம சுந்தரி பத்ர பீடத்தின் மீது பத்மபீடத்தில் நின்றநிலை. நான்கு கரங்கள் மேலிரண்டு கரங்களில் மலர்களும் கீழிரண்டு கரங்களில் பாசம், அங்குசம் போன்றவையும் உள்ளன. இச்சிற்பமும் 18ம் நூற்றாண்டைச் சார்ந்தது என்றே கூற வேண்டும்.

இறைவனின் முன் முருகன், வள்ளி, தெய்வயானையுடன் இருக்க ஒரு சிற்பம் காணப்படுகிறது. இவ்விறைவனுக்கு ஆண்டு தோறும் சூரசம்ஹார உற்சவம் நடைபெறும். வாயிலில் சூரிய, சந்திரர் உள்ளனர். இதைத் தவிர தனிப்பட்ட நவக்ரஹங்கள் இல்லை. வாயிலின் தெற்கில் கருடாழ்வார் சிலை உள்ளது.

கோயிலினுள் அவ்வூர் கிராமத் தேவதைக் கோயிலைச் சார்ந்த பல செப்புத் திருமேனிகள் உள்ளன. அவை அனைத்தும் சுமார் நூறாண்டுகளுக்கு முற்பட்டவை. கோயிலினுள் முப்பட்டை தூண்கள் பல உள்ளன. இவைகளே கோயில் கி.பி. 18ம் நூற்றாண் டில் கட்டப்பட்டது என்பதை பறைசாற்றுகின்றன.

கோயில் கோபுரம் கழுக்குன்ற ராஜகோபுரம் போன்ற அமைப் புடையது. மாறாக கோபுரம் முழுதும் செங்கல்லால் ஆனது. நான்கு நிலைகளைக் கொண்டது. ஒவ்வொரு நிலையிலும் துவார பாலர் உருவம் இல்லை. அம்மன் கோயிலுக்கென்று தனி விமானம் உள்ளது.

நால்வர் கோயில்:

சமயக்குரவர் நால்வராலும் புகழ்ந்து பாடப்பட்டுள்ளது இத் தலம். எனவே தான் இத்தலத்தில் நால்வருக்கென்று தனிக்

கோயில் அமைக்கப்பட்டுள்ளது. 18ம் நூற்றாண்டில் கட்டப்பட் டிருக்கலாம். கோயிலிலிருந்து ஒரு பர்லாங் தொலைவிலுள்ள நால்வர் பேட்டையில் அமைந்துள்ளது.

கோயிலில் நால்வருக்கென்று தனித்தனி சன்னதிகள் உள்ளன. மாணிக்கவாசகர் இவ்வூரில் குரு தரிசனம் பெற்றவர். ஆதலின் அவருக்கு அதிக சிறப்பளிக்கப்பட்டுள்ளது. நால்வரின் செப்புத் திருமேனிகளும் உள்ளன. அவற்றில் ஞானசம்பந்தர் செப்புத்திருமேனி பழமையானது. அறுபத்து மூவர் விழாவின் போது இக்கோயிலில் விசேடமாக பூசைகள் நடைபெறும். இறைவி யின் பார்வேட்டை தினத்தன்று இறைவி நால்வர் கோயிலின் முன்னாலேயே சம்ஹாரம் செய்வாள்.

தீர்த்தஈஸ்வரர் கோயில்

இக்கோயில் சங்கு தீர்த்தக் குளக்கரையின் மேற்குக் கரை யில் அமைந்துள்ளது. இக்கோயில் வேதகிரி கோயிலின் முன் மண்டபம் கட்டப்பட்ட காலத்தில் 18ம் நூற்றாண்டு கட்டப்பட்டிருக் கலாம்.

கருவறை கிழக்கு பார்த்து அமைந்துள்ளது. ஆங்கே நடுவில் ஸ்படிக கல்லால் ஆன லிங்கம் உள்ளது கோயிலின் முன் மண்ட பத்தில் குதிரை மீது ஏறிச் செல்லும் வீரன் சிற்பமுள்ளது. கோயில் நில மட்டத்தைவிட சற்று தாழ்ந்துள்ளது.

இரட்டை வினாயகர் கோயில்:

இக்கோயிலும் சங்கு தீர்த்த குளக்கரையில் அமைந்துள்ளது. இக்கோயில் சரகுரு என்னும் மன்னன் கட்டினான் என ஓலைச் சுவடிகள் கூறுகின்றன. இம்மன்னன் எப்போது ஆட்சிபுரிந்தான் என சரிவர தெரியவில்லை. எனினும் இக்கோயில் பிற்காலத்திலேயே கட்டப்பட்டிருக்க வேண்டும். மேற்குப்பார்த்து ஒரு பிள்ளையார் முகமும் கிழக்குப் பார்த்து ஒரு பிள்ளையார் முகமும் இருப்பதால் இரட்டை வினாயகர் என அழைக்கப்படுகிறார்.

அனுமார் கோயில் :

இது சங்கு தீர்த்த குளக்கரையின் மறுபுறம் அமைந்துள்ளது. இக்கோயிலிலுள்ள அனுமன் சிலை சுமார் 4 அடி உயரமுடையது. நிற்கும் அனுமன் மிக அழகிய சிற்பம்.

சொக்கநாயகிஅம்மன் கோயில் :

இக்கோயில் மலை மீது ஏறும் வழியில் அமைந்துள்ளது. மலை மீதுள்ள அம்மன் திருமணம் ஆகும் முன் இங்கேயே இருந்து தவம் செய்தாள் என்றும் அவள் தன் காலடிகளை வைத்து மலை மீது ஏறிச் செல்ல அவளது பாதச் சுவடுகள் இங்குள்ளன என்றும் கூறுகின்றனர்.

பத்மபீடத்தின் மீது நின்ற நிலை. கைகளில் மலர்களுடனும் காணப்படுகிறது.

இது தவிர மலை மீது ஏறுகையில் மலை அடிவாரத்தில் வினாயகர், முருகர் கோயில்கள் உள்ளன.

கோயிலின் நேர் எதிரில் தேரடிப் பிள்ளையார் கோயில் உள்ளது. கோயிலில் இறைவனுக்கு நடைபெறும் நிவந்தங்கள் அனைத்தும் முதலில் தேரடி வினாயகருக்கே நடைபெறும். அங்குள்ள விமானத்தில் நாலா புறமும் வினாயகர் உருவங்கள் உள்ளன. இங்கு இறைவனுக்கு இருவேளை நிவந்தம் நடை பெறும்.

செல்லிஅம்மன் கோயில்:

ஊர் கிராம தேவதைக் கோயில் பத்ரபீடத்தில் பத்மபீடத்தில் நின்றநிலை. ஜ்வாலா மகுடம் கண்களில் கோபம் தோன்றுகிறது. கழுத்தில் ஆரம், கணுக்கால் வரை ஆடை நான்கு கரங்கள். கைகளில் பாசம், அங்குசம், சூலம், அகல் போன்றவை உள்ளன. இதே போன்று ஒரு செப்புத் திருமேனியும் உள்ளது.

ஒசூரம்மன் கோயில் :

இக்கோயில் ஊரின் கிழக்குப் புறத்தில் உள்ளது. பத்ர பீடத்தின் மீது பத்ம பீடத்தில் இடக்கால் நீட்டி வலக்கால் மடக்கி அமர்ந்த நிலை. தலைமேல் ஐந்து தலை நாகம் உள்ளது. தலையில் கிரீட மகுடம் காதுகளில் பத்ர குண்டலம் இதே போன்ற செப்புத் திருமேனியும் கோயிலில் உள்ளது.

கிராம தேவதைக் கோயில்களில் ஆடிமாதம் சிறப்பாக உற்சவம் நடைபெறுகின்றது. ஒரு ஆடி வெள்ளிக்கிழமையன்று உற்சவம் நடைபெறும். ஞாயிற்றுக் கிழமையன்று இறைவிக்கு

கூழ் வார்த்து ஏழைகளுக்கு அளிப்பர், அன்று கோழி அல்லது ஆடு பலியாக வழங்கப்படும் ஞாயிற்றுக் கிழமை அன்று இரவு அம்மன் மேள தாளத்துடன் ஊர்வலம் வருவாள்.

ஆடித் திருவிழாவின் போதுநெருப்பு மிதி விழாவும் கத்தி ஏறுவிழாவும் நடைபெறும்.

கத்தி ஏறும் விழா:

ஏணி போல இரு உயர்ந்த கொம்புகளை நடுவர். அதன் மேல் சாணை தீட்டிய கத்திகளை வரிசையாக படிபோல செருகுவர். பின்னர் பக்தர்கள் அக்கத்தியின் மீது ஏறுகின்றனர். கத்தியின் மீது நின்றபோதும் ஒருவருக்கும் எந்த காயமும் ஏற்படுவ தில்லை. அப்படி யாருக்கேனும் காயமேற்பட்டால் அவன் நோன்பு சரியாய் கடைபிடிக்கவில்லை என்றும் அதனால் அம்மன் வெகுண்டு விட்டாள் என்றும் கருதுகின்றனர்.

நெருப்பு மிதி விழா:

வரிசையாக விறகுகளை அடுக்கி நெருப்பு ஏற்றுகின்றனர். அதன் முன் அம்மனை வைத்து அவள் மடியிலும் நெருப்பு கட்டுவர். அந்த நெருப்பு பற்றிக் கொள்ளாமல் இருந்தால் அனை வரும் நெருப்பில் இறங்குவர். அந்நெருப்பை நீரென எண்ணி மிதிக்கின்றனர். எவருக்கும் ஒரு தீங்கும் நேர்வதில்லை.

செப்புத் திருமேனிகள்

செப்புத் திருமேனிகள்:

பல்லவர், சோழர், காடவர், விஜயநகர மன்னர், பாண்டிய மன்னர்கள் போன்ற பல வம்ச மன்னர்களால் ஆதரிக்கப்பட்ட திருக்கழுக்குன்றக் கோயிலில் அம்மன்னர்கள் ஈந்த பல செப்புத் திருமேனிகள் உள்ளன. 10-ம் நூற்றாண்டைச் சார்ந்த மிகவும் அழகு வாய்ந்த பல செப்புத் திருமேனிகள் இங்குள்ளன. 19ம் நூற்றாண்டைச் சார்ந்த பல செப்புத் திருமேனிகள் உள்ளன.

10-ம் நூற்றாண்டைச் சார்ந்த பல அழகிய செப்புத் திரு மேனிகள் சோழ மன்னர்களால் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். சோமாஸ்கந்தர் சிலை மிகவும் பழமையானது. 10ம் நூற்றாண்டைச் சார்ந்தது. அச்சிலை தற்பொழுது சோமாஸ்கந்தர் ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளது. நீண்டபத்ர பீடத்தின் மீது அமர்ந்த நிலை. மூவரும் ஒரே பீடத்தின் மீது அமர்ந்துள்ளனர். ஈசன் வலக்காலை நீட்டி இடக்கால் மடக்கியுள்ளது. வலக்கைகளில் அபயம், மழு போன்ற முத்திரைகளும் இடக்கைகளில் மான், பொன் போன்றவை களும் உள்ளன. கரண்ட மகுடம் வாகுவலயம், கழுத்தில் ஆரம், கடிபந்தம், உதரபந்தம் போன்றவை உள்ளன. கணுக்கால் வரை ஆடை உள்ளது. நீள் செவியாகக் காட்டப்பட்டுள்ளது. நடுவில் ஸ்கந்தன் நின்ற நிலையிலுள்ளார். இறைவி கடிஹஸ்தம், சிம்ம கரணம் காட்டி வலக்கால் மடக்கி இடக்கால் நீட்டி அமர்ந்துள்ளார் கிரீட மகுடம், பத்ர குண்டலம், கழுத்தில் ஆரம், வாகுவலயம், கைகளில் வளையல்கள் போன்றவை உள்ளன. கணுக்கால் வரை ஆடையுள்ளது.

மற்றொரு சோமாஸ்கந்தர் செப்புத்திருமேனி உள்ளது. இது 14ம் நூற்றாண்டைச் சார்ந்தது. மூவரும் தனித்தனி பீடத்தில் அமர்ந்த நிலை. பத்ரபீடத்தின் மீது பத்மத்தில் அமர்ந்த நிலை முந்தைய செப்புச் சிலையைக் காட்டிலும் பெரியது.

நடராஜர்:

சிவன் கோயில்களில் நடராஜர் மண்டபம் அமைத்தல் மரபு. அம்மரபுக்கு கழுக்குன்றக் கோயிலும் விதிவிலக்கல்ல. பல நடராஜர் செப்புத் திருமேனிகள் இக்கோயிலில் உள்ளன. இங்குள்ள ஒரு செப்புச் சிலை கி.பி. 10, 11-ம் நூற்றாண்டைச் சார்ந்தது.

பத்ரபீடத்தின் மீது பத்மபீடத்தின் மீது நின்ற நிலை. வலக் கையில் உடுக்கை, அபயம் இடக்கையில் கஜஹஸ்தம், அனல் போன்றவை உள்ளன. இடையில் புலித்தோல் ஆடை உள்ளது. விரிசடை மிக அழகாகக் காட்டப்பட்டுள்ளது. வலக்கையில் பாம்பு சுற்றப்பட்டுள்ளது. வலது காது விரிசெவியாகவும் இடக்காதில் பத்ர குண்டலமும் உள்ளன. கீழே அபஸ்மாரம் இருக்க பாம்பு படம் விரித்து ஆடுகின்றது. இடையில் நீண்ட ஆடையொன்று உள்ளது. சுற்றிலும் பிரபை உள்ளது. மற்றொரு நடராஜர் செப்புத் திருமேனி உள்ளது. 14ம் நூற்றாண்டைச் சார்ந்தது. கீழே அபஸ் மாரம் வியப்பே உருவாகக் காட்டப்பட்டுள்ளான். விரிசடை மிகச் சிறியதாக உள்ளது. சுற்றிலும் பிரபை உள்ளது.

அம்மன் :

பத்ர பீடத்தின் மீது பத்ம பீடத்தில் நின்ற நிலை வலக்கையில் கடிஹஸ்தமும் இடக்கை டோல ஹஸ்தத்திலும் உள்ளன. கணுக் கால் வரை ஆடைஉள்ளது. கைகளில் வளையல்கள் கழுத்தில் ஆரம், உதரபந்தம் போன்றவை உள்ளன. காதுகளில் பத்ர குண்டலம் போன்றவை உள்ளன. இது 10,11ம் நூற்றாண்டைச் சார்ந்த செப்புத் திருமேனி.

சிவகாமி:

பத்ர பீடத்தின் மீது பத்ம பீடத்தில் நின்ற நிலை. வலக்கை சிம்மகரணத்திலும் இடக்கை டோலஹஸ்தத்திலும் உள்ளன. கழுத் தில் ஆரம் கைகளில் வளையல்கள் காதுகளில் பத்ரகுண்டலம், கால்களில் தண்டை கணுக்கால் வரை ஆடையுள்ளது. கி.பி. 10, 11ம் நூற்றாண்டைச் சார்ந்த செப்புத் திருமேனி.

திருஞானசம்பந்தர் :

பத்ர பீடத்தின் மீது பத்மபீடத்தில் நின்ற நிலை. வலக்கை சுட்டிக்காட்டுவதைப் போல உள்ளது. தலையில் கிரீடம் உள்ளது.

காதுகளில் குண்டலம். கழுத்தில் ஹாரம் தோளில் வாகு வலயம் சன்னவீரம் உள்ளன. உதரபந்தம் கால்களில் தண்டை, காப்பு, பாதசங்கிலி போன்றவை உள்ளன. இது கி.பி. 10,11ம் நூற்றாண் டைச் சார்ந்த செப்புத்திருமேனி. காரைக்கால் அம்மை - பத்ர பீடத்தின் மீது பத்ம பீடத்தில் அமர்ந்த நிலை எலும்பும் தோலு மாகக் காட்டப்பட்டுள்ளாள். வலக்கையிலும் இடக்கையிலும் தாளம் போடுவது போல உள்ளது. கழுத்தில் உருத்திராட்ச மாலை காட்டப்பட்டுள்ளது. கி.பி. 12,13ம் நூற்றாண்டைச் சார்ந்த செப்புத் திருமேனி.

பிரதோஷ நாயனார் :

பத்ரபீடத்தின் மீது பத்ம பீடத்தின் மீது நின்ற நிலை. தனித்தனியாக பத்ம பீடத்தில் நின்ற நிலை. இறைவன் சமபங்கத் தில் நின்றநிலை. நான்கு கரங்கள் கைகளில் மழு, மான், அபயம், வரதம் போன்றவை உள்ளன. தலையில் கரண்ட மகுடம். காது களில் பத்ரகுண்டலம் கழுத்தில் ஆரம், வாகுவலயம், கடிபந்தம், உதரபந்தம், மெல்லிய முப்புரி நூல் போன்றவை உள்ளன. இறைவி பத்மபீடத்தில் திரிபங்கத்தில் நின்ற நிலை வலக்கையில் மலரும் இடக்கையில் டோலஹஸ்தமும் காட்டப்பட்டுள்ளன. கழுத்தில் ஆரம் கால்களில் தண்டை போனறவை உள்ளன. மிக அழகிய இந்த செப்பு திருமேனி கி.பி. 14ம் நூற்றாண்டைச் சார்ந்தது.

மேற்கூறிய செப்புத் திருமேனிகள் பழமையானவை. மற்றவை அனைத்தும் இருநூறு வருடங்களுக்கு முற்பட்டவை. மாரியம்மன் செப்புச்சிலை ஒன்று உள்ளது. பத்ரபீடத்தின் மீது பத்ம பீடத்தின் மேல் அமர்ந்த நிலை. இடக்கால் மடித்து வலக்கால் நீட்டிய நிலையில் உள்ளாள். கழுத்தில் ஆரமும் காலில் தண்டை யும் காதுகளில் பத்ர குண்டலமும் அணிந்து உள்ளாள். கிரீடம், குடம், நான்கு கரங்கள் அவைகளில் அங்குசம், சூலம், நீண்ட கத்தி, அகல் போன்றவை உள்ளன.

செல்லி அம்மன் :

ஜ்வாலா மகுடம் பத்ரபீடத்தில் பத்ம பீடத்தின் மீது நின்ற நிலை. கணுக்கால் வரை ஆடை. கழுத்தில் ஆரம். மார்பில் மெல்லிய முப்புரி நூல். காதுகளில் பத்ரகுண்டலம். நான்கு கரங்கள். கைகளில் பாசம், சூலம் அகல் போன்றவை உள்ளன. 100 வருடத்துக்கு முற்பட்டது.

சொக்கநாயகி :

வேதகிரீசர் கோயிலில் அமைந்துள்ள அம்மன். மிக அழ குடையது. பத்ரபீடத்தின் மீது பத்ம பீடத்தில் நின்றநிலை. சுற்றிலும் திரிசூலங்கள் உள்ளன. தோளில் வாகுவலயம் சுருள் சுருளான ஆடை. காதுகளில் பத்ர குண்டலம் போன்றவை காட்டப்பட் டுள்ளன. நூறு வருடங்களுக்கு முற்பட்டது.

விநாயகர்:

பத்ரபீடத்தில் நிற்கும் நர்த்தன விநாயகர் நூறு வருடங் களுக்கு முற்பட்டது. நான்கு கரங்கள், துதிக்கை இடப்புறம் வளைந் துள்ளது.

சந்திரசேகரர் :

பத்ர பீடத்தின் மீது பத்ம பீடத்தில் நின்ற நிலை. நான்கு கரங்கள் கைகளில் மழு, மான், அபயம் வரதம் போன்றவை உள்ளன. தலையில் கரண்ட மகுடம். காதுகளில் பத்ர குண்டலம், கணுக்கால் வரை ஆடை, நூறு வருடங்களுக்கு முற்பட்டது.

அம்மன்:

பத்ம பீடத்தில் நின்றநிலை. தலையில் கரண்ட மகுடம் இருகரங்கள். கைகளில் மலர், டோல ஹஸ்தம் காட்டப்பட் டுள்ளன. காதுகளில் பத்ர குண்டலம் கணுக்கால் வரை ஆடை உள்ளது. நூறு வருடங்களுக்கு முற்பட்ட செப்புத் திருமேனி.

வள்ளி:

பத்மபீடத்தின் மீது நின்றநிலை வலக்கரம் டோலஹஸ் தமும் இடக்கையில் தாமரை மொட்டும் உள்ளன. காதுகளில் பத்ரகுண்டலம் கழுத்தில் ஆரமும் உள்ளன. நூறு வருடங்களுக்கு முற்பட்டது.

சுப்ரமணியர்:

பத்ம பீடத்தின் மீது நின்றநிலை. கைகளில் சூலம் சக்தி, அபயம், வரதம் போன்றவை உள்ளன. காதில் பத்ர குண்டலம், கழுத்தில் ஆரம், மார்பில் முப்புரிநூல், சன்னவீரம் போன்றவை காட்டப்பட்டுள்ளன. நூறு வருடங்களுக்கு முற்பட்டது.

தேவசேனா :

பத்ம பீடத்தில் நின்றநிலை. நூறு வருடங்களுக்கு முற்பட்ட இச்சிலை மிக அழகுடையது. கைகளில் சூலம், மலர் உள்ளன. கழுத்தில் ஆரம், கைகளில் வளைகள் போன்றவை உள்ளன.

சுக்ரவார அம்மன் :

தலையில் கிரீடம், கழுத்தில் ஆரம் கைகளில் வளைகள். நான்கு கரங்கள் கணுக்கால் வரை சுருள் சுருளான ஆடை காட்டப் பட்டுள்ளது.

சண்டிகேஸ்வரர்:

பத்ம பீடத்தில் வலக்கால் நீட்டி இடக்கால் மடக்கியநிலை. இருகைகளும் அஞ்சலி ஹஸ்தத்தில் உள்ளன. நூறு வருடங் களுக்கு முற்பட்டது. இவை தவிர அஸ்தரயர், பாவைவிளக்கு போன்ற செப்புத் திருமேனிகள் உள்ளன. அறுபத்து மூன்று நாயன்மார்களின் செப்புச் சிலைகள் உள்ளன. இவர்கள் அனை வரும் நின்ற நிலையில் அஞ்சலி ஹஸ்தத்தில் காட்டப்பட் டுள்ளனர். நால்வரின் செப்புத் திருமேனிகள் பல உள்ளன. நால்வருக்கென ஏற்படுத்தப்பட்ட தனிக் கோயிலிலும் நால்வர் செப்புத் திருமேனிகள் உள்ளன.

ருத்ரகோடி வினாயகர் :

இத்தலம் ருத்ர கோடி க்ஷேத்திரம் எனப் பெயர் பெற்றதால் ருத்ர கோடி வினாயகர் என்ற செப்புசிலை உள்ளது. பத்ரபீடம் மேல் பத்ம பீடத்தில் நின்ற நிலையில் உள்ளார். இடம்புரி வினாயகர். நான்கு கரங்கள் இச்சிலை மிக அழகாக உள்ளது. இது இருநூறு வருடங்களுக்கு முற்பட்டது.

காளிங்கநர்த்தனன் :

பத்மபீடத்தின் மேல் நடனமாடும் இளம் கிருஷ்ணன் உருவம். காளிங்கன் ஐந்து தலை நாகமாகக் காட்டப்பட்டுள்ளான். வலக்கை சுட்டிக் காட்டுவது போலவும் இடக்கை நர்த்தனம் ஆடுவது போலவும் அமைந்தள்ளது. இச்சிலையும் நூறு வருடங்களுக்கு முற்பட்டது.

சுப்ரமணியர், வள்ளி, தேவசேனாவுடன் நிற்கும் மற்றொரு செப்புத்திருமேனி உள்ளது. இந்த உற்சவருக்கே சூரசம்ஹாரம் எனும் உற்சவம் நடைபெறுகின்றது.

திரௌபதி, அர்ச்சுனன், தருமராஜா், பீமன் போன்ற பஞ்ச பாண்டவர் சிலைகளும் உள்ளன.

சோமாஸ்கந்தர், மாரி அம்மன், ஒசூர் அம்மன், முருகன், நர்த்தன வினாயகர் சிலைகள் உள்ளன.

உத்தம சோழன் காலம் முதல் கருவறையில் போக சக்தி அம்மன் சிலைகளை வைக்கும் பழக்கம் இருந்து வருகிறது. கழுக்குன்றக் கோயிலிலும் கருவறையில் பழமையான போக சக்தி அம்மன் சிலை உள்ளது. இந்த சிலை வலது கையில் மலரையும், இடக்கையில் டோல ஹஸ்த முத்திரையையும் காட்டி நிற்கிறது. இக்கோயிலிலுள்ள செப்புத் திருமேனிகளிலேயே மிக அழகிய போக சக்தி அம்மன் திருமேனி கி.பி. 10, 11-ம் நூற்றாண்டைச் சார்ந்தது. சோழ மன்னர்களாலும் பாண்டிய மன்னர்களாலும் விஜய நகர மன்னர்களாலும் ஏராளமான செப்புத் திருமேனிகள் தரப் பட்டுள்ளன. ஸ்ரீபாதம் ஒன்றும் செம்பினால் செய்யப்பட்டதொன்று இக்கோயிலில் உள்ளது.

திருக்கழுக்குன்றக் கோயிலில் மொத்தம் நூற்று முப்பத்து நான்கு செப்பு திருமேனிகள் உள்ளன. அனைத்தும் தமிழகத் தொல்லியல் துறையினரால் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கோயிலுள்ள திருமேனிகளில் (செப்பு) சில கழுக்குன்றக் கோயிலிலும் சில ருத்ர கோடி கோயிலிலும் உள்ளன.

ஓவியங்கள்

ஓவியங்கள்:

திருக்கழுக்குன்றக் கோயிலில் சிறந்த ஓவியங்கள் உள்ளன. கிழக்கு கோபுரத்தின் அருகில் தலைசிறந்த ஓவியங்கள் உள்ளன. கருவறையின் முன்னுள்ள மஹாமண்டபம், அர்த்த மண்டபம் போன்றவற்றில் 18ம் நூற்றாண்டு ஓவியங்கள் உள்ளன. மேற்கு கோபுரத்தின் விதானம் மேல் அழகான ஓவியங்கள் உள்ளன. இவ்விரு ஓவியங்களும் தற்போது கண்டுபிடிக்கப்பட்டு பாது காக்கப்பட்டு வருகின்றன. முக மண்டபத்திலுள்ள ஓவியங்களை திரு. காசிநாதன், தொல்லியல் துறை முன்னாள் இயக்குநர் கண்டு பிடித்து Sunday Standard-ல் ஒரு கட்டுரை எழுதியுள்ளார்.

முகமண்டபத்தின் மேல் 18ம் நூற்றாண்டு அழகான ஓவியங் கள் உள்ளன. ஒரு யானையின் மீது அமர்ந்துள்ள வினாயகர் ஓவியம் உள்ளது. வினாயகர் துதிக்கையுடன் கையில் அங்குசத் துடன் அமர்ந்துள்ளார். சுப்ரமணியர் மயில் மீது அமர்ந்து அருகில் தேவசேனாவுடன் காணப்படுகின்றார். சிவன் திரிபுராந்தகராக முப்புரம் எரித்த காட்சி காட்டப்பட்டுள்ளது. மக்களின் அறியாமை யாகிய அபஸ்மாரன் மீது நடனமாடும் நடராஜர் காணப்படுகிறார். ஒரு புறத்தில் சிவன் ஊர்த்தவதாண்டவராகக் காட்டப்பட்டுள் ளார். வினாயகர் ஓவியம் முன் மண்டபத்தின் தென் புறமுள்ள தூணின் மேல் உள்ளது. அவருக்கு நான்கு கரங்கள் உள்ளன. அவற்றில் அங்குசம், பாசம், எழுத்தாணி, கொழுக்கட்டை போன்றவை உள்ளன. இடப்புறம் பூதகணங்கள் தன் தலைமீது பூசணிக்காய், பலகாரங்கள், பழங்கள் போன்றவற்றை தன் இறைவனுக்கு அளிப்பதெற்கென்று எடுத்துச் செல்கின்றன. இருபுறமும் பூக்கள், பழங்கள் சிதறிக் கிடக்கின்றன. பூதங்கள் நிறைய அணிகலன்கள் அணிந்துள்ளன. கழுத்தில் மாலை, முழங் கையில் ஓர் அணி, கைகளில் வளையல்கள், மார்பில் பதக்கம் போன்றவை உள்ளன. இரு பூதங்களின் கைகளும் ஒன்றாக சேர்த்து காட்டப்பட்டுள்ளன. வலப்புறமுள்ள பூதம் ஒரு சங்கை ஊதிக் கொண்டிருக்கிறது. ஆங்காங்கே இரைக்கப்பட்டிருக்கும் மலர்கள் இறைவனுக்கு பூமாரி பொழிவது போல உள்ளன. ஒரு புறம்

தென்னை மரம் காணப்படுகிறது. பூதங்கள் அணிந்திருக்கும் தோடு அழகாக உள்ளது.

மேற்புறம் சிவபெருமான் திரிபுராந்தகராகக் காட்டப்பட் டுள்ளார். பார்வதி, விஷ்ணு ஆகியோர் இடப்புறம் நிற்க நந்தி, பிரம்மனும் வலப்புறம் உள்ளனர். விஷ்ணுவின் கையில் சங்கு, சக்கரம் போன்றவை உள்ளன. பிரம்மன் நான்முகனாகக் காட்டப் பட்டுள்ளார் அவர் கையில் கெண்டி, அங்குசம் போன்றவை உள்ளன.

வடபுறத் தூணின் மேல் சுப்ரமணியர் தேவசேனாவுடன் உள்ளார். முருகன் மயில் மீது அமர்ந்துள்ளார். அவரது கைகளில் அம்பு, வில் போன்றவைகள் உள்ளன. மற்ற இரு கைகளில் வஜ்ரம், சக்தி போன்றவை உள்ளன. தேவசேனாவின் கைகளில் மலர்கள் உள்ளன.

முகமண்டபத்திலுள்ள ஓவியங்களும் அழகாக உள்ளன. ஆனால் இதிலுள்ள ஓவியங்கள் முற்றுப் பெறவில்லை. இறை வனின் களி நடனத்தை வரையத் தொடங்கிய ஓவியம் ஆரம் பிக்கப்பட்டு முடிக்கப்படவில்லை. வடப்புறமுள்ள ஓவியம் சிவனின் நடனத்தை விளக்குகிறது. கிழக்குப் புறத்திலுள்ள ஓவியம் தேவியின் அழகான நடனத்தை விளக்குகின்றது. இவ்வோவியம் பிற்கால நாயக்க மன்னர்களின் கலைத் திறமையை படம் பிடித்துக் காட்டுகின்றது. தேவியின் அருகில் பூதகணமும், ஒரு பெண்ணின் உருவமும் நடனமாடுவது போல உள்ளன. இவைகளும் தேவி யின் நடனத்திற்கு ஏற்றவாறு ஆடுவது போல உள்ளன.

முதல் மாதிரி ஓவியங்கள் தெற்கு தூணின் மேலுள்ளன. ஆங்கே ஈசன் ஊர்த்தவதாண்டவராகக காட்டப்பட்டுள்ளார். வலப்புறத்தில் விஷ்ணுவும் இடப்புறத்தில் பிரம்மனும் காட்டப் பட்டுள்ளனர். அவர்கள் அனைவரும் தாங்கள் கைகளில் வழக்க மாக வைத்துக் கொண்டிருக்கும் ஆயுதங்களை வைத்துள்ளனர். விஷ்ணு கையில் சங்கு, சக்கரம் போன்றவைகளும் பிரம்மன் அக்கமாலை, கெண்டி போன்றவைகளும் கொண்டுள்ளனர். தேவர்கள் வீணை வாசிப்பது போன்று காணப்படுகின்றது.

இந்த ஓவியங்கள் முழுதும் மிக அழகாக உள்ளன. அங்குள்ள ஓவியங்கள் மன்னனின் ஓவியகலைப் பற்றினை புலப்படுத்து கின்றன.

நிறங்கள் வெகு அழகாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இங்கு கருப்பு, மஞ்சள், மெல்லிய சிவப்பு அல்லது காவி, வெள்ளை போன்ற நிறங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. நகைகளில் பல முத்து நகைகள் வெண்மை நிறத்தில் வரையப்பட்டுள்ளன. கீழுள்ள ஆடைகள் மஞ்சள் நிறத்தில் போடப்பட்டுள்ளன. மொத்தத்தில் இந்த ஓவியத்தில் விஜய நகர மன்னர்களின் பாணித் தெரிகின்றது.

ஓவியங்கள் வரையப்பட்டுள்ள இம்மண்டபத்தின் ஒரு தூணில்' தம்பி எல்லப்பமுதலியார் சேவை' என்ற கல்வெட்டு அம்மன்னனின் உருவத்துடன் உள்ளது. எழுத்தமைதியையும் கலைப்பாணியையும் பார்க்கையில் இம்மண்டபம் 18ம் நூற்றாண் டில் கட்டப்பட்டது எனத் தெரிகிறது. இவ்வோவியங்களும் அதே காலத்தில வரையப்பட்டிருக்க வேண்டும்.

மேற்கு கோபுரத்தின் விதானத்தின் மேல் அழகான ஓவி யங்கள் உள்ளன. அவ்வோவியங்கள் தற்பொழுதுதான் கண்டு பிடிக்கப்பட்டன. இந்த ஓவியங்கள் கவனிக்கப்படாமல் இருந்த தால் அழுக்கு படிந்து அதன் அழகே பெரிதளவு குலைந்துவிட்டது. இந்த ஓவியம் சுமார் இருநூறு வருடங்களுக்கு முந்தையது. ஆனால் எந்த மன்னனால் வரையப்பட்டது என்பதைக் குறிக்க எந்தவித ஆதாரமும் இல்லை. மேற்கு கோபுரத்தில் ஒரு அரசர் உருவம் உள்ளது. அம்மன்னன் காலத்திலேயே இந்த ஓவியங்கள் தீட்டப் பட்டிருக்கலாம்.

விதானத்தின் நடுவில் நாற்புறமும் அழகான அன்னவரி உள்ளது. வெள்ளை அன்னம் நீலநிற பின்னணியில் உள்ளது. அந்த அன்னங்கள் அழகாக ஒன்று ஒன்றாக செல்லுவது மிக அழகாகக் காட்டப்பட்டுள்ளது. சில அன்னங்கள் ஒன்றுடன் ஒன்று ஏறிச் செல்கிறது. சில அன்னங்களுக்கு யாளி முகமும் சில அன்னங்களுக்கு மயில் முகமும் உள்ளது. சில அன்னங்கள் நடன மாடுவது அழகாகக் காட்டப்பட்டுள்ளது.

கிழக்குப் பகுதியில் அரசன், அரசி உருவம் உள்ளது. அரசி யின் பட்டாடை மிக அழகாக காட்டப்பட்டுள்ளது. அரசியின் பட்டாடையும் மேலுள்ள அங்கவஸ்திரமும் மிக அழகாக உள்ளன. அரசன் நெற்றியில் திருநீறு அணிந்துள்ளனர். அரசனும் அரசியும் மிக அழகான கிரீடம் அணிந்துள்ளனர். அருகில் இரு அமைச்சர்கள் நின்ற வண்ணம் உள்ளனர். அவர்கள் வைணவ சின்னமான

திருமண்ணும் நாமமும் நெற்றியில் கொண்டுள்ளனர். அமைச்சர்கள் கால்வரை வேட்டியும் இடையில் ஒரு சிறிய துணியும் அணிந்து உள்ளனர். அவர்கள் அனைவரும் மலை மீதுள்ள வேதகிரீசர் இறைவனை கண்டு மகிழ்வது போல காட்டப்பட்டுள்ளனர்.

மலை மீது கழுகுகள் வந்து உணவு உண்ணும் காட்சி வரையப்பட்டுள்ளது. அந்த கழுகுகளுக்கு பட்டர் உணவு அளிக் கும் காட்சியும் அந்த பட்டர் அரசனுக்கு பரிவட்டம் அளிக்கும் காட்சியும் மிக அழகாக வரையப்பட்டுள்ளது. கழுகுகள் வெண்மை நிறத்திலும் அரசனது உடைகள் மெல்லிய சிவப்பு நிறத்திலும் வரையப்பட்டுள்ளன. தெற்குப்புறத்தில் மீனாட்சியின் திருக் கல்யாணம் வரையப்பட்டுள்ளது. சிவன் கிழக்குப்புறத்திலும் உமை மேற்குப்புறத்திலும் உள்ளனர். நடுவில் அரசாணிக்கால் நடப்பட்டுள்ளது. அருகில் பிரம்மனும் மறுபுறம் விஷ்ணுவும் உள்ளனர். இத்திருக்கல்யாணத்தை முக்கோடி தேவர்களும் பார்த்து வணங்குவது போல காட்டப்பட்டுள்ளனர். கின்னரர்களும் தேவர் களும் இறைவனை வணங்கி மேலே பறந்து வருவது காட்டப் பட்டுள்ளது. அருகில் விஷ்ணு, ஹரிஹரன் நான்முகன் போன்றோர் உள்ளனர். அஷ்டதிக்கு பாலர்கள் அஞ்சலி ஹஸ்தத்தில் காட்டப் பட்டுள்ளனர். நான்முகன் வெண்மை நிறத்திலும் விஷ்ணு நீலநிறத்திலும் ஈசன் மெல்லிய சிவப்பு நிறத்திலும் காட்டப் பட்டுள்ளனர். இவ்வோவியம் வெண்மை பின்னணியில் மெல்லிய காவி நிறத்தில் வரையப்பட்டுள்ளது. அந்த ஓவியத்தில் தும்புரு வாசிக்கும் நாரதரும் மற்றும் சில தேவர் ஓவியங்களும் உள்ளன. மேற்குப்புறத்தில் ரதி, மன்மதன் சச்சரவு ஓவியமாகத் தீட்டப் பட்டுள்ளது. அது தவிர ஒரு ஆநிரைக் கூட்டம் ஓவியமாக உள்ளது. ஆடுகள், மாடுகள், தேள் போன்றவை உள்ளன. யானை, மயில் போன்றவை இயற்கைச் சூழ்நிலையில் உலவுவது போன்ற ஓவியம் உள்ளது.

வடப்புறத்தில் கஜலக்ஷ்மியின் உருவம் உள்ளது. இருபுறமும் யானைகள் லக்ஷ்மியின் தலையில் நீர் ஊற்றுவது போன்ற ஓவியம் உள்ளது. அருகில் ஐந்து தலையுடைய மாஹேஸ்வரன், பத்து கைகளை கொண்டுள்ளார். கஜலக்ஷ்மி தாமரை மீது அமர்ந்துள்ளார். கஜலக்ஷ்மி வெண்மை உடையை அணிந்துள்ளாள். தாமரையும் வெண்மை நிறத்திலுள்ளது.இந்த ஓவியத்தில் அதிகமாக பயன் படுத்தப்பட்ட நிறங்கள் காவி, வெண்மை, நீலம் போன்றவை

மேற்கூறப்பட்ட ஓவியம் எந்த காலத்தைச் சார்ந்தது என தெளிவாகத் தெரியவில்லை. கோயிலின் முன் மண்டப ஓவியமும் இந்த ஓவியமும் ஒரே காலத்தைச் சார்ந்ததாகத் தெரியவில்லை. இந்த ஓவிய அமைதியைப் பார்க்கையில் விஜயநகர மன்னர் காலத்தில் வரையப்பட்டவையோ என்ற ஐயம் தோன்றுகிறது. இந்த ஓவியம் அமைந்துள்ள கோபுரம் 18ம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. எனவே ஓவியங்களும் அதன் பின்னரே வரையப் பட்டிருக்க வேண்டும்.

சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையம் ★ ஸ்ரீராமர் சித்திரைச் சென்னை-5. -4 SEP 2012

உற்சவங்கள்

உற்சவங்கள்

திருக்கழுக்குன்றக் கோயிலில் வருடந்தோறும் உற்சவங் கள் நடந்த வண்ணம் இருக்கின்றன. இந்த உற்சவங்களைப் பற்றி ஓலைச் சுவடிகளும் கல்வெட்டுகளும் பல முக்கியமான கருத்துக் களை நமக்கு விளக்குகின்றன. வருடந்தோறும் நடக்கும் உற்சவங் களைப் பற்றி ஈண்டு காண்போம்.

கழுக்குன்றக் கோயிலில் இறைவனுக்குத் தனியாகவும் இறை விக்கு தனியாகவும் உற்சவங்கள் நடைபெறுகின்றன. இறைவனுக்கு நடைபெறும் உற்சவங்கள் அனைத்தும் தேசவிடங்கதேவர் எனப் படும் சோமாஸ்கந்தருக்கும் இறைவிக்கும் நடைபெறுவன. திரிபுர சுந்தரி அம்மனுக்கும் நடைபெறுகின்றன.உற்சவம் ஆரம்பிக்கும் முன் எந்த கடவுளுக்கு உற்சவம் நடக்கின்றதோ அக்கோயிலின் முன் கொடியேறும். அக்கொடியில் 'அஷ்ட மங்களம்' என சமஸ் கிருதத்தில் எழுதப்பட்டிருக்கும். கொடியேறிய பின் ஊரிலிருந்து நீண்ட பயணம் எடுக்க மாட்டார்கள். கொடியேறிய நாள் ஊரிலிருந் தால் கொடி இறங்கும் நாளன்றும் ஊரில் இருப்பர். கொடியேறிய நாட்களில் ஊரில் திருமணம் நிகழ்த்த மாட்டார்கள்.

சித்திரை மாதம் மலை மேலுள்ள இறைவனுக்கு உற்சவம் நடக்கும் இது பத்து நாட்கள் நடக்கும் . இது சித்ரா பௌர்ணமி உற்சவம் எனப்படும்.

முதல் நாள் வினாயகர் உற்சவம் அதன்பின் துவஜாரோஹணம் அன்று தான் உற்சவத்தின் கொடியேறும்.

இரண்டாம் நாள் பூத வாகனத்தில் இறைவன் காட்சி அளிப் பார். மூன்றாம் திருநாள் அதிகார நந்தி மீது இறைவன் பவனி வருவார். நான்காம் நாள் நாக வாகனத்தில் உலாவருவார். ஐந்தாம் நாள் ரிஷபம், ஆறாம்நாள் யானை வாகனம் போன்றவற்றில் ஊர்வலம் வருவார். ஏழாம் நாள் ரதத்தில் ஊர்வலம் வருவார். பிள்ளையார், இறைவன், இறைவி, முருகன், சண்டி ஆகியோர் தனித்தனி இரதங்களில் வருவர். எட்டாம் நாள் குதிரையிலும்

ஒன்பதாம் நாள் சந்திவிருத்தம் பத்தாம்நாள் இராவண வாகனத்தில் இறைவன் ஊரை வலம் வருவார். பதினொன்றாம் நாள் அனுக்ரஹ உற்சவம். இறைவனும்இறைவியும் ரிஷப வாகனத்தில் உலா வருவர்

இந்த உற்சவம் தவிர சித்திரை சதய நட்சத்திரத்தில் அப்பர் சுவாமிக்குத் திருவிழா. அன்று அப்பர் சுவாமிக்கு திருமுழுக்கு நடைபெறும். வைகாசிமாதம் மூல நக்ஷத்திரத்தில் திருஞான சம்பந்தருக்கு உற்சவம் நடைபெறும். ஆனிமாதம் மக நட்சத்திரத்தில் மாணிக்கவாசகருக்கு உற்சவம். அதேமாதம் மலை அடிவாரத்தினின்று திருப்படி விழா நடைபெறும். தேவார, திருவாசகங்களைப் பாடிக்கொண்டு மலை மீது படியேறுவர். இவ்விழா படியேற்று விழா எனப்படும். திருமுறைப் பேரவையினால் தேவார, திருவாசகப் பாடல்களைப் பற்றி ஆராய்ச்சி நடைபெறும். யானை மேல் திருமறைகளை வைத்து மலையை வலம் வருவர்.

ஆடிமாதம் திரிபுரசுந்தரி அம்மனுக்கு மட்டும் உற்சவம் நடைபெறும். அப்போதும் இறைவியின் கோயிலின் முன் கொடியேறும். கொடி ஏறியபின் ஊரைவிட்டு மக்கள் வெளியேற மாட்டார்கள். இதற்கு கொடித்தடை என்பர். இறைவனைப் போன்ற இறைவியும்பலவித வாகனங்களில் வலம் வருவார். பதினொரு நாட்கள் உற்சவம் நடைபெறும். பதினொறாம் நாள் ஆடி உத்திரத்தன்று இரவு திருக்கல்யாணம் நடைபெறும். கடைசி நாளன்று பஞ்சமூர்த்தி ரிஷப வாகனத்தில் ஊர்வலம் வரும். மற்ற நாட்களில் இறைவி மட்டும் ஊர்வலமாக வருவாள். திருக்கல்யாணத்தின் பொழுது இந்து சமயப்படி மாலை மாற்றுதல், வேள்வி வளர்த்தல், தாரை வார்த்துக் கொடுத்தல் போன்ற சடங்குகள் நடைபெறும். திருமணத்தின் பின் இறைவன், இறைவி திருமணக் கோலத்தில் வினாயகர், சுப்ரமணியர், சண்டி போன்றோருடன் பஞ்ச மூர்த்தியாக வலம் வருவார். இறைவனது மணநாள் ஊரெங்கும் கோலாகலமாகக் கொண்டாடப்படும். திருமணம் மதுரைக் கோயிலில் நடைபெறும் திருமணம் போன்று நடைபெறும். கோயிலில் கல்யாணத் தினத்தன்று ஊரில் எல்லோரும் புத்தாடை உடுத்து தன் வீட்டு சொந்த நிகழ்ச்சிப் போல கொண்டாடுவர். அன்று அம்மனுக்கு முழு அபிஷேகம் நடைபெறும். வருடத்தில் மூன்று

முறை இறைவிக்கு முழு அபிஷேகம் உண்டு. நவாரத்திரி நவமி, ஆடி உத்திரம், பங்குனி உத்திரம் போன்ற மூன்று நாட்களிலே அம்மனுக்கு முழு உடலிலும் சந்தன அபிஷேகம் நடைபெறும். மற்ற எல்லா நாட்களில் பாதத்துக்கு மட்டும் அபிஷேகம் உண்டு பங்குனி உத்திரத்தின்போதும் இறைவன் இறைவிக்கு திருக் கல்யாண உற்சவம் உண்டு.

ஆடி மாதம் பூர நட்சத்திர தினத்தில் சுந்தரமூர்த்தி உற்சவம். அவர் தோழர் செரமான் பெருமாள் நாயனாருக்கும் ஏக காலத்தில் உற்சவம். இந்த உற்சவத்தை சிவாச்சாரியார் குலத்தைச் சேர்ந்த குருக்கள் உபயமாக செய்கின்றனர்.

ஆவணி மாதம் மூலம் நட்சத்திர தினத்தில் மலை மீதுள்ள வேதகிரீஸ்வரர்க்கு உற்சவம். இறைவன் பிட்டுக்கு மண் சுமந்த படலம் விழாவாக நடைபெறுகிறது. இறைவனை ஆமை மண்டபத்தில் வைத்து அபிஷேகம் உற்சவமும் செய்வர். இங்கு வேதகிரிக்குப் பதிலாக தாழக் கோயிலிலுள்ள சோமாஸ்கந்தருக்கே எல்லா உற்சவங்களும் நடைபெறும். புரட்டாசி மாதம் நவராத்திரி விழா இக்கோயிலில் மிக சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. அம்மனுக்கு லட்சம் அர்ச்சனை தினமும் கோலாகலமாக நடைபெறும். இறைவிக்கு வெவ்வேறு விதமான அலங்காரங்கள் செய்யப்பட்டு வலம் வருவார். ஆதிபராசக்தி, மகிஷாசுரமர்த்தினி, ஊஞ்சல் சயனம், புத்தகத்துடன், வீணையுடன் சரஸ்வதி போன்று பலவிதமாக அலங்காரங்கள் மிக்க எழிலுடன் செய்யப்படும். பத்தாம் நாள் விஜயதசமியன்று பார்வேட்டைநடைபெறும் அம்மன் நால்வர் சன்னதிக்கு அருகில் சென்று மகிஷாசுரனை சம்ஹாரம் செய்வது போன்று வன்னி மரத்தை வெட்டி விட்டு திரும்பி வருவார்.

ஐப்பசி மாதம் தீபாவளியும் இக்கோயிலில் கொண்டாடப்படுகின்றது. அன்று விடியற் காலம் ஐந்து மணிக்கு இறைவனை எண்ணெய் குளியல் செய்து புது ஆடை உடுத்துவர். அதே மாதம் அஸ்வினி நட்சத்திரத்தில் ஏழைகளுக்கு அன்ன அபிஷேகம் நடைபெறும். அன்று விருந்து சமையல் செய்து அன்னத்தை இறைவன் மீது அபிஷேகம் செய்வர். பின் அதை எடுத்து எல்லோருக்கும் வினியோகம் செய்வர்.

கார்த்திகை மாதம் பரணி தீபம் மிக சிறப்பாக நடைபெறுகிறது. பஞ்சமூர்த்தியாக இறைவன் ரிஷப வாகனத்தில் வலம் வருவார். சொக்கப்பானை கொளுத்தப்படும். மலை மீதும் விளக்கெரிக்கப்படும். ஊரெங்கும் விளக்குகளாக ஊரே ஜோதியாக விளங்கும்.

மார்கழிமாதம் மாணிக்கவாசகர் உற்சவம் நடைபெறும். மார்கழி மாதம் ஆருத்ரா தினத்தில் பத்து நாட்களிலும் விசேடமான பூசை நடைபெறும். ஆருத்ரா தரிசனம் இக்கோயிலில் நடைபெறும் முக்கியமானதொன்று. தை மாதம் பெரும் பொங்கலும், மாட்டுப் பொங்கலும் இங்கு கொண்டாடப்படுகின்றது. தைவெள்ளிக் கிழமையன்று சகஸ்ரநாம அர்ச்சனை நடைபெறும். தைப்பூசத் தினத்தன்று தெப்பல் உற்சவம் உண்டு. கோயிலின் வெளியே அமைந்துள்ள சங்கு குளத்தில் ஒருநாளும் கோயிலில் உள்ள நந்தி தீர்த்தத்தில் ஒரு நாளும் தெப்பல் நடைபெறும். தீர்த்தத்தின் நடுவே உள்ள தெப்பலை (ரதத்தை) மிக அழகாக அலங்கரித்து இறைவன் 'இறைவியை அதில் அமரச் செய்து குளத்தை மூன்று, அல்லது ஐந்து முறை வடமிட்டு இழுத்து வருவர். தெப்பல் உற்சவம் இக் கோயிலில் மிகவும் முக்கியமானதாகும்.

மாசிமாதம் இறைவனுக்கு அபிடேகமும் உற்சவமும் உண்டு. பங்குனி மாதம் உத்திர நாள் இறைவனுக்கு மகா அபிடேகம் சங்குகளால் நடைபெறும்.

இறைவனுக்கு இரு முறை திருக்கல்யாணம் நடைபெறுகின்றது. அதில் பங்குனி மாதம் நடைபெறும் திருவிழாவே பிரமமோற்சவம் என அழைக்கப்பட்டு மிக கோலாகலமாக நடைபெறுகின்றது. அப்போது நடைபெறும் தேர்த் திருவிழா மிக்க சிறப்புடையது. அப்போது தான் மிகப்பெரிய தேர் அலங்காரம் செய்யப்பட்டு அதில் இறைவன், இறைவி அமர்ந்து வலமாக வருவார்.தேரில் இறைவனது அவதார சிற்பங்கள், திருவிளையாடல்கள், லீலைகள் சித்தரிக்கப்பட்டிருக்கும். திருக்கல்யாணம், பின் ரிஷப ஆரூடராக பக்தர்களுக்கு காட்சிளித்தல், அதே மாதத்தில் ஒருநாள் அறுபத்து மூவர் உற்சவம் நடைபெறும். அறுபத்துமூவர் செப்புத் திருமேனிகளும் சகல அலங்காரங்களுடன் வெளிக் கொணரப்பட்டு நால்வர் பேட்டை வரை ஊர்வலமாக எடுத்து செல்லப்படும்.

சங்குதீர்த்த புஷ்கரமேளா:

பனிரெண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை சங்கு பிறக்கும் பொழுது விழா நடைபெறும். இது கும்பகோணம் மஹாமகத்துக்கு இணையாக நடைபெறும். சங்கு வந்தவுடன் அது தட்டின் மேல் வைக்கப்பட்டு ஊரெங்கும் ஊர்வலமாக எடுத்து வரப்படும். பின்கோயிலின் கருவறையில் வைக்கப்பட்டு இந்த சங்கினால் இறைவனுக்கு அபிஷேகம் நடைபெறும்.பின்னர் 108 சங்குகளினால் நீரெடுத்து இறைவனுக்கு அபிஷேகம் நடைபெறும். பின் இந்த சங்கு மக்களின் பார்வைக்கென்று வைக்கப்படும். சங்கு பிறந்தவுடன் அந்த தீர்த்தத்தில் மூழ்கி எழுந்தால் மக்கள் தம் நோய் நீங்கப் பெறுவர்.

நித்திய பூசைகள்:

இறைவனுக்கு இறைவிக்கும் மூன்று கால பூசைகள் நடைபெறும். இறைவனின் முன்னுள்ள பலி பீடத்தில் பூசை நடைபெற்று பின் நித்திய பூசைகள் தொடங்கும். பலி பீடத்தில் பூசை நடைபெற்ற பின் மழை பெய்யும் என்ற கருத்து நிலவுகிறது. காலை பூசை ஏழரையிலிருந்து எட்டரை மணி வரை நடைபெறும். பின் ஸ்தபன பூஜை அல்லது கலச பூசை நடைபெறும். தினமும் ஹோமம் வளர்த்து கலசம் வைத்து கலசப் பூசை நடைபெறும். அந்த நீரை லிங்கத்தின் மீது தெளித்து அபிடேகம் செய்வர். உச்சி கால பூசை காலை பதினொன்றரை மணிமுதல் பனிரெண்டரை வரை நடைபெறும். இது துவார பூஜை எனப்படும். அப்போது இறைவனுக்கு முழு அபிடேகம் நடைபெறும். சாயரட்சை மாலை நாலரையிலிருந்து ஆறரை வரை நடைபெறும்.இது பிரதோஷ காலபூசைஎனப்படும். அப்போது இறைவனுக்கு அபிஷேகமும் நைவேத்தியமும் நடைபெறும். பின்னர் அர்த்த ஜாம பூசை ஒன்பது மணிக்கு மேல் நடைபெறும். பின் கோயில் மூடப்படும். இதேபோன்ற பூசை எல்லா இறைவனுக்கும் நடைபெறும். பக்தவத்சலர் சுவாமிக்கென்று தனிபட்ட பூசை இல்லை. எல்லா இறைவனுக்கும் நடைபெறுவது போன்று நடைபெறுகின்றது. மலை மீதுள்ள வேதகிரீசருக்கும் தாழக்கோவிலிலுள்ள திரிபுர சுந்தரிக்கும் விசேடமான பூசை நடைபெறுகின்றது.

நிவந்தம் :

தினமும் இறைவனுக்கு நாலு கால பூசைக்கும் இரண்டு படி அரிசி நிவந்தம் செய்யப்படுகின்றது.

ஓலைச்சுவடிகள்

ஓலைச்சுவடிகள்:

திருக்கழுக்குன்றக் கோயிலைப் பற்றி ஏராளமான ஓலைச்சுவடிகள் உள்ளன. கர்னல் மெக்கனசி திரட்டியுள்ள ஓலைச்சுவடிகளின் வரிசையில் திருக்கழுக்குன்ற ஓலைச்சுவடிகளும் உள்ளன. அவைகளில் சில கல்வெட்டுகளும் இடம் பெற்றுள்ளன. அவை இன்றும் சென்னை அரசினர் கீழ்திசை சுவடிகள் நூலகத்தில் (Oriental Manuscripts library) உள்ளன. அவைகளில் பல அச்சேறாத நிலையில் ஓலைச்சுவடிகளாகவும் கையில் எழுதப்பட்ட பிரதிகளாயும் உள்ளன. கல்வெட்டுகளைப் போன்றே இந்த சுவடிகள் ஏராளமான விவரங்களை நமக்குத் தெரிவிக்கின்றன.

ஓலைச்சுவடிகள் அனைத்தும் இலக்கணமாக எழுதப்படாமல் பேச்சு நடையிலேயே எழுதப்பட்டுள்ளன. 'நாம் கண்டதும் கேட்டதும் அறிஞ்சதும் எழுதி வச்சோம்' என்றும் ஆங்கிலேய வைஸ்ராய்களை 'கும்பினியார்' 'துரை' என்றும் குறிக்கின்றன.

திருக்கழுக்குன்றக் கோயில் பூர்வோத்திரம், பேரம்பல பண்டாரம் வரலாறு, பூர்வராஜாக்கள் வரலாறு, திருக்கழுக்குன்ற கைபீயத்து, கோவில் ஈஸ்த்தான சேர்வை, கோயிலுக்கு விளக்கு உபையம் கொடுத்தோர், கோயிலுக்கு சொந்தமான நில அளவுகள் போன்றவை எழுதி வைக்கப்பட்டுள்ளன. அவை பிழை மலிந்துக் காணப்பட்டாலும் பல முக்கிய குறிப்புகளை நமக்கு உணர்த்துகின்றது.

திருக்கழுக்குன்றக் கோயில் குருக்கள் பூர்வோத்திரம் :

இராசேந்திர சோழன் பிரம்மஹத்தி தோஷம் போவதற்கு எல்லா தலங்களுக்கும் சென்று தரிசனம் பண்ணிக் கொண்டு வந்தார். எல்லா கோயில்களிலும் வெளியே நின்ற பிரம்மஹத்தி அரசன் தோளில் ஏறிக் கொள்ளும். திருக்கழுக்குன்றத்தில் மட்டும் பிரம்மஹத்தி பின்னாலேயே வந்தது, இதனால் மகிழ்ந்த மன்னன் இறைவனின் மேன்மையை உணர்ந்து...... கோத்திர குருக்கள்மாரை கங்கையிலிருந்து கொணர்ந்து கோயிலைப்

பூசை செய்யப் பணித்தான். அவர்களுக்கு பிரம்ம தேயமாக நிலமும் அளித்தான். பின் கிருஷ்ண தேவராயர் ஆள்கையில் குங்கலியப் பண்டாரம் என்பார் கோயிலை நிர்வாகம் செய்தார். பின்னர் பேரம்பலப் பண்டாரம் ஆளத் தொடங்கி கோயிலுக்குத் திருப்பணி செய்தார். கிருஷ்ணராயர் திருப்பணிக்கு ஐம்பது கிராமங்கள் கொடுத்து கோயிலுக்கு ஐந்து கோபுரங்கள், இரதங்கள் அளித்தார். பின்னர் சிதம்பரப் பண்டாரம், நமச்சிவாயப் பண்டாரம் போன்றோர் பரிபாலனம் செய்தனர். பின்னர் ஆண்ட முகம்மதியர்கள் சுவாமி விக்ரஹத்தைத் திருட அப்பேது கோயில் வழிபாடு சிறப்பாக இல்லை. அப்போது குருக்கள் தங்கள் வீட்டிலேயே வைத்து வழிபாடு செய்தனர். ஆங்கிலேயர் ஆட்சியின்கீழ் வந்த பின்னர் வழிபாடுகள் குறைவின்றி நடந்தன.

மற்றொரு ஓலைச் சுவடியில் சுரகுருராசா என்பானே திருமலைக் கோயில், பக்ஷிபாறை, பிள்ளையார் கோயில், கணநாதர் எனக் கூறப்படுகிறது. இதில் கூறப்பட்டுள்ள சரகுரு என்ற மன்னனே கழுகாசல பதிகம் என்ற நூலின் நாயகன். இவனது ஆட்சியாண்டு தெளிவாகத் தெரியவில்லை. எனினும் இவன் பிற்காலத்தில் மாமல்லபுரத்தை சிற்றரசனாக ஆண்டிருக்கலாம். இவன் கோயிலுக்கு மிக அதிகமான அளவில் திருப்பணிகள் செய்ததாக அவ்வோலைச் சுவடிகள் கூறுகின்றன. திருக்கழுக்குன்ற கோயில் பூர்வோத்திரம் என்றே மூன்று ஓலைச் சுவடிகள் உள்ளன.

திருக்கழுக்குன்ற பண்டைய மன்னர் வரலாறு :

திருக்கழுக்குன்றத்தை ஆண்ட பழைய மன்னர்கள் பெயர்கள் அனைத்தும் இச்சுவடியில் எழுதப்பட்டுள்ளன. பழங்காலந்தொட்டு 15, 16 நூற்றாண்டுகளில் ஆட்சிபுரிந்த மன்னர் பெயர்கள் உள்ளன. இதில் சோழ மன்னர்களும் விஜய நகர மன்னர்களும் குறிக்கப்பட்டுள்ளனர். முன்னர் உள்ள மன்னர்கள் பெயர் புராணங்களைப் பின்பற்றி எழுதப்பட்டுள்ளன. இவ்வரிசையில் அரிச்சந்திரன், நளன், அம்பரீஷன், கார்த்தவீரியன் எனத் தொடங்கி ஸ்ரீரங்கராயர் வரை எழுபத்தொன்று மன்னர்கள் குறிக்கப்பட்டுள்ளனர். இறுதியில் இப்படிப்பட்ட தர்மராசாக்கள் இராச்சியபாரம் பண்ணார்கள் என எழுதியுள்ளது.

திருக்கழுக்குன்றக்கோயில் படித்தனக் கணக்கு :

ஒரு நாளில் இறைவனுக்கு நிவந்தத்துக்கென அளிக்கப் படுவன அனைத்தும் இச்சுவடியில் எழுதப்பட்டுள்ளன. இவை முறையே அரிசி, நெய், மஞ்சள், சந்தனம், கர்ப்பூரம், மிளகு போன்றவைகளைக் குறிக்கும்.

திருக்கழுக்குன்ற வேதகிரீசர் சுவாமிக்கு நடக்கிற ஈஸ்த்துவை:-

இச்சுவடியில் கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள், நந்த வனங்கள், தோப்புக்கள் போன்றவை எழுதப்பட்டுள்ளன. இச் சுவடிகளில் குறிக்கப்பட்டுள்ள பல கிராமங்கள் இன்றும் கோயிலுக் குச் சொந்தமாக உள்ளன.

திருக்கழுக்குன்றக் கோயில் உபைய விளக்கு :

கல்வெட்டில் குறிக்கப்படும் விளக்கு கொடைகளைத் தவிர ஓலைச் சுவடிகளிலும் இம்மாதிரியான பல பெயர்கள் எழுதி வைக்கப்பட்டுள்ளன. கொடுத்த விளக்குகளின் எண்ணிக்கையும் நெய்யின் அளவும் எழுதப்பட்டுள்ளன.

திருக்கழுக்குன்ற பேரம்பலப் பண்டாரம் வரலாறு :

கோயிலில் கழுகுக்கு உணவு அளிப்பவர் பேரம்பலப் பண்டாரம் எனப்படுகிறார். இவர்கள் தங்கள் வரலாற்றை ஓலைச் சுவடிகளில் எழுதி வைத்துள்ளனர். எல்லா பண்டாரங்களின் பெயர் களும் இச்சுவடியில் எழுதி வைக்கப்பட்டுள்ளன. ஒரு பண்டாரத் தின் கனவில் தோன்றி ''கழுக்குன்றத்துக்குப் போ' என கடவுளின் குரல் கேட்டதாகவும் அது முதல் வழிவழியாக அவர்கள் இங்கு வாழ்ந்து வருவதாகவும் எழுதி வைக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு இறையிலியாக நிலமும், பணமும் வழங்கப்பட்டது.

வேதகிரி கோயில் திருப்பணி கிராமங்கள், பேரம்பல பண்டாரம் கிராமங்கள், திருக்கழுக்குன்றக் கோயில் சிப்பந்திகள் சாபிதா, கோயில் கணக்கு வழக்குகள் போன்ற பல ஓலைச்சுவடிகள் உள்ளன. இவைத்தவிர கோயிலிலுள்ள கல்வெட்டுகளில் சில சிலாசாசனம் என்ற பெயரில் எழுதி வைக்கப்பட்டுள்ளன. கல்வெட் டுகளைப் போன்றே ஓலைச்சுவடிகளும் சில முக்கிய கருத்துக்களை

நமக்குத் தெரிவிக்கின்றன எனக் கூறினால் அது மிகையாகாது. கல்வெட்டுகளையும் ஓலைச்சுவடிகளையும் ஒப்பிட்டுப் பார்க்கை யில் நமக்கு எண்ணற்ற உண்மைகள் புலனாகின்றன.

கல்வெட்டுகளிலும் ஓலைச்சுவடிகளிலும் இடம்பெறும் கிராமங்கள் :

கல்வெட்டுகளில் பட்டினக் கூற்றம், மனையிற் கோட்டம், மதுராந்தக சதுர்வேதி மங்கலம், சோழகுலவல்லி சதுர்வேதி மங்கலம், ஒய்மாநாடு, ஆமுர்கோட்டம், செம்பூர் கோட்டம், ஜெயமணிக்க வளநாடு, ராசேந்திர சோழ வளநாடு நித்த வினோதவளநாடு, மாண்டூர் நாடு, களத்தூர் கோட்டம், புலார்கோட்டம் போன்ற நாடுகள் குறிக்கப்பட்டுள்ளன. ஜெயங்கொண்ட சோழ மண்டலம் என குறிக்கின்றன. ஓலைச்சுவடிகள் குறிப்பாக செங்கல்பட்டு மாவட்டம் என்றே குறிக்கின்றன.

தமிழ்நாடு திருக்கோயில்கள் சுவடிகள் நூலகம் மற்றும் ... சென்னை-5.
14 SEP 2012

சமுதாயம்

திருக்கழுக்குன்றம் சமூகவரலாறு

திருக்கழுக்குன்றத்தில் பல்வகைப்பட்ட சமுதாயத்தினரும் வாழ்கின்றனர். எனினும் இவ்வூரில் மிக அதிகமாக வன்னிய சமுதாயத்தினரே வாழ்கின்றனர் இவ்வூர் முழுதும் கோயிலையே சார்ந்துள்ளது. கோயிலின் மிக முக்கியமான பொறுப்புக்களை வன்னிய சமூகத்தினரே மேற்கொண்டுள்ளனர். அவர்களால் பெரிய சத்திரங்கள், பள்ளிகள் போன்றவை நடத்தப்படுகின்றன.

வன்னியர் குலம் :

இவர்கள் தாங்கள் பல்லவ வம்ச வழியிலிருந்து தோன்றியவர்கள் என கூறுகின்றனர். எனவே தான் ஒவ்வொரு மாசி மகத்தின் பொழுதும் பல்லவ விழா கொண்டாடுகின்றனர். இவர்களது வரலாற்றை குறிக்க வன்னியர் புராணம் என்ற நூல் உள்ளது. பல்லவ விழாவின் போது பல்லவ மன்னர்களை பற்றி பெரும் சொற்பொழிவுகள் நடத்துகின்றனர். வன்னியர்கள் பல ஊர்களில் வாழ்கின்றனர். ஒவ்வொரு ஊரிலும் பல பெயர் கொண்டு வழங்குகின்றனர். வன்னிய குல ஷத்ரியர் என்பது குல பொதுப்பெயர். தவிர நாயக்கர், கவுண்டர், படையாச்சி, பிள்ளை, கவுண்டர் என்று ஊருக்கேற்றபடி வெவ்வேறு பெயர்கள் கொண்டுள்ளனர்.

திருக்கழுக்குன்றத்தில் வாழும் வன்னியர்கள் நாயக்கர்கள் எனப்படுகின்றனர். வன்னிய குலத்தோர் தமிழகமெங்கும் பல கோயில்களுக்கும் கொடை கொடுத்துள்ளனர். மாமல்லபுரம் ஆளவந்தார் நாயனார், திருவிடந்தை, மாமல்லபுரம், திருக்கழுக்குன்றம் போன்ற பல ஊர்களிலுள்ள கோயில்களுக்கு ஆயிரம் கண் நிலமும், கிரந்தம் படிக்கவும், கோயிலில் பூஜை செய்யவும் ஏற்பாடு செய்துள்ளனர்.

வன்னியர் பெரும்பாலும் விவசாயிகளே, அவர்கள் சைவ சமயத்தையே பின்பற்றுகின்றனர். சிலர் வைணவ சமயத்தினர்.

T. 7337.

திருமணம் :

பெண்கள் உயர்ந்த மதிப்பு கொடுக்கப்படுகின்றனர். பிள்ளை வீட்டார் பெண் தேடி செல்லுவர். பிள்ளை வீட்டார் வரதட்சிணை பெற்றுக் கொள்ளும் வழக்கமும் சிலரிடத்தில் உண்டு. இரு வீட்டாரும் கலந்து பேசி ஒரு நல்ல நாளில் நிச்சயதார்த்தம் நடத்துவர். பிள்ளை வீட்டார் பரிசப் பணம் கொடுப்பர். ஒரு நாளில் திருமணம் நிச்சயித்து பெண்ணை ஊர் முழுதும்ஊர்வலமாக அழைத்து வருவர். பின் பெண் அழைப்பு நடைபெறும். மறுநாள் காலையில் திருமணம். அப்போது அரசாணிக்கால் நடும் வழக்கம் உண்டு. அந்தணர்கள் ஹோமம் வளர்த்து மந்திரம் ஓத பெரியோர்கள் முன்னிலையில் பெண் கழுத்தில் மங்கல நாண் ஏறும். ஆணின் விரல்களில் மெட்டி அணிவிப்பர். பெண்களை பெரும்பாலும் கன்னிகாதானம் தான் செய்து தருவர். திருமணத்தின்போது மணமக்களுக்கு காப்பு கட்டுவர். பின் சடங்கு நடத்தி காப்பை கழற்றுவர். பெண் வீட்டில் பிள்ளைக்கு விருந்து நடைபெறும். பெண்ணை பின்னர் பிள்ளை வீட்டிற்கு அழைத்து செல்வர். பெண் வீட்டிலிருந்து செல்லும் அனைவருக்கும் விருந்தளித்து மரியாதை செய்து அனுப்புவர்.

கருவுற்ற மகளிருக்கும் பலவிழாக்கள் நடைபெறுகின்றன. ஐந்தாம் மாதம் பூமுடிப்பர். இது தாய் வீட்டில் நடக்கும். ஒன்பதாம் மாதம் பிள்ளை வீட்டில் நடைபெறும். முதல் பிரசவம் தாயின் வீட்டில் தான் நடைபெறும் தாய் வீட்டில் ஏதேனும் திருமணம் நடந்தால் திருமணமான பெண் கட்டாயமாக சீர் அளிக்க வேண்டும். உறவினர்களோடும் சிறப்பாக எப்போதும் தொடர்பு கொள்ள வேண்டும்.

வன்னிய குலத்தோரால் சிறப்பாகக் கொண்டாடப்படும் பண்டிகைகள் தீபாவளி, சிவகார்த்திகை, விநாயகர் சதுர்த்தி, நவராத்திரி, சித்திரை மாத பிறப்பு போன்றவை.

தீபாவளி கழிந்த மறுநாள் கௌரி விரத பூசை மிக சிறப்பாக நடைபெறும். வீட்டில் பிறந்த பெண்கள் அனைவருக்கும் தாய் வீட்டிலிருந்து நோன்பு கயிறும், பலகாரங்களும் அனுப்புவர். கார்த்திகை, சிவ கார்த்திகை, விஷ்ணு கார்த்திகை என இரு நாட்கள் நடைபெறும்.

வன்னிய குலத்தோர் பலரும் விவசாயிகள் ஆதலின் அவர்கள் பொங்கலை வெகு விமரிசையாகக் கொண்டாடுவர். தைமாதம் பொங்கல் சிறப்பாக கொண்டாடப்படுகின்றது. அன்று இறைவனுக்கு முழு அபிடேகம் நடைபெறும். மாட்டுப் பொங் கலும் காணும் பொங்கலும் வெகு முக்கியமாக கொண்டாடுவர். சிலர் ஜல்லிக்கட்டு போன்ற வீர விளையாட்டுக்களை நிகழ்த்தி காட்டுவர். ஆடிமாதம் மாரியம்மனுக்கு கூழ் வார்ப்பது வன்னி யரின் முக்கியமானதொரு கடமையாம். ஆடி ஞாயிறன்று இறை விக்கு கூழ் வார்த்து அதை எல்லா ஏழைகளுக்கும் ஈந்தளிப்பர். வெள்ளிக்கிழமை தோறும் தாங்கள் குலதெய்வத்துக்கு படையல் இட்டு பூசை செய்வர். பங்குனி உத்திரம் மிக முக்கியமான ஒரு விழாவாகும்.

வன்னியரில் பெரும்பாலும் சைவர்களே சிலர் வைணவத் தையும் கடைபிடிப்பர். சைவர்களில் பலர் பூணூல் போட்டுக் கொள்ளும் பழக்கம் உண்டு. சிலர் திருமணத்தின் பொழுதும் பூணூல் போட்டுக் கொள்வர். திருக்கழுக்குன்றத்தில் வாழும் வன்னியரில் பலரும் சைவர்களே .

கோயில் உற்சவங்களில் வன்னியர் பெரும் பங்கேற்பர். சுவாமி ஊர்வலம் வரும்பொழுது இறைவனை தூக்கும் உரிமை படைத்தவர்கள். பிரம்மோற்சவத்தின்போது ஐந்தாம் நாள், ஏழாம் நாள், பத்தாம் நாள் விழா நடைபெறும்.

அடுத்து மிக அதிகமாக உள்ளவர் நாயுடு வகுப்பினர். இவர்களது தாய் மொழி தெலுங்கு. இவர்களது வாழ்க்கை நெறி முறைகளை ஈண்டு காண்போம்.

பெண்ணுக்கு உயர்ந்த மதிப்பு உண்டு. பிள்ளை வீட்டார். பெண்தேடி செல்வர். திருமணம் நடக்கும் முன் ஜாதகம், பெயர் ராசி போன்றவை பார்ப்பர். பெண்ணுக்கு பிள்ளை வீட்டார் நகை போட வேண்டும். பிள்ளை வீட்டார் வரதட்சிணை வாங்குவ தில்லை. பெண்ணை ஊர்வலமாக அழைததுப் போய் பிள்ளை வீட்டில் விவாஹம் நடத்துவர். கல்யாணத்தின்போது அந்தணர் முன்னிலையில் ஹோமம் வளர்த்து பெண்ணின் கழுத்தில் மங்கலநாண் ஏற்றுவர். குழந்தை பிறந்தவுடன் அனைவருக்கும்

இனிப்பு வழங்குவர். பிறந்த நாளின் போது அந்தணர் வந்து பிறந்த நட்சத்திரம் குறித்து பெயர் வைப்பர்.

நாயுடு சமுதாயத்தினரின் முக்கியத் தொழிலும் விவ சாயமே. இவர்கள் நெல், கேழ்வரகு, எண்ணெய் வித்துக்கள், காய்கறிகள் போன்றவை பயிரிடுவர். வருடத்தில் இருமுறை அறுவடைசெய்வர். ஆனி மாதம் விதை விதைப்பர். மழை பெய்த வுடன் நல்ல நாள் தேர்ந்தெடுத்து நிலத்தின் சனி மூலையில் பிள்ளையார் பிடித்து வைத்து அவருக்கு தேங்காய் பழம், பச்சரிசி, கற்பூரம் வைத்து படைப்பர். பின் பச்சரிசி வெல்லம் வினியோகம் செய்வர். ஞாயிற்றுக்கிழமை அல்லது வெள்ளிக்கிழமை விதை விதைப்பர்.

இவர்கள் பொங்கல் விழாவினை முக்கியமாக கொண் டாடுவர். அன்று சூரிய ஒளியில் பொங்கல் வைத்து படைப்பர். மறுநாள் மாட்டுப் பொங்கலன்று மாட்டுக்கொம்புக்கு வண்ணந் தீட்டுவர். பின் மாடுகளை ஊர்வலமாக அழைத்துச் செல்வர். அன்று கலப்பைக்கு பொட்டிட்டு பூஜை செய்வார். ஆடிமாதம் வெள்ளிக் கிழமையன்று மாரியம்மனுக்கு படையல் போடுவர். ஞாயிற்றுக்கிழமையன்று கூழ் வார்த்து எல்லோருக்கும் அளிப்பர். அன்று மதியம் கோழி அல்லது ஆடு பலி கொடுக்கப்படும். இரவு இறைவியை ஊர்வலமாக வெளியில் அழைத்துவருவர். இவர் களுக்கென்று ஒரு தனி மாரியம்மன் கோயிலும் திரௌபதி அம்மன் கோயிலும் உண்டு.

அந்தணர்:

இவ்வூரில் வாழும் அந்தணர் மிக குறைந்த அளவே. இவர்களில் பலர் கோயிலில் பணி புரிகின்றனர். என்று கோயில் கட்டப்பட்டதோ அன்று முதல் இன்று வரை குருக்கள்மார் இக் கோயிலில் பணிபுரிகின்றனர். அவர்கள் அனைவரும் கங்கை கரையிலிருந்து வந்ததாக ஒலைச்சுவடிகள் கூறுகின்றன. குருக்கள் அனைவரும் திருவாலங்காடு, காஞ்சிபுரம், திருக்கழுக்குன்றம் போன்ற ஊர்களில் தான் முதலில் தோன்றினர். இவ்வாறாக திருக் கழுக்குன்றத்தில் தனியாக ஒரு குருக்கள் பரம்பரை இருந்தது.

இவர்கள் பெரும்பாலும் அந்தணர் போன்றே வாழ்க்கை நடத்துகின்றனர். இவர்களது தொழில் கோயிலில் பூசை செய்வதே. திருக்கழுக்குன்ற குருக்கள்மாரே இக்கோயிலில் பூசை செய்யலாம். ஊரே கோத்திரம் போன்று பயன்படுகின்றது. உதாரணமாக திருக் கழுக்குன்ற குருக்கள்மார் வேறு ஊர் குருக்களுடன் மணத் தொடர்பு கொள்ள மாட்டார்கள். திருக்கழுக்குன்ற குருக்கள்மார் தற்போது தமிழகமெங்கும் நிறைந்துள்ளனர். அவர்களுள் சிலர் தற்போது தங்கள் பரம்பரைத் தொழிலை விடுத்து அலுவலகங்களிலும் பணிபுரிகின்றனர். பெரும்பான்மையோர் கோயிலில் பூசை செய்யும் தொழிலையே மேற்கொண்டுள்ளனர்.

குருக்கள் குடும்பத்தில் பிறந்திருந்தாலும் அவர்கள் கோயி லில் குருக்களாக பணி புரிவதற்கு சில குறிப்பிட்ட தகுதிகள் உண்டு. அவர்கள் சைவத்தில் பற்றுடையவராயும் வைதிக அனுஷ் டானத்தில் சிறந்தவராயும் இருத்தல் வேண்டும் வேதம் அறிந்த வராயும் சமஸ்கிருத மொழியின் பால் பற்றுடையவராயும் இருக்க வேண்டும். அவர்களே கோயிலில் குருக்களாக பணிபுரிய தகுதி படைத்தவர்கள். குருக்கள்மார் திருமணம் ஆன பின் தீக்ஷை பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பின்னரே அவர்கள் கோயிலில் பணிபுரிய முடியும். குருக்கள்மார் பழக்க வழக்கங்கள் அனைத்தும் பிராமண சமூகத்தைப் போன்றே உள்ளன. எனினும் பிராமணர்களுடன் மணத் தொடர்புகொள்ள மாட்டார்கள்.

கழுக்குன்றக் கோயிலில் தவறாது பூசை செய்வதே அவர்கள் வேலை. எப்பொழுதாவது கோயில் அருகில் யாரேனும் இறந்து விட்டால் அச்சவம் எடுத்துச் செல்லப்பட்ட பின்னரே கோயிலை திறந்து பூசை நடத்துவர்.

பண்டாரம்:

கோயிலில் விளக்கு பிடிப்போரும் பட்சிக்கு உணவு அளிப் போரும் பண்டாரம் எனப்படுகின்றனர். பட்சிக்கு உணவு அளிப் பவர் பட்சி பண்டாரம் எனப்படுகிறார். இவர் தேசிகர் குலத்தைச் சார்ந்தவர். இவர்களது முழு வரலாற்றை பேரம்பல பண்டாரம் வரலாறு எனும் ஓலைச்சுவடி கூறுகின்றது. இவர்களது பழக்க வழக்கங்கள் வன்னிய குலத்தோரைப் போன்றே உள்ளது.

நாட்டுப் பாடல்கள்

திருக்கழுக்குன்றம் காஞ்சிபுரம் மாவட்டத்துக்கு மிக அருகிலுள்ளது. மேலும் இது கிராமம் என கூற முடியாத அளவுக்கு பெரிய நிலப்பரப்பு உள்ளது. எனவே இங்கு நாட்டுப் பாடல்களும் அதிகம் கிடைக்கவில்லை. மாரியம்மன் திருவிழாவின் பொழுது கூத்துப் பாடல்கள் சில பாடப்படுகின்றன.

பிள்ளையாரே வாரும்
பெருமாளே வாரும்
சிவனாரே வாரும்
சிவனும் பெருமாளும் சேர்ந்து வரவேணும்
முருவன் பெருமாளும்கூடி வரவேணும்
ஆடி வரவேணும்இந்த ஏற்றக்கரை
வந்து எங்களையே காரும்
வாரும் பகவானே கை தொழுதேன் உன்னை
ஆண்டவனே வந்து ஆதரிக்க வேணும்
இந்த ஏத்தக் கரைவந்து எங்கள் மூவரையும் காணும்
மூவரையும் காரும் இந்த முக்காணி மேல்நின்று
முக்காணி மேல நின்னு முக்குப் பண்றை மேல்
முக்கு நின்று கோலுமுறியாத
கோலு முறியாத கொண்டாடி தள்ளாமல்
கொண்டாடி துள்ளாமல் எங்கள் மூவரையும் காரும்

கூத்துப்பாடல்:

கடக கங்கணஞ் ஜொலிக்க கையில் வாளும்
கைதையுங் தண்டாயுதந் தோமரம் பிடித்து
படபடவென மீசையது துடிதுடிக்க
பாங்கான சிங்கப்பல்தகதகவென
அடிமை கொண்ட மந்திர வாதியழைத்த சேதி
அறிந்திடவே ஜாலகண்ணா டியோர
திடங்கொண்ட வேதாள பூதம் அவற்
தீவிரமாய் கொலுநாடி வருகின்றேனே

வேதாளம் வந்து
விண்ணு மண்ணுந் தந்தளிக்க வீரதீர ஆற்பரிக்க
வெண் மலர் மாலைகளாடவே வேதாள பூதம்
வேடிக்கையாய் வந்து மேவிதேன்
பேயிறுளன் காட்டேரி பிரபல பிசாசுகளும்
மாய பொம்மாக்கள் சூழவே வேதாளமும்
மணிசத்தம் ஒளிக்க வாரேனே.....

வேதாளம்ஆடுதலை
குதிகுதித்து கொக்கரித்து குவலயம் நடுநடுங்க
மதமதந்து தோளை தட்டி மண்ணும் விண்ணும் அதிரவே
உதிரக் கண்ணை திறந்து காட்டி ஓட்டமும் நடையுமாய்
அதிவேகமாக பூதம் ஆக்கரி மித்து வருகுதே
தந்தபல் உறுவிலங்க தட்டிக் கையை கொட்டியே

என நீண்டுச் செல்கிறது.

* * *

பொதுச் செய்திகள்

திருக்கழுக்குன்றக் கோயிலில் மற்ற கோயில்களில் நடைபெறுவது போன்றே பல சிறப்புக்கள் உள்ளன. சில முற்காலத்தில் சிறப்புற நடைபெற்று பிற்காலத்தில் வழக்கொழிந்தன. அவற்றை ஈண்டு காண்போம். அவை வேதபாடசாலைகள், தேவதாசி முறை போன்றவற்றை தன்னகத்தேக் கொள்ளும்.

வேதபாடசாலைகள்:

இங்கு மலைமீது வேதங்களாக நான்கு வேதங்களும் இருப்பதாக மக்கள் கருதுகின்றனர். - இம்மலைக்கு வேதப்பொற்றை, வேதகிரி போன்று பல பெயர்கள் உண்டு. எனவே இங்கு வேதங்களுக்கும் வேத பாராயணத்துக்கும் மிக்க மதிப்பு உண்டு. 1940ம் வருடம் வரை இங்கு வேத பாடசாலை இருந்தது. இப்பாடசாலையில் அந்தணர் குலத்தைச் சார்ந்தவர்களே சேர்த்துக் கொள்ளப் படுவர். சுமார் பத்து வயது முதல் பதினைந்து வயது வரை மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டு அவர்கள் யஜுர் வேதம் பாராயணம் செய்தனர். இவர்களுக்கு வேதம் போதிக்க பல வேத வித்துக்கள் இவ்வூரில் இருந்தனர். இவர்களை நிர்வகிக்க ஒரு அதிகாரியும் நியமிக்கப்பட்டிருந்தார். அத்துணை மாண்புடைய வேதபாடசாலை இன்று இல்லை. பாடசாலைநடைபெறும்போது தினமும் கோயிலில் வந்து இறைவன் முன் வேதம் ஓதுவர்.

தேவதாசி முறை:

இக்கோயிலிலும் தேவதாசி முறை இருந்துள்ளது. இதற்கு சான்றாக இன்றும் இவ்வூரில் தேவதாசி தெரு என்றொரு வீதி உள்ளது. 1965 வரை இவ்வூரில் தேவதாசிகள் வாழ்ந்துள்ளனர். பின் அவர்கள் தம் தொழிலை விடுத்து வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ளனர்.

இக்குலத்தில் பிறந்த கல்யாணமாகாத பெண்கள் இக்கோயில் தேவதாசியாக விளங்கினர். எனினும் தஞ்சை கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுவதைப் போல இவ்வூர் கல்வெட்டுகள் இம்மாதர்களைப் பற்றி குறிக்கவில்லை.

பெண்கள் பதினான்கு வயது வந்தவுடன் அவர்கள் வீட்டிலேயே 'ஹோமசாந்தி' செய்வர். பின் அவர்கள் வீட்டில் பெரிய விருந்தளிப்பர். பின்னர் அப்பெண்ணை மேளதாளத்துடன் வலமாக கோயிலினுள் கொணர்வர். கோயிலின் தலைமை குருக்கள் அவளுக்கு பொட்டுகட்ட அன்று முதல் அவள் கோயிலின் உடமைப் பொருளாவாள். அவர்களுக்கென்று தனி லாவணம் Record, உண்டு. அவர்களுக்கு ஆகும் வரவு செலவுகள் கோயிலினால் நிருவகிக்கப்படும். இக்கோயிலில் இது போன்று 1947ல் அறுபது பேர் இருந்தனர். இதை விளக்க தக்க ஆதாரங்கள் நம்பத் தகுந்த வகையில் உள்ளன. அவர்கள் வாழ்ந்தபோது கோயிலில் பூஜை செய்தோர் இன்றும் கோயிலில் உள்ளனர்.

தேவதாசிகளுக்கென்று தனித்தனி கோத்திரங்கள் உண்டு. அவர்கள் ஆயுள் முழுதும் மணம் புரிந்து கொள்ளக் கூடாது. அவர்கள் காலையிலும் மாலையிலும் இறைவன் முன் பாட்டு பாடி நடனம் ஆடுவர். உற்சவங்களின் போதும் இறைவன் வெளியே வலம் வரும் பொழுதும் முன்னே நடனம் ஆடிச் செல்வர். இவர்களில் தினமும் ஆறு பேர் கோயிலில் வந்து நடனம் புரிய வேண்டும். இவ்வாறாக எப்போதும் 30 பேர் இக்கோயிலில் பணி புரிந்தனர்.

இம்மாதர்களின் நடனம் நவராத்திரி பத்து நாட்களின் போதும் மிகச் சிறப்பாக இருக்கும் என கண்டு வியந்தோர் கூறுகின்றார். இவர்கள் காலையில் தீபராதனையின்போது தட்டு நடனமும் பின் குத்து விளக்கு நடனமும் ஆடுவர். தட்டு நடனம் ஐவராலும் குத்து விளக்கு நடனம் ஒருத்தியாளும் ஆடப்படும். பின் சாயரட்சை பூஜை போது அபிநயம் பிடித்து அறுவரும் ஆடுவர். உற்சவத்தின் போது ஒவ்வொரு மாதிரியான நடனம் ஆடுவர். இவர்கள் 1965 வரை பணி புரிந்தனர். பின் அரசாங்கம் இதற்கு தடை உத்தரவு பிறப்பித்தபோது இவர்கள் தங்கள் பணியினின்றும் விலகி வேறு பணிகளை மேற்கொண்டு விட்டனர்.

இவர்கள் நடனம் புரியும் போது உவச்சர் தட்டு முட்டு தாளம் போடுவர். அவர்களும் வழி வழியாக கோயிலுக்குப் பணிபுரிந்து வந்தனர். ஆனால் 1970 முதல் இம்முறையும் நீக்கப்பட்டு விட்டது.

கோயிலில் பணிபுரியும் ஊழியர்:

கோயிலில் பூஜை செய்யும் குருக்கள்மார் தவிர பலர் இக்கோயிலில் பணிபுரிகின்றனர். கோயிலில் விளக்கெரிக்க

'பண்டாரம்' என்றோர் நியமிக்கப்படுகின்றனர். இவர்களது பணி இறைவனுக்கு விளக்கேற்றுவது, இறைவனின் கருவறை சுத்தப் படுத்துவது போன்றவை வழிவழியாக இருந்து வருகின்றது. இவர்களைத் தவிர பக்ஷி பண்டாரம் அல்லது தேசிகர் என்பார் பணிபுரிகின்றனர். இவர் தினமும் கழுகுகளுக்கு உணவு அளிப்பார். தோட்டங்களையும் கோயிலின் கிராமங்களை நிர்வகிக்கவும் பலர் இக்கோயிலில் பணிபுரிகின்றனர். இறைவனது தேவரா திருவாசக திருப்பதிகங்களை ஓதும் ஓதுவாரும், உற்சவங்களின்போது பறையடிக்க உவச்சர்களும் இக்கோயிலில் பணிபுரிகின்றனர். சுமார் முப்பதுக்கும் மேற்பட்ட குருக்கள்மார் இக்கோயிலில் பணிபுரிகின்றனர்.

யாகசாலை:

கோயிலில் அடிக்கடி உற்சவங்கள் நிகழ்வதாலும் 1974 இறைவிக்கு கும்பாபிஷேகம் நடைபெற்றதாலும் இக்கோவிலில் ஒரு பெரிய யாகசாலை உள்ளது. இது நடராஜர் மண்டபத்தின் கிழக்கிலும் கோயிலுக்கு வடகிழக்கிலும் அமைந்துள்ளது.

யாக சாலையுள் இரு மேடைகள் உள்ளன. ஆங்கே பக்கத்துக்கு ஏழு கலசங்கள் வீதம் வைக்கப்பட்டுள்ளன. அக்கலசங்களினுள் நீர் வைக்கப்பட்டிருக்கும். அந்நீர் கும்பாபிஷேகம், உற்சவம் போது பிரதிட்டை செய்ய பயன்படும். சிவன் கோயில் யாகசாலையும் கிராம தேவதை கோயில் யாகசாலையும் ஒரே விதமாய் இருக்க விஷ்ணு கோயில் யாகசாலை வேறுபட்டு இருக்கும்.

கழுக்குன்றக் கோயிலிலுள்ள யாகசாலை சிவன் கோயிலின் இலக்கணத்துப்படி அமைந்துள்ளது. மேடை மேல் கலசத்தினுள் வைக்கப்பட்டுள்ள நீர் எந்த கடவுளுக்கு உற்சவம் விசேடம் நடைபெறுகின்றதோ அவருக்கு பயன்படும்.

பூர நட்சத்திரம் கடைசி நாளும் பத்து நாளும் நீர் வைத்து அதையே இறைவிக்கு அபிஷேகம் செய்வர்.

இறைவன், இறைவி நகைகள் :

கழுக்குன்ற கோயில் இறைவனுக்கும் ஏராளமான சொத்துக்கள் உள்ளன. அவ்வாறு கொடுக்கப்பட்ட கொடைகள் கல்வெட்டுகளிலும் இடம்பெறுகின்றன. ஒரு கல்வெடடில் பள்ளியறை

சுவாமிக்கு கொடுத்த நகை குறிக்கப் பெறுகின்றது. தற்போது இறைவனுக்கு பல மகுடங்கள், கரங்கள், ஆரங்கள், காப்புகள், கால்கள் போன்றவை பல உள்ளன. கற்கள் பதித்த கிரீடங்களும் வெள்ளி கரங்களும் தங்க சங்கிலிகளும் உள்ளன. இறைவிக்கென மகுடங்கள் (கற்பதித்தது) தங்க சங்கிலிகள், மூக்குத்தி, நத்து, வளையல்கள், தண்டை, கற்பதித்த ஸ்ரீ சக்கரம் போன்றவை உள்ளன. இறைவிக்கென்று ரத்ன மகுடங்களும் தோடும், மூக்குத்தியும் உள்ளன.

* * *

மேற்கோள் நூல்கள் :

1. ஊரும் பேரும் - திரு.வி.க.
2. எபிகிராபிகா இண்டிகா - தொகுதிகள், I, III, IX, XIV
3. தென்னிந்திய கல்வெட்டுத் தொகுதிகள், I, V, VII.
4. மாமல்லை - இரா. நாகசாமி
5. Cave temples of the Pallavas - K.R. சீனிவாசன்
6. Journal of Oriental Research - S.R. Balasubramaniam
7. Madras University Journal - S.R. Balasubramaniam
8. Early Chola Art - S.R. Balasubramaniam
9. பிற்கால சோழர் சரித்திரம் - சதாசிவ பண்டாரத்தார்
10. கோப்பெருஞ்சிங்கன் - S.R. Balasubramaniam
11. ARE 1933, 1894, 1911, 1932
12. Forgotten Empire - E.W. Sewell
13. தமிழக கோயிற் கலைகள் - இரா. நாகசாமி, மா. சந்திரமூர்த்தி
14. Architecture of the Pallavas - Minakshi
15. Middle Chola Art - S.R. Balasubramaniam
16. Colas - K.A.N. Sastri
17. History of the Pandyas - K.A.N. Sastri
18. தொண்டை நாடு பாடல் பெற்ற தலங்கள் - பாலூர் கண்ணப்ப முதலியார்
19. திருக்கழுக்குன்ற சங்குதீர்த்த புஷ்கரமேளா - 1968
20. திருக்கழுக்குன்ற தலபுராணம்

நிழற்படங்கள்

SEP 2012
சென்னை-5

நடராசர் - கி.பி. 12-ஆம் நூற்றாண்டு

பள்ளியறை சுவாமியும் அம்மனும்
கி.பி. 14-ஆம் நூற்றாண்டு



சோமாஸ்கந்தர்
கி.பி. 12-ஆம் நூற்றாண்டு



குடைவரைக்கோயில் - பல்லவர் காலம்
(முதலாம் மகேந்திரவர்மன்)



பக்தவச்சலேஸ்வரர் கோயில் மண்டபம்



ஆபரணக் கொட்டடி (முன்புறம்)



ஆபரணக் கொட்டடி (பின்புறம்)



கழுகுகளுக்கு உணவளித்தல் (சிற்பம்)

பன்னிரண்டு ஆண்டுகளுக்கொருமுறை
தோன்றும் சங்குகள்

அரசினர் கீழ்த்திசைச்
சென்னை-5.
4 SEP 2012

T. 7337.

சுவடிகள் நூலகம் மற்றும்
-4 SEP 2012
சென்னை-55.